

பார்த்த
இடத்தில்
எல்லாம்
ரமணிசந்திரன்

# பார்த்த இடத்தில் எல்லாம்

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : பார்த்த இடத்தில் எல்லாம் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : நவம்பர், 2006 |
| இரண்டாம் பதிப்பு | : ஏப்ரல், 2009 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், 2010 |
| நான்காம் பதிப்பு | : நவம்பர், 2012 |
| ஐந்தாம் பதிப்பு | : நவம்பர், 2014 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 X 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 192 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர், ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# பார்த்த
# இடத்தில்
# எல்லாம்



# பார்த்த இடத்தில் எல்லாம்



1

"பாரம்மா சாந்திமதி, உன்னைப் பார்த்தால் எனக்குப் பிடித்திருக்கிறது! ஏன் தெரியுமா? உன் கண்ணில் அலை பாய்தல் இல்லை! இங்கே என்ன இருக்கிறது, அங்கே உள்ளது என்ன தேறும் என்ற கணக்கிடலைக் காணோம்! அதேபோல அந்த அம்மாளை எங்கே தட்டினால், எப்படிப் பிடிக்கலாம் என்கிற அளவிடலையும், இதுவரை நான் காணவில்லை. பெயருக்கேற்றபடி, சாந்தியும் மதியுமாகத்தான் தெரிகிறாய். அதனால், என் கணிப்பில், முதல் பரீட்சையில் உனக்கு வெற்றிதான்.

உனக்கு வேலை கொடுப்பதாக முடிவு செய்துவிட்டேன். ஆனால்..." என்று செல்வநாயகி அம்மாள் விஷயத்தை முடிக்காமல் இழுக்கவும், சாந்திமதி கேள்வியாகப் பெரியவளை நோக்கினாள்.

வெறும் பத்திரிகை விளம்பரம்! டெலிபோனில் விவரம் கேட்டதற்கு, நேரில் வந்து பார்க்கச் சொன்னார்கள்! இதை நம்பி ஊரில் இருந்து கிளம்பி வந்தாயிற்று!

அதுவும், வேலை கிடைத்துவிட்டதாகச் சொல்லியே!

திருமதி செல்வநாயகியைப் பார்க்கும் வரையில், அவளுக்கு உள்ளூர உதைப்புதான்.

ஐம்பத்தைந்து வயதுப் பெண்மணிக்கு உதவியாக இருப்பதற்குப் பார்க்க லட்சணமான சிறு வயதுப் பெண்தான் வேண்டும் என்று விளம்பரம் கொடுத்தவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாமே!

வருகிறவளை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், வீட்டில் அதிகாரத்தில் இருக்கும் எவனாவது கூட, அந்த விளம்பரத்தைக் கொடுத்திருக்கலாம்!

ஆனால், அப்படி எவனும் நினைத்திருந்தால், அவனது வாழ்நாளில் மறக்க முடியாத பாடம் ஒன்று அவனுக்குக் கிடைத்திருக்கும்!

நல்ல பாடம் புகட்டிவிட்டு, அவளும் வேறு வேலை தேடப் போயிருப்பாள்!

ஆனால், மெய்யாகவே விளம்பரத்தைக் கொடுத்தது, செல்வநாயகி அம்மாளே என்றதே, சாந்திமதிக்குப் பெருமளவு நிம்மதியை அளித்திருந்தது!

அந்த வீட்டில் வேலைக்காரர்கள் தவிர, எந்த ஆண்மகனையும் காணாதது அடுத்த நிம்மதி! ஆனால் அந்த நிம்மதி எப்போது வேண்டுமானாலும் பறி போகக் கூடும்!

ஏனெனில், மேஜை மீது இருந்த சாம்பல் கிண்ணமே, இது ஆண்கள் இருக்கும், அல்லது வந்து போகும் இடம் என்பதை உறுதிப்படுத்தியதே!

ஆனால், அலங்காரத்துக்காகவும் வைத்திருக்கலாம்! அப்படி இருந்தால் நன்றாக இருக்கும்!

ஆனால், அவளுக்கு ஆண்களைப் பார்க்கப் பிடிக்கவில்லை என்பதற்காக, அவள் வேலை பார்க்கும் வீட்டில் ஆண்களே இருக்கக் கூடாது என்று எதிர்பார்ப்பது நியாயமாகாது.

பார்க்கலாம்!

செல்வநாயகி வேறு, ஏதோ இழுக்கிறாரே!

''சொல்லுங்கள் மேடம்'' என்று பெரியவளை ஊக்கினாள் சாந்திமதி.

''சொல்லுகிறேன்!'' என்று, கைப்பையில் இருந்த சின்ன அளவு புகைப்படம் ஒன்றை எடுத்து அவளிடம் காட்டினாள் செல்வ நாயகி. ''இவன் என் மகன்!''

கஷ்டம்தான்!

ஓர் ஆண்மகன் இருக்கிறான்! அதிலும், இளைஞனாகவும் இருக்கிறான்! மகன் வேறு!

ஆனால், அவளுக்கு ஆண்களைப் பிடிக்கவில்லை என்பதற் காக, செல்வநாயகிக்குப் பிள்ளை இருக்கக்கூடாது என்று எதிர் பார்ப்பதும், ரொம்பவே நியாயமில்லைதான்!

வேண்டுமானால், அம்மாவுக்கும் பிள்ளைக்கும் தகராறு, பேச்சு வார்த்தை அதிகமாகத் தடித்து, முகத்தில் முழிப்பது இல்லை என்று வேண்டுமானால் இருக்கட்டுமே!

சேச்சே! அதுகூட அதிகப்படிதான்!

அவள் ஆசைப்பட்டபடி, தாய் மகனுக்கிடையே சண்டை, சச்சரவு எதுவும் இல்லை என்பது, வீட்டம்மாவின் அடுத்து வந்த பேச்சில் தெளிவாயிற்று!

''என் ஒரே பிள்ளை! என்னிடம் அவனுக்குப் பிரியம் அதிகம்...''

ஆக, ஆத்திரம், வெறுப்புக்கு இடமில்லை! அப்புறம் என்ன பிரச்சினை?

அவளுக்கு ஆண் வாடை ஒவ்வாதது போல, அவனுக்குப் பெண் வாடை பிடிக்காதோ?

சாந்திமதி விழி விரித்து நோக்க, செல்வநாயகி அம்மாள் விளக்கம் சொன்னாள்.

''என் பையனுக்கு என் மீது நம்பிக்கையே கிடையாதும்மா! என் மீது என்றால், என் புத்திசாலித்தனத்தின் மீது! எப்போதும், இந்த வருமானத்தை என்ன செய்கிறாய், அந்த வருமானத்துக்கு முதலீடாக்கு... என்று, என்னிடம் ஒரே தொல்லை! பாரம்மா, இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு தரம், அவகாசம் கிடைத்த போது, இங்கே என்னைப் பார்க்க வருகிறான்! அதை இந்தப் பண விஷயம் பேசி, வீணாக்கலாமா? சரி செய்யட்டும், வீட்டு வாரிசு! அவன் பாராமல், யார் பார்ப்பது என்று கணக்கைக் கொடுத்தாலும், ஒவ்வொரு செலவையும், தோண்டித் துருவுவான். அது கூடாது. அது தேவையில்லை என்று சொல்லிச் சொல்லி, வெறுக்கடித்து விடுவான்! அதனால் என் கணக்கு வழக்குகளை அவனுக்குத் தர மாட்டேன் என்று சொல்லிவிட்டேன்! அதனால்... அவன் வரும் போது நீ அதிகப்படி எச்சரிக்கையோடு நடந்து கொள்ள வேண்டும். அதாவது...'' என்று இழுத்துவிட்டு வேலை தேடி வந்தவளின் முகத்தைப் பார்த்தாள்.

கேள்வியாகப் பார்த்தாளே தவிர, சாந்திமதி, அவசரப்பட்டு எதுவும் கேட்கவோ, சொல்லவோ இல்லை!

ஏதோ சொல்ல விரும்பித் தொடங்கிய இந்தப் பெரியவள், அவசியம் என்றால், எப்படியும் அதைச் சொல்லத்தானே செய்வாள்? அவசியம் இல்லாதது என்றால், அந்த மகன் விஷயத்தில் அவள் அதிகப்படி ஆர்வம் காட்டியது போலத் தோன்றக்கூடும். எதற்கு? தானாக வரட்டும்!

ஊதியம் கொடுக்கப் போகிறவள், அவளாகச் சொல்லாதது எதையும் தானாகக் கேட்டு அறியும் அளவு ஆர்வம் சாந்திமதிக்கே இல்லை! பொதுவாக, எதிலுமே ஆர்வம் தோன்றாத இப்போது, இதை மட்டும் எதற்காகக் கேட்பது?

ஆனால், அவள் எதுவும் கேளாமல் சும்மா இருந்ததிலேயே திருப்தி அடைந்தவள் போன்று, தொண்டையைக் கனைத்து, குரலை இறக்கி, பெரிய முஸ்தீபுகளுடன், செல்வநாயகி சொல்லத் தொடங்கினாள்.

"என் பையன் இருக்கிறானே, ரொம்பக் கெட்டிக்காரன்! என்னிடம் கணக்குக் கேட்டால் என்னோடு பிரச்சினை வருகிறது, அல்லவா? அதனால், பையன் இப்போது, என் செயலாளர்களிடம் கேட்டு, என் வரவு செலவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளத் தொடங்கி இருக்கிறான்! அதட்டி, உருட்டி, சிரித்து மயக்கி... எப்படியாவது காரியத்தை நடத்தி விடுவான்! விஷயத்தைத் தெரிந்து கொண்டு, வேறு மாதிரி வேலை செய்து விடுகிறான். எனக்கு, அது அடியோடு பிடிக்கவில்லை! இதன் காரணமாக, இந்த ஆண்டில் இதுவரை மூன்று செயலாளர்களை மாற்றியிருக்கிறேன்! நீ எப்படி என்று, சற்றுப் பொறுத்திருந்து பார்த்து, அதன்பின் வேலையைக் காயமாக்குவது பற்றி முடிவு செய்யலாம் என்பது, என் திட்டம்!" என்றாள், சற்றே சந்தேகம் கலந்த குரலில்!

"சரி!" என்றாள் சாந்திமதி சுருக்கமாக!

சற்றுத் திகைத்து, "வெறுமனே சரி என்றால்... இப்படிச் சொன்னேன் என்று... அதாவது உன்னை நம்பாமல் இருப்பதாக, உனக்குக் கோபமா?" என்று கேட்டாள் பெரியவள். "என் பிள்ளை அப்படிப்பட்டவன், சாந்திமதி! கொம்பேறி மூக்கனைப் போல அதே பிடியில் நிற்பான்! அதனால்தான் இப்படிச் சொல்லும்படி ஆயிற்று!" என்று விளக்கினாள்.

''எனக்குக் கோபமே இல்லை, மேடம்!'' என்றாள் சாந்திமதி. ''எந்த வேலைக்குமே, வேலையில் பயிற்சிக் காலம் என்று ஒன்று உண்டுதானே? நான், அந்த மாதிரிதான் இதை நினைத்திருக்கிறேன்! நீங்களும் சில மாதங்கள் பாருங்கள்! திருப்தியாக இருந்தால், வேலையைக் காயமாக்குவதாகத்தானே சொன்னீர்கள்! கட்டாய மாகக் காயமாக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது! அதனால்தான் சரி என்று மட்டுமாகச் சொன்னேன்!'' என்றாள் சாந்திமதி!

''ஓ! உனக்கு அவ்வளவு உறுதி இருக்கிறதா? சந்தோஷம்! கடவுள் புண்ணியத்தில் அப்படியே நடக்கட்டும்!'' என்று பெரிய வளும் மகிழ்ச்சியோடு முறுவலித்தாள்!

செல்வநாயகி அம்மாளின் குணம், அவளது வீடு, பரந்த நிலப்பரப்பில் வீட்டைச் சுற்றிலும் இருந்த தோட்டம், வீட்டின் பின்புறத்து எல்லையை ஒட்டிச் சென்ற பெரிய வாய்க்கால், சலசல வென்று ஓடிய வாய்க்கால் நீரில் இங்கும் அங்குமாகப் பாய்ந்த சின்னஞ்சிறு வெள்ளி மீன்களின் கூட்டம்... எல்லாமே, சாந்தி மதிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

வேலைதான் மிகவும் குறைவாக இருப்பதாக அவளுக்குத் தோன்றியது!

தினமும் பத்துப் பன்னிரெண்டு கடிதங்கள் வரும்!

அவற்றுள் பாதியேனும், பல்வேறு தருமச் செயல்களுக்கான உதவி கோருவதாக, அல்லது ஏற்கனவே செல்வநாயகி செய்திருந்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதாக இருக்கும்!

இவை போன்ற கடிதங்கள், சில தனிப்பட்டவர்களிடம் இருந் தும் வந்திருந்தன.

ஒன்றிரண்டில் போலித்தனம் தெரிந்தாலும், பலவற்றில் உண்மையான நன்றி தெரிந்தது!

"இதெல்லாம் பையனுக்குப் பிடிக்காது, சாந்தி! வாங்குகிறவர் களில் பாதிப்பேர் ஏமாற்றுக்காரர்கள்! நீங்களே பணம் கொடுத்து, உங்களை ஏமாற்றச் சொல்லுகிறீர்களே என்பான்!" என்று சிறு குறையோடு செல்வநாயகியின் பேச்சு இருக்கும்!

"ஒரு வகையில், அவர் சொல்வது சரிதானேம்மா? ஓர் ஏமாற் றுப் பேச்சை நம்பிப் பணம் கொடுக்கும்போது, மேலும் மேலும் அதை ஊக்குவிப்பது ஆகாதா?" என்பாள் சாந்திமதி.

"நம் அரசியல் சட்டம் என்ன சொல்லுகிறது, தெரியுமில்லையா, சாந்தி? பத்துக் கெட்டவர்கள் விடுதலை ஆனாலும் பரவாயில்லை! ஒரு நல்லவன் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது, என்கிறது! அதே போல, நாம் கொடுக்கும் பணம் பத்துக் கெட்டவர்களுக்குப் போய்ச் சேர்ந்தாலும் பரவாயில்லை! ஒரு நல்லவர் அதனால் பயன் பெற்றார் என்றால், எனக்கு அது போதுமானதே!" என்பாள் செல்வநாயகி.

சம்பளம் கொடுப்பவள் இப்படிச் சொல்லும்போது, அதை வாங்கு கிறவள் ஒரேயடியாக மறுப்பதற்கு இல்லைதானே?

அதுவும், மறுத்துப் பேசி அதனால் இங்கிருந்து வெளியேற நேர்ந்தால் செல்வதற்கு ஓர் இடமும் இல்லாதபோது!

அவளுக்குக் கொடுக்கப்படும் ஊதியமே, அவள் செய்கிற வேலைக்குச் சற்று அதிகப்படிதான் என்பது, சாந்திமதியின் கருத்து!

இப்படிப்பட்டவள், வேஷமே என்றாலும், ஆ, ஊ என்று அழுது புலம்புகிறவர்களுக்குக் கொஞ்சமாகவோ கொடுப்பாள்?

ஆனால், துன்பத்தின் வெளிப்பாடாக நிஜமாகவே அழுது புலம்புகிறவர்களும் உண்டுதான்... அது சாந்திமதியே அறிந்த

விஷயம்! அப்படி அழுது புலம்பும்போது, இளகாமல் இருப்பதற்கு, இரும்பு மனம்தான் படைத்திருக்க வேண்டும்! அதனால்தான்...

சட்டெனத் தலையை உலுக்கிக் கொண்டு, சாந்திமதி, செல்வ நாயகியின் பிரச்சினைக்கு வந்தாள்!

அழுகையிலும் புலம்பலிலும், உண்மை, பொய் இரண்டுமே இருப்பதால், அந்தக் கண்ணீரை இனம் காண்பதும் கடினம்தான். அதனால் ஒரு சிலது பொய்யாகிப் போனாலும், பல நல்லது தடைப் பட்டு விடக்கூடாது என்று, செல்வநாயகி அம்மாள் செயல்படு கிறாள்!

ஆனால், அம்மா ஏமாற்றப்படுகிறாள் என்றால், மகன் அதைத் தடுக்க முயற்சிப்பதும் இயல்புதான். அதையும் குறை சொல்ல முடியாது!

அத்தோடு, இந்தத் தாயைப் பார்த்தால், ஏமாறக் கூடியவளாக வும் தெரிகிறாள்...

சாந்திமதியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள் போல, "நீயும் என் மகனைப் போலவேதான் நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியாமல் இல்லை, சாந்திமதி. இரண்டு சொட்டுக் கண்ணீரைக் கொட்டி விட்டால், இந்த மேடம் இளகி விடுவாள் என்று நீ எண்ணுகிறாய்.

"அப்படி இளகி, பணத்தைக் கொட்டிக் கொடுத்து விடுவேன் என்று, என் பையன் பயப்படுவதும் நியாயம்தானே என்றுதானே எண்ணுகிறாய்?" என்று செல்வநாயகி கேட்கவும், சின்னவள் திகைத்துப் போனாள்!

அவள் நினைத்ததைக் கிட்டத்தட்ட அப்படிச் சொல்வது என்றால்? இந்த முதலாளி அம்மாள் அப்படி ஒன்றும் ஏமாளி அல்லவோ?

சாந்திமதி திகைத்து நோக்கவும் வெற்றியாய் முறுவலித்து, "என்ன? அப்படித்தானே நினைத்தாய்? சக மனிதர்களிடம் எனக்குப் பரிவு உண்டு, சாந்திம்மா! இதோ, இந்த இரு கடிதங்களையும் பார்! இரு குடும்பங்களுமே, ஏய்ப்பவர்கள்தான்! ஆனாலும், இவர்களுக்கு ஏன் செய்கிறேன், தெரியுமா? ஒரு காலத்தில் நாங்கள்... சிவாவுடைய அப்பா புதிதாகத் தொழில் தொடங்கிய போது, இவர்களுடைய மூத்த தலைமுறைகள், எங்களுக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறார்கள்! பணத்தில் பெரிய உதவி தேவைப் பட்டதில்லை! ஆனால், முக்கியமான ஆட்களிடம், எங்களுக்கு ஆதரவாக ஒரு சில வார்த்தைகள்! அவசியமாக சில அறிமுகங்கள்!

ஒரு தொழிலின் முதல் சில ஆண்டுகளில், இது எவ்வளவு முக்கியம் தெரியுமா? அவற்றின் பயனாகத்தான், சுணக்கமே இல்லாமல், எங்களது தொழில் வளர்ந்தது! அந்த நன்றிக்காக, சிவா அப்பா, இவருடைய பெண்ணின் திருமணச் செலவு முழுவதையும் கொடுத்தார்! பையன் படிப்புக்கும் கொடுத்தார்! பையனுக்கு நல்ல வேலைதான்! ஆனால், மனைவி அதிகச் செலவாளி! எனவே வேலை கிடைப்பதற்கு மூல காரணமான தந்தை, வேண்டாதவர் ஆகிவிட்டார்! பெற்றவரை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், பணம் கொடுக்கிறேன்! இதில் என்ன தப்பு சொல்லு!" என்று கேட்டாள் பெரியவள்.

என்ன தப்புச் சொல்ல முடியும்?

மௌனமாகத் தலையசைத்தாள் அவள்!

"அதே போல, இந்தக் கடிதத்தைப் பார்! கணவன், மனைவி இரண்டு பேருமே, சம்பாதிக்கிறவர்கள். ஆனால், கைக்கும் வாய்க்கும் என்பார்களே அது போல! ஏதோ கொஞ்சம் மிஞ்சும்! ஆனால், தாய்க்குச் செலவு செய்தால், குடும்பத்தில் வெடிக்கும்! அந்த

அம்மா பெயருக்கே அனுப்புகிறேன்! அவர்களால் வருமானம் தான் என்பதால், வண்டி நல்லபடியாக ஓடுகிறது! ஆனால், நான் மகனைக் கெடுப்பதாக பையன் குற்றச்சாட்டு! தாய்க்குச் செய்ய வேண்டிய கடமையை மறக்கடிக்கிறேனாம்! ஏற்கனவே, மறந்து விட்ட விஷயம்! இப்போது, அந்தத் தாய் மனம் நோகாதிருப்பது தானே முக்கியம்? அதைச் செய்தால், இவனுக்குப் புரியவில்லை! அங்கே போய் புத்தி சொல்லியிருக்கிறான். ஆனால், வருகிற பணத்தை யார் வேண்டாம் என்பார்கள்? பெற்றவளை இரண்டு திட்டு, திட்டியதோடு விட்டு விட்டார்கள்! பாவம்! அந்த அம்மா வுக்கு அந்தத் திட்டு அவசியம்தானா? நான் யார், யாருக்குக் கொடுக்கிறேன் என்று தெரிந்தால்தான், அவனுக்கு என் வரவு செலவுக் கணக்கைக் காட்டவே கூடாது என்று, இப்போது பிடி வாதமாக இருக்கிறேன்!'' என்றாள் செல்வநாயகி.

பல வகையில் செல்வநாயகி அம்மாள் சொன்னது சரிதான் என்றாலும், இதிலும் ஒரு தவறு இருப்பதாகவே சாந்திமதிக்குத் தோன்றியது!

எனவே, கண்ணைப் பாராமல் "சரி மேடம்! என்று முடித்தாள் அவள்.

லேசாகப் புருவம் சுருக்கி, "என்ன? இன்னமும் ஏதோ... மனது ஒத்துக் கொள்ளாததாக ஏதோ இருப்பது போலத் தெரிகிறதே! என்ன அது?'' என்று வினவினாள் பெரியவள்.

சின்னவள் தயங்கவும் "பரவாயில்லை சாந்திம்மா! உறுத்து வதைத் தைரியமாகக் கேட்டுவிடு! முழுக்க என்னோடு மனம் ஒத்துப் போனால்தான், என் வழியில் யோசித்து, எனக்காக மட்டுமாகச் செயல்பட உன்னால் முடியும்! மனதில் குழப்பம் இருந் தால், என் மகனைப் போல, எனக்கு நல்லது செய்வதாக எண்

ணியே, என் விருப்பத்துக்கு மாறாக நடக்க, உனக்கும் தோன்றி விடலாம்! அது நேராமல் இருப்பதற்காகவே, குழப்பத்தைத் தெளிவு படுத்திக் கொள்!'' என்று செல்வநாயகி வற்புறுத்தினாள்.

நானாக மூக்கை நீட்டவில்லை! பிடிவாதமாகக் கேட்கச் சொல்லுவது அவர்கள்தானே என்று எண்ணியவளாய், ''அதில்லை மேடம்! உங்கள் வருமானம் பெரும்பாலும், சென்னையிலிருந்து தானே வருகிறது? அதாவது, உங்கள் மகன் அனுப்புவதுதான் அல்லவா? அவர் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணம்! தாயார் சந்தோஷமாக, சுகமாக இருப்பதற்கு என்று அனுப்பினால், நீங்கள் அதைத் தூக்கி, யாருக்கோ தானம் செய்வது என்ன நியாயம்? அதுவும் அவருக்குப் பிடிக்காத விதத்தில்? இதுதான் என் யோசனை!'' என்றாள்.

''நல்லவேளை, கேட்டாய்!'' என்றாள் அந்த அன்னை! ''எனக்கு வரும் பணம், சென்னையில் இருந்து வந்தாலும் எல்லாமே, என் சொந்தப் பணம்தான்! என் பிறந்த வீட்டுச் சொத்தாகச் சென்னையில் சில பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன! அவற்றின் வாடகை வரும்! அப்புறம், தொழிலில் என் பங்கு இருக்கிறது! அந்த வருமானம் வரும்! ஊர்ச் சொத்தைப் பார்த்துக் கொள்வதும் பையன் தானே? அந்தப் பணமும், மனோ மூலமாகத்தான் வரும்! ஆனால், இது எல்லாமே, எனக்கு மட்டுமே உரிமையான பணம் மட்டும்தான். இதற்கு மேலும், வேண்டும் என்று கேட்டால், பையன் அனுப்பத்தான் செய்வான்! அதில் சந்தேகமே கிடையாது! ஆனால் என் விருப்பம் போலச் செலவு செய்ய, இதுவே தாராளமாகப் போதும் என்பதால், நான் கேட்பது இல்லை!'' என்றாள்.

தொடர்ந்து, ''என்ன? இப்போது எல்லாம் தெளிவாகி விட்டதா?'' என்று கேட்டு சாந்திமதி தலையாட்டவும், ''நல்லவேளை!

என்னவோ, மற்றவர்களைப் போல, எனக்கு உன்னை இழக்க எனக்கு மனமே இல்லை! அதனால்தான் கேட்டு விடுமாறு மீண்டும் மீண்டும் சொன்னேன்!'' என்று முறுவலித்தாள்!

எவ்வளவு எளிமையான, பாசமான, தெளிவான, கூடவே கட்டுப்பாடான உள்ளம்!

கூடச் சேர்ந்து புன்னகை செய்த சாந்திமதிக்கு, இந்த செல்வ நாயகிக்காக, இன்னும் இரு மடங்கு வேண்டுமானாலும் உழைக்க லாம் என்று தோன்றியது!

மிகமிக விசுவாசமாகவும்!

திங்களன்று தொடங்கிய அந்த வாரத்தின் முதல் ஐந்து நாட் களும் மிகவும் நிம்மதியாகக் கழிந்தன. ஆறாவது நாளும் கூட, மாலை மயங்கி, இரவு தொடங்கும் வரை அதே உணர்வுதான்!

துன்பம் அவளைத் தொடர்ந்து வந்து தாக்க முடியாத ஒரு புகலிடத்தில் இருக்கிறோம் என்ற ஒரு பாதுகாப்பு உணர்வுடன் நிம்மதியாகவே இருந்தாள்.

இது போதும் அவளுக்கு!

பொங்கும் மகிழ்ச்சியில் தலைகால் தெரியாமல் துள்ளிக் குதிக்க வேண்டும். ஆடிப் பாட வேண்டும் என்கிற ஆசையெல்லாம், அவளுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை!

இந்த நிலை நீடித்து, அவள் தலை நிமிர்ந்து வாழ முடிந்தால், அதுவே போதும்! கடவுள், அதற்கேனும் அருளட்டும்!

சனிக்கிழமை மாலை வரையில், வாழ்க்கை அப்படித்தான் இருந்தது.

அன்று இரவில் உணவு வேளையில், ''என் மகன் மனோகரன்'' என்று அன்று படமாகக் காட்டிய இளைஞனை சாந்திமதிக்கும், ''என்

செயலாளராக நியமித்து இருக்கிறேன்! பெயர் சாந்திமதி!" என்று அவளை மகனுக்கும் செல்வநாயகி அறிமுகம் செய்து வைத்த போது, சாந்திமதிக்கு முதலில் சற்று யோசனைதான்.

ஆனால், மனோகரன் மிகவும் இயல்பான வணக்கம் தெரிவித்து, "ரொம்ப சந்தோஷம், மிஸ் சாந்திமதி! துணைக்கு ஆள் இல்லாமல், அம்மா தனியே இருந்தது, எனக்குச் சற்று உறுத்தலாக இருந்தது! இனிமேல் அந்தப் பிரச்சினை இன்றி, நிம்மதியாக இருப்பேன்!" என்றதற்கு மேல், அவளிடம் அக்கறை காட்டாமல் தாயிடம் திரும்பி, அவளது உடல்நலம் பற்றிக் கேட்கலானான்.

முன்பும் சாந்திமதி அப்படி ஒன்றும் பயந்து கலங்கிவிடவில்லை என்றாலும், அவளைப் பார்வையாலோ வார்த்தைகளாலோ மனோ கரன் அவளைத் துளைத்து எடுக்காதது அவளுக்கு நிம்மதி அளித்தது!

அவனுக்குத் தகவல் சொன்னதற்காகவே மூன்று பேரை வேலையை விட்டுத் தாயார் தூக்கி விட்டதால், நாலாவதாக வந் திருக்கும் அவளிடம் வாலாட்ட, அவனுக்கே துணிச்சல் இல்லை போலும்!

ஆனால், அவளது கருத்து தவறு என்று, சாந்திமதிக்கு மறுநாள் உணர வைக்கப்பட்டது!



2

செல்வநாயகியிடம் பணிபுரிய வந்த பிறகு, அதுதான் முதல் ஞாயிறு!

பொதுவாக, ஞாயிறன்று தபால் வராது என்பதால், கடிதங்கள் தொடர்பான வேலை இராது! எனவே, வீட்டை ஒழுங்கு படுத்துகிற

வேலை எதையாவது செய்யலாம் என்று செல்வநாயகி கூறியிருந் தாள்!

ஆனால், இப்போது மகன் வந்திருக்கவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டு, தாயும் மகனுமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

காலைக் காபியின் பின்னர், வீட்டின் பின்புறமாகச் சென்ற வாய்க்கால் கரையோரமாக இரு பெண்களுமாக நடப்பார்கள்! வீட்டின் பின் எல்லையில், வாய்க்கால் ஓரமாகக் குறுக்கும் நெடுக்கு மாக நடக்கும்போதே, வாய்க்கால் நீரில் மீன்கள், வாய்க்காலுக்கு மறுபுறம் இருந்த பசிய வயல்கள், அங்கு அமர்ந்திருக்கும் வெள்ளைக் கொக்குகள் என்று, ஒருவருக்கொருவர் காட்டி ரசிப் பார்கள்!

இரண்டு நடைக்கு ஒரு முறை செல்வநாயகி, சற்று நேரம் உட் கார்ந்து ஓய்வெடுக்க, சாந்திமதி விடாமல் தொடர்ந்து நடப்பாள்.

நடைப் பயிற்சி போதும் என்று செல்வநாயகி முடிவெடுக்கும் போது, இருவருக்குமே நன்றாக வியர்த்திருக்கும்!

வீட்டுக்குள் வந்து, முன்புறத்து மரத்தடியில் அமர்ந்து, ஓய் வெடுத்த வண்ணம், பெரியவளுக்குச் சாந்திமதி பத்திரிகை படித்துக் காட்டுவாள்!

உலக விவகாரம் அலசியபடி, ஒரு கப் சத்துமாவுக் கஞ்சி உள்ளே இறங்கும்!

அதன்பிறகு, அவரவர் குளியல் முடித்துக் காலை உணவும், அதன் பின் வேலையும் என்று நாள் நடக்கும்!

அக்கம் பக்கம் உள்ளவர்களோ, ஏதாவது வேலை நிமித்தமோ, செல்வநாயகியை யாரும் பார்க்க வருவது என்றால், அந்த வேளையில்தான்.

கிராமத்துத் தோற்றம் இன்னமும் முழுதாக அழியாத போதும், சுற்றிலும் உள்ள ஊர்களுக்குச் சந்தைநல்லூர் பெரிய ஊர்தான்! வாரச் சந்தை நடக்கும் ஊர் வேறு! பெரிய கோயிலும் இருந்தது!

எனவே அந்த ஊரில் காரும் வசதியுமாக இருந்த 'பெரியம்மா' வோடு, ஊரின் பல்வேறு விஷயங்களைப் பற்றிக் கலந்து ஆலோசிப்பதற்காக, ஊரில் முக்கியமானவர்கள் அவ்வப்போது வந்து போவார்கள்!

பார்க்க வந்தவர்கள் எல்லோரும் போய்விட்டால், செல்வநாயகி ஓய்வெடுக்கச் செல்ல, சாந்திமதி டைப் பண்ணுவது, கணக்குப் பதிவது என்று அவளது வேலைகளைச் செய்வாள். சீக்கிரமாக வேலை முடிந்து விட்டால், அங்கிருந்த புத்தக அலமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பழைய காலத்துப் புத்தகங்களுள் எதையாவது எடுத்துப் படிப்பாள்.

திகம்பர சாமியார், ராஜாம்பாள் சரித்திரம் போன்ற பழைய புத்தகங்கள்கூட அங்கே இருந்தன!

அங்கிருந்த எந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்க, அவளுக்குச் செல்வநாயகியின் அனுமதி இருந்தது. ஒரே ஒரு நிபந்தனை, புத்தகங்களைப் பத்திரமாகக் கையாள வேண்டும் என்பதுதான்!

ஆனால், சாந்திமதி புத்தகத்தைக் கையில் வைத்துப் படிக்கும் விதத்தைப் பார்த்ததுமே, புத்தக அலமாரிச் சாவியை, அவள் கையிலேயே கொடுத்து விட்டாள் உரிமைக்காரப் பெரியவள்!

பூட்டு போட்டுப் பூட்டி வைத்திருப்பது என் கையில், புத்தகங்கள் விஷயத்தில் சாந்திமதியும் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தாள்! அது மட்டுமின்றி, அவளும் புத்தகப் பிரியை!

சற்று நேரம் படுத்திருந்துவிட்டு மதிய உணவுக்கு செல்வநாயகி அம்மாள் வருவாள்.

சாப்பிட்டதும் உடனே படுக்கக் கூடாது என்று, சற்று நேரம் டீ.வி. அப்புறம் மாலை வரை நல்ல தூக்கம், அப்புறம் தோட்டத்தில் மெல்ல உலவுதல், டீ.வி. பார்ப்பது, ஏதாவது பிடித்ததை வாசிப்பது, உணவு... இப்படியே செல்வநாயகியின் காலம் செல்லும்!

இப்போது, அருமை மகன் வந்திருக்கிறானே! எந்தெந்த வழக்கங்கள் மாறப் போகின்றனவோ என்று யோசித்தபடியேதான் அன்று காலையில் சாந்திமதி படுக்கையை விட்டு எழுந்தது!

அதற்குச் சரியாக, மனோகரன் தாயுடன் சேர்ந்து உலாவக் கிளம்பவும், சாந்திமதி ஒதுங்கி விட்டாள்.

"நீயும் வாயேம்மா!" என்று செல்வநாயகி கூப்பிட்டாள் தான்.

ஆனால், அதை ஏற்று கூடச் செல்வது, சரியல்ல என்று சாந்திமதிக்குத் தோன்றியது. தாய்க்கும், மகனுக்கும் அடுத்தொருவர் அறியாமல் பேச எத்தனையோ இருக்கக் கூடும்! அவள் கூட இருப்பது, அவர்களது உரையாடலுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடும்!

அத்தோடு, வந்திருப்பவன் வாரிசு என்பதோடு, இளைஞனும் கூட! அவள் வேண்டும் என்று ஒட்டிக் கொள்ள முயல்வதாக என்ன வாய்ப்பளிக்கவும் அவளுக்கு விருப்பம் இல்லை!

அவனாக எந்த ஆர்வமும் காட்டவில்லை என்பது எவ்வளவோ நிம்மதியாக இருக்கையில், அவளாக அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது, அல்லவா?

எனவே புன்னகையுடனேயே, "இல்லைம்மா. இன்று, எனக்கு கொஞ்சம் ஒரு மாதிரி... நடக்கப் பிடிக்காமல் இருந்தது! அதை,

உங்களிடம் சொல்லிவிட்டுப் போகத்தான், நான் இப்போது வந்ததே! நீங்கள் போய் வாருங்கள்!'' என்று விட்டாள்.

அவள் எதற்காக உடன் வரவில்லை என்று யாருக்கும் புரியாமல் இல்லை!

ஒரு பெருமித முறுவலுடன் தலையசைத்துவிட்டு, மகனுடன் சென்றாள் செல்வநாயகி.

மகன் என்ன நினைத்தானோ? அவன் முகத்தைப் பாராமலே திரும்பி விட்டாள் சாந்திமதி.

பின்காலை ஓய்வுக்காக செல்வநாயகி செல்லும் வரை, இதே போலவே நாள் கழிந்தது!

தாயின் கூடவே சென்று, அவளை ஓய்வெடுக்க வைத்துவிட்டு, அலுவல் அறைக்குள் மனோகரன் வெகு இயல்பாக வந்த போது தான், சாந்திமதிக்கு லேசான துணுக்கம் உண்டாயிற்று!

செல்வநாயகியின் எச்சரிக்கை நினைவு வர, நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள் அவள்.

என்ன என்று கேட்பது போல.

வந்ததில் இருந்து நடந்து கொண்டது போலவே, அவளது பார்வையையும் அவன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை!

மாறாக, நேராக மேஜையின் மறுபுறமாகச் சென்று, அவனுடைய தாயின் முதலாளி ஆசனத்தில் இயல்பாக அமர்ந்து, முன்னே இருந்த காகிதங்களை ஒரு புறமாக ஒதுக்கியபடி, ''அம்மாவின் வரவு செலவு கணக்குகளை எடு!'' என்றான் அவன்.

அதிகாரமான உத்திரவல்ல! பணிவான கோரிக்கையும் அல்ல! ஆனால், இதுதான் வழக்கம் என்பது போல இயல்பான ஏவல்!

ஏதோ ஒரு வகையில் அவனது இந்த வார்த்தைகளுக்கு சாந்திமதி தயாராக இருந்ததால், நேரடியாக அவனுக்கு எந்தப்

பதிலும் சொல்லாமல், மேஜை மீதிருந்த டெலிபோனை எடுக்கக் கையை நீட்டினாள்.

"என்ன செய்யப் போகிறாய்?" என்று, சிறு புருவச் சுருக்கத்துடன் மனோகரன் கேட்கும்போதே, சாந்திமதி போன் கருவியைக் கையில் எடுத்திருந்தாள்.

"கணக்குகளை உங்களிடம் கொடுக்கலாமா என்று, மேடத்திடம் அனுமதி கேட்கப் போகிறேன்" என்றாள் அவள், அவனைப் போலவே சாதாரணமான குரலில்.

அவள் கையில் இருந்து ரிசீவரை வாங்கி, தாங்கியில் வைத்த வாறு, "நான் யார் என்று மறந்து விட்டதா? அம்மாவிடம் அனுமதி கேட்கத் தேவையில்லை!" என்றவாறு சுற்றும் முற்றும் பார்த்து விட்டு "கணக்குகளை எங்கே வைத்திருக்கிறாய்?" என்று கேட் டான் மனோகரன்.

"மேஜையின் இழுப்பறைக்குள்" என்றாள் அவள் சுருக்கமாக.

டிராயரை இழுத்துப் பார்த்துவிட்டு, "இதன் சாவியைக் கொடு!" என்றான் அவன் சற்றே அதிகாரமாக.

மீண்டும் டெலிபோன் கருவியை கைநீட்டி எடுத்தாள் அவள்.

"என்ன செய்யப் போகிறாய்?" என்றான் அவன் சந்தேகமாகப் பார்த்து.

"சாவியை உங்களிடம் கொடுக்கலாமா என்று மேடத்திடம் கேட்கப் போகிறேன்!"

சட்டென அவள் கையிலிருந்து, டெலிபோன் கருவியைப் பிடுங்கி, அதன் தாங்கியில் போட்டான் மனோகரன்.

ஆத்திரத்துடன் அவளைப் பார்த்தவன், ஒரு பெரிய மூச்செடுத்து, தன்னை சமனப்படுத்திக் கொண்டு "இதோ பார், உனக்கு விஷயம்

புரியவில்லை என்று நினைக்கிறேன். அம்மாவுக்கு இளகிய மனது! ரொம்பவும் அதிகப்படியாகவே! யாராவது வந்து இரண்டு சொட்டுக் கண்ணீரை விட்டு விட்டால் போதும்! அடியோடு நிதானத்தை இழந்து விடுவார்கள்! தகுதி இருக்கிறதா, இல்லையா என்றே பாராமல், பணத்தை அவர்களிடம் கொட்டி வீணாக்கு வார்கள். சொன்னாலும் புரிந்து கொள்ளாமல் ஆத்திரப்படுவார்கள்! அதைத் தடுப்பதற்காகத்தான் இந்த என் முயற்சி எல்லாம்!'' என்று, பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு விளக்கினான். பிறகு, ''அதனால், நேரத்தை வீணாக்காமல் இழுப்பறைச் சாவியைக் கொடு!'' என்று, இப்போது சற்று அதட்டலாகக் கேட்டான்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் சாந்திமதி.

''மேடம், அவ்வளவு இலகுவாக தன் வசத்தை இழந்து விடு வார்கள் என்றா சொல்லுகிறீர்கள்? அடடா!'' என்று சிறு வியப் புடன் கூறி வருத்தப்பட்டு விட்டு, ''ஆனால், அது ஆபத்தல்லவா? முதலில் ஒரு நல்ல மனநல மருத்துவரிடம் அவர்களை அழைத்துப் போய் ஆலோசனை கேளுங்கள்! பெரிதாக வளருமுன், இப்போதே சிகிச்சை எடுத்து விடுவது நல்லது!'' என்று கரிசனத்தோடு யோசனை சொன்னாள் சாந்திமதி.

சினமிக எழுந்து, ''ஏய், நீ என்ன, என் அம்மாவைப் பைத்தியம் என்றா சொல்லுகிறாய்! உனக்கு...'' என்று சிறு வியப்புடன் அவன் கோபமாகப் பல்லைக் கடிக்க, ''அப்படி ஆகிவிடக்கூடாது என்று தான் இப்போது நடவடிக்கை எடுக்கச் சொல்லுகிறேன், சார்!'' என்று, மீண்டும் கரிசனக் குரலிலேயே உரைத்தாள் அவள்!

விழி இடுங்க, அவளைக் கூர்ந்து நோக்கினான் மனோகரன்.

தளராத பார்வையுடன் அவளும் நோக்கவும், தலையை ஆட்டி, ''இப்போது புரிகிறது!'' என்றான் அவன். ''நடவடிக்கைதானே?

நிச்சயமாக எடுக்கிறேன்!'' என்றவன், அதற்கு மேல் அங்கே நில்லாமல், வேகமாக வெளியேறினான்.

மனோகரனின் நடையில் இருந்தே, அவனது 'நடவடிக்கை' என்னவாக இருக்கும் என்று சாந்திமதிக்குப் புரிந்தது!

ஆனால் இது, 'தலை விழுந்தால் நீ தோற்றாய்... பூ விழுந்தால் நான் ஜெயித்தேன்' என்பதுபோல, எந்த விதத்திலும், அவளுக்குப் பாதகமாகத்தான் முடிவதுதான்!

வரவு செலவுக் கணக்கை மனோகரனிடம் கொடுத்தால், செல்வ நாயகி அம்மாள் வேலையை விட்டுத் தூக்கப் போகிறாள்! தர வில்லை என்பதற்காக, இப்போது இவனும், தாயிடம் உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அதையே நடக்க வைக்கப் போகிறான்!

மகன் இவ்வளவு கோபத்தோடு சொல்வதைத் தாயார், அவ ளுக்காக அலட்சியப்படுத்தப் போகிறாளா, என்ன?

இந்த வேலை அவளுக்கு எவ்வளவு முக்கியம் என்று தெரிந்த பிறகும் முதலாளி அம்மாவின் மகனான குட்டி முதலாளியிடம், இவ்வளவு நக்கலாகப் பேசியிருக்கக் கூடாது!

ஆனால், அந்த மனோகரன் நடந்து கொண்ட விதத்துக்கு, வேறு என்னதான் செய்ய முடியும்? என்னவோ, அவன் மட்டும் தான் மூளையுள்ளவன் போல... மற்றவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்று சொல்லாமல் சொல்வது போல, அது என்ன அதிகாரம் செய்வது?

நியாயம் இல்லைதான்!

ஆனால், நியாயமோ, அநியாயமோ, அதன் முடிவாக அவளுக்கு வேலை போகப் போகிறது!

சும்மா, அலட்சியமாக மனோகரன் தள்ளிப் போட்டிருந்த காகிதங்களை எடுத்து, தேதி வாரியாகவும், அந்தந்த விஷய வாரியாகவும் பிரித்து அடுக்கலானாள் சாந்திமதி!

அடுத்து, இந்த வேலைக்கு வருகிறவளுக்கேனும் உதவியாக இருக்குமே!

வேலை நீக்க உத்திரவை எதிர்பார்த்து சாந்திமதி காத்திருந்தால், அப்படி எதுவும் அவளது கைக்கு வரவே இல்லை!

மாறாக, மதிய உணவின்போது அவளைச் சந்தித்த செல்வநாயகி "வாழ்த்துக்கள், சாந்திமதி!" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

"எதற்கு?" என்று சாந்திமதி திகைக்கவும், "உன் வேலை பாதி உறுதியாகி விட்டது! மனோவிடம் என் வரவு செலவுக் கணக்கை நீ கொடுக்கவில்லை போலிருக்கிறதே! எப்படித் தெரியும் என்று பார்க்கிறாயா? நீ ரொம்பவும் திமிர்ப் பிடித்தவள், உன்னை விரைவில் வேலையை விட்டு விரட்டுவது எல்லோருக்கும், குறிப்பாக எனக்கு நல்லது என்று, எனக்கே புத்தி சொல்லிவிட்டுக் கிளம்பியிருக்கிறான் என் மகன்! நீ கணக்கைக் கொடுத்திருந்தால், இப்படிச் சொல்லியிருக்க மாட்டான் இல்லையா?" என்று சிரித்தாள் அந்த அன்னை.

கூடச் சேர்ந்து சிரித்தபோதும், "என் மேல் உள்ள கோபத்தில், உங்களையும் விட்டுச் சீக்கிரமே கிளம்பி விட்டாரா, மேடம்?" என்று சிறு வருத்தத்துடன் சாந்திமதி வினவ, செல்வநாயகிக்கு மேலும் சிரிப்பு வந்தது.

சாந்திமதிக்குப் பதிலாக, "அதெல்லாம் ஒன்றுமில்லை! இது, வழக்கமாக மனோ கிளம்புகிற நேரம்தான்! இப்போது கிளம்பினால்தான், சென்னைக்குப் போய் சேர்ந்து, நாளைய வேலையை

அவசரமின்றித் திட்டமிட அவகாசம் இருக்கும் என்று, மதிய உணவைக் கையில் எடுத்துக் கொண்டு எப்போதுமே இந்த நேரம் கிளம்பி விடுவதுதான்! இந்தக் கோபப் பேச்சுதான் வேறுபாடானது! எப்படியோ, இன்னும் மூன்று அல்லது நாலு வாரங்களுக்குப் பிரச்சினை இராது!'' என்று கூறியவள், அவளுடைய செயலாளர் வியப்பும், விசித்திரமுமாகப் பார்க்கவும், ''ஆச்சரியமாக இருக் கிறதா, சாந்தி? என்ன செய்வது? எல்லோரையும் போல, எனக்கும் என் மகனை அடிக்கடி சந்திப்பது சந்தோஷம்தான்! ஆனால், பண விஷயத்தில் என்னவோ நான் ஒரு முட்டாள் என்பது போல, அவன் நடந்து கொள்ளும்போது, எரிச்சலாகி விடுகிறது! அவனைப் பெற்று வளர்த்தவள் என்பதை மறந்து, என்னை ஏதோ சின்னப் பிள்ளை மாதிரி நடத்தினால், அதை நான் எப்படி ஒப்புவது சொல்லு? அம்மா என்கிற மரியாதை, கொஞ்சமாவது வேண்டாமா?'' என்று விளக்கம் கொடுக்கவும், சாந்திமதிக்கும் நன்றாகச் சிரிப்பு வந்தது!

''இவனுக்கெல்லாம், இவன் பிள்ளையே வந்து இப்படி நடத்திக் காட்டினால்தான் புரியும்! ஆனால், அதற்குப் பயந்து தானோ, என்னவோ திருமணத்துக்கே தொடை நடுங்குகிறான்!'' என்று செல்வநாயகி தொடர்ந்து கூற, இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்!

வாய்விட்டுச் சிரித்தால், நோய் விட்டுப் போகும் என்பார்கள்! முக்கியமாக மனதைப் பீடிக்கும் வாட்டம், கவலை, சோர்வு அனைத்தையும் விரட்டித் தெம்பூட்டுவதாலேயே அப்படிச் சொல்லியிருக்க வேண்டும் என்று எண்ணினாள், சாந்திமதி.

அடுத்த ஒரு வாரம் உற்சாகமாகவே கழிந்தது!

ஆனால், சனிக்கிழமை மாலையில் மனோகரன் வந்து சேர்ந்தது, இரு பெண்களுக்குமே திகைப்புதான்! செல்வநாயகியின் முகத்தில்

திகைப்பை மீறிய மகிழ்ச்சியைக் கண்டபோது, சாந்திமதியின் உள்ளம் குறுகுறுத்தது!

மகன் வரவில், தாயாருக்கு ரொம்பவே மகிழ்ச்சிதான்! ஆயினும், சாந்திமதிக்காக, மகன் பல நாட்கள் வராதிருப்பது நிம்மதியே என்றிருக்கிறாள், அந்தத் தாய்!

எவ்வளவு பிரியம்!

மனோகரனின் வரவால், தனக்குப் பிரச்சனை ஏற்படும் என்று தெரிந்தே இருந்த போதும், அவன் இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பி வந்தது குறித்து, சாந்திமதியும் சந்தோஷப்பட்டாள்!

அந்த வரவு, செல்வநாயகிக்கு சந்தோஷம் தருவதால்!

அத்தோடு, தாயாருக்காக மனோகரனும் நல்லபடியாக நடந்து கொள்ளலாமே!

மனோகரனும், அதே எண்ணத்தோடுதான் வந்திருப்பது போலத் தோன்றிற்று.

மனோகரனைக் கண்டதும், முகமனாக முகத்தில் ஒரு முறுவலைக் காட்டிவிட்டு, உள்ளே சென்று இன்னொரு கப் காபி, பலகாரத் தட்டுடன் திரும்பிய சாந்திமதி, அவற்றை, அவன் முன்னே வைத்து விட்டுத் திரும்பிச் செல்லலானாள்.

சென்ற முறை போலவே!

ஆனால், அப்போது கண்டு கொள்ளாமல் உட்கார்ந்திருந்த மனோகரன், இந்தத் தடவை அவளைத் தடுத்தான்!

"பொறு சாந்திமதி! எதற்கு இந்த ஓட்டம்? என் முகம் என்ன, பார்க்க அவ்வளவு பயங்கரமாகவா இருக்கிறது?" என்று இலகுவான குரலில், புன்முறுவலோடு கேட்கவும், பெண்கள் இருவருமே சற்றுத் திகைத்துப் போயினர்!

சமாளிததுக் கொண்டு, "இப்போதுதான் ஊரிலிருந்து வந்திருக் கிறீர்கள்? அம்மாவும் பிள்ளையுமாகப் பேசுவதற்குக் குடும்ப விஷயங்கள் எத்தனையோ இருக்கக் கூடும்! நந்தி மாதிரி, நான் நடுவில் நிற்பது சரியல்லவே! அதனால்தான் சென்றேன்" என்றாள் சாந்திமதி!

"ஆகா, இது கதை!" என்றான் அவன் கிண்டல் குரலில்! "என் னவோ உனக்குத் தெரியாத ரகசியம் அம்மா மனதில் இருப்பது போல அளக்கிறாயே! அப்படி ஒன்றும் கிடையாது என்று எனக்குத் தெரியும்! அதனால், சும்மா உட்கார்" என்றான் தொடர்ந்து.

குறையாக எண்ணுகிறானோ என்று பார்த்தால், முகத்தில் சிரிப்புதான் தெரிந்தது!

கேள்வியாக செல்வநாயகியைப் பார்த்தபோது, "இவ்வளவு சொல்கிறானே! உட்கார் சாந்திம்மா!" என்றாள் அன்னையும்.

பரவாயில்லை! பெற்றவளுக்கு சாந்திமதியிடம் பாசம் ஏற்பட்டு விட்டது என்று புரிந்து, அவளைப் பொறுத்துப் போக முடிவு செய்து விட்டான் போலும்! அதையும் ஏனோதானோ என்று செய் யாமல், அன்னையின் மகிழ்ச்சிக்காக முழுமையாகவே செய் கிறான்!

தொழிலை வெற்றிகரமாக நடத்துகிறான் என்று செல்வநாயகி அவ்வப்போது சொல்வதுண்டு! அது எப்படி என்று, சாந்திமதிக்கு இப்போது புரிந்தது!

ஜப்பானிய முறை! பிடிக்கிறதோ இல்லையோ, நிறுவனத்தின் பெரும்பான்மையினரால் ஒரு திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டு விட்டால், அந்தத் திட்டத்தை எதிர்த்தவர்கள் கூட, அதன் வெற்றிக் காக முழுமையாகப் பாடுபடுவார்களாம்! ஜப்பானியரின் தொழில் வெற்றியின் ரகசியம் என்று இதைச் சொல்வதுண்டு!

அடுத்ததாக, நூற்றுக்கு நூற்றுப் பத்து சதவீதம் உழைப்பது! மனோகரனும், அவனது ஆத்திரத்தை அடியோடு ஒதுக்கிவிட்டு, அதிகப்படியாகக் கலகலப்பாக இருக்க முயற்சிக்கிறான்!

செல்வநாயகியின் முக மலர்ச்சியைப் பார்த்துவிட்டு, சாந்திமதியும், தன் ஒதுக்கம் விடுத்து, இயல்பாகப் பழகலானாள்!

செல்வநாயகிக்குப் பிடிக்கும் என்று, ஜெமினிகணேசன் சாவித்திரி நடித்த 'மாயாபஜார்', 'மிஸ்ஸியம்மா' சிடிக்களை மனோகரன் கொண்டு வந்திருந்தான்.

முன்னிரவில் அதைப் போட்டுப் பார்த்து, சிரித்தபடியே படுக்கப் போனார்கள்!

மறுநாள் காலையில் சேர்ந்தே உலாவப் போகலாம் என்று, படுக்கச் செல்லுமுன் அவனே சொல்லியிருந்ததால், மறுநாள் மூவருமாக, 'வாக்கிங்' போனார்கள்!

அவள் ரசித்த, பச்சைப் பாய் வயல், வெள்ளைக் கொக்கு, வாய்க்கால் மீன் எல்லாவற்றையும் அவனும் ரசிக்கவே, சாந்திமதிக்கு சந்தோஷமாக இருந்தது!

அத்தோடு நில்லாமல், "இந்தப் பழம் சாப்பிட்டுப் பார்!" என்று பக்கவாட்டு எல்லையில் வேலியாக அமைந்திருந்த ஒருவித முள் செடியில் இருந்து, அடர்ந்த வைலட் வண்ணத்தில் குன்றிமணி அளவில் இருந்த சிறு பழங்களைப் பறித்துக் கொடுத்தான்.

"ஏய்ய்... முள் குத்தப் போகிறது, வேண்டாம்!" என்ற தாயைப் பார்த்து முறுவலித்து, "அம்மாவுக்கு முள் பயத்தை விட, இந்த முள் செடியில் சட்டை உரிக்க வரும் பாம்பு பயம்தான் அதிகம்!" என்றான்.

"பா... பாம்பு நிஜமாகவே வருமா?" என்று, சற்று அகன்ற விழிகளால் சாந்திமதி அந்த வேலிச் செடியையும், செடியோடு சுற்றிலும் தரையையும் ஆராயவும், அவன் வாய்விட்டே சிரித்தான்!

''பயப்படாதே! அந்தச் செடி பார்த்தாயா? பெயர் சிரியாநங்கை! பூக்கள் விரிவது இல்லை! ஆனால், அதன் வாசனை, பாம்பு களுக்குப பிடிக்காது! அங்கங்கே வளர்த்து வைத்திருக்கிறார்கள்! அப்புறம், பாம்பு எப்படி வரும்? என்ன சென்னாலும், அடித்தாலும் கூட, இந்தப் பழம் பறித்துச் சாப்பிடுகிறேன் என்று, மாற்று ஏற்பாடாய், இந்தச் செடிகளை வளர்த்து வைத்திருக்கிறார்கள்!'' என்று கலகலத்தான் மனோகரன்!

''அடியா? மேடமா, உங்களை அடித்தார்கள்? நம்ப முடிய வில்லையே!'' என்று சாந்திமதி வியந்தாள்.

செல்வநாயகி மௌனமாகப் புன்னகைக்க, ''சாதாரண அடியா? கம்பாலேயே விழும்! ஆனால், பயன்தான் இராது! நாக்கில், உதட்டில் இந்தப் பழங்களின் நிறம் காட்டிக் கொடுத்து, அடி வாங்கி வைக்கும் என்று தெரிந்தாலும், விட முடியாது! இந்தப் பூலாச்சிப் பழத்தின் சுவை அப்படி! நீ என்ன சொல்கிறாய்? பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டான் மனோகரன்.

''ம்ம்! நன்றாக இருக்கிறது! ஆனால், கம்படி, பாம்பு... எல்லாம் தாண்டி இதைப் பறித்திருக்கிறீர்களே எனும்போதுதான், சுவை கொஞ்சம் குறைந்து தெரிகிறது!'' என்றாள் அவள்!

வாய்ப்பை விடாமல், ''பாரம்மா, இவ்வளவு நாள் கழித்து, உனக்கே இப்படி என்றால், ஒற்றைக்கு ஒரு பிள்ளையை வைத்துக் கொண்டு, அப்போது எனக்கு எப்படி இருந்திருக்கும். சொல்லு! இவன் அப்பாவை, அங்கே ஹோட்டலில் சாப்பிடச் சொல்லி விட்டு, இங்கே வந்து இவன் பின்னோடு அலைவேன்! வீட்டில் கண் குத்திப் பாம்பாகக் கவனிக்கிறேன் என்று. நைசாக நழுவி, காடோ, மேடோ என்று அலைந்து, இந்தப் பழம் பறித்துத் தின்பான். அதைவிட, நம் இடத்திலேயே பறிக்கட்டும் என்று என் மாமியார்

சொல்லி, இந்தச் செடிகளை வளர்க்கத் தொடங்கினோம்!'' என்று, அன்னை தன் பங்குக்கு விளக்கினாள்.

சிரித்துவிட்டு, சப்பாத்திக் கள்ளியின் பழம் ஒன்றைப் பறித்து வந்து, உள்ளிருக்கும் முள் தொண்டையில் சிக்காமல் சாப்பிடும் விதம் பற்றி கற்றுக் கொடுத்தான் அவன்!

''முழுக்க இங்கேயே வளர்ந்த மாதிரி, எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே!'' என்று சாந்திமதி ஆச்சரியப்பட்டாள்!

''வளரவில்லைதான்! ஆனால், தாத்தா பாட்டி இருக்கும்போது, லீவுக்கெல்லாம் இங்கேதானே! அப்போதுதான் அம்மாவும், எனக்காக இங்கேயே வந்து போரடித்துக் கிடப்பது!

தன் பிள்ளைக்கு வேண்டியதைப் பாராமல், அவன் பிள்ளைக் காக வந்து உட்கார்ந்திருக்கிறாளே என்று, பாட்டிக்கு அம்மா மேல் கோபம் வரும்! எங்கள் பேரனை நாங்கள் பார்க்க மாட்டோமோ, எங்கள் மேல் நம்பிக்கை இல்லையா என்பார்கள்! எல்லாம் குனிந்த தலை நிமிராமல் வாங்கிக் கட்டிக் கொண்டு, அப்புறமாக அதற்கும் சேர்த்து, என்னை விளாசுவார்கள்! ஒரு தரம் அம்மா என்னை அடிக்கும்போது பார்த்து, அதன் காரணம் தெரிந்த பிறகு தான், பாட்டி தன் மாமியார்த் தனத்தை விட்டு, அம்மாவிடம் பரிவாக இருக்கத் தொடங்கியது! கவலைப்பட வேண்டாம் என்று அம்மாவைத் தேற்றி, என் கூடவே இருப்பதற்கு ஓர் ஆளை ஏற்பாடு செய்து...''

எந்தவித வகுப்பு வேறுபாடும் காட்டாமல், ஒளிவு மறைவு இல்லாமல் மனோகரன் கலகலப்பாகப் பேசியது, சாந்திமதிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

அவளுக்கு மட்டும், எதிர்காலம், அதில் குடும்ப வாழ்வு என்கிற ஆசைகள் இருக்குமானால், மனோகரனிடம் மயங்கிக்கூடப் போயிருப்பாள்!

ஆனால், அவளுக்கு அந்த மாதிரியான எண்ணங்கள் கொஞ்சம் கூட இல்லாதபடியால், சாந்திமதியின் இதயம், அவளது நெஞ்சுக் கூட்டுக்குளளேயே பத்திரமாக இருந்தது!

அத்தோடு, நெஞ்சுக்கு இதமாயிருந்த இந்த நிலை நீடிக்கவு மில்லை!

அன்றைக்கு செல்வநாயகி ஓய்வெடுக்கச் சென்றதும், சாந்தி மதியைத் தேடி வந்த மனோகரன் பேசத் தொடங்கியதுமே, அவ னது முகமூடி கிழிந்து, அவளுக்கு உண்மை புரிந்து, அவர்களுக் குள் பழைய நிலையும் திரும்பி விட்டது!



## 3

செல்வநாயகி ஓய்வெடுக்கச் சென்றதும், உடனேயே மனோகரன் அவளைத் தேடி வரவும், சாந்திமதியின் மனம். ஒரு கணம் துள்ளியது!

அவளுடன் பேசிக் கொண்டிருப்பது பிடித்துப் போய், அதற்காக அவளை நாடி வந்தானோ என்று தோன் றிய எண்ணம், தோன்றிய விரைவிலேயே மறைந்து போயிற்று!

அவளிடம் பேச விருப்பம் என்றால், அதை செல்வநாயகி அறைக்குள் சென்று கதவைச் சாத்தி, அவளது தலை மறையும் வரை காத்திருந்து செய்ய வேண்டியது இல்லை!

ஒரு சிலரைப் போல, செல்வநாயகி குறுகிய உள்ளம் படைத்த பெண் அல்ல! ஆணும் பெண்ணும் பேசுவதையோ, முதலாளி யோடு பணிபுரிகிறவள் உரையாடுவதையோ, அவள் ஒரு போதும், தவறாகக் கருத மாட்டாள்.

எனவே, அன்னை அறியாமல்தான், மனோகரன் சாந்திமதி யோடு பேச வேண்டும் என்பது கிடையாது!

அப்படி அன்னை அறியாமல், அவன் அவளோடு பேச வந்தால், அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்!

விஷயம் புரிந்து போனதால், அவனது எந்தவிதமான அணுகு முறைக்கும், சாந்திமதி தயாராகவே இருந்தாள்.

அவனும் கெட்டிக்காரத்தனமாகத்தான் தொடங்கினான்!

கையை லேசாக நெட்டி முறித்து, "கிட்டத்தட்ட ஒரு நாள் பொழுது, எப்படி ஓடிப் போயிற்று! இனிக் கிளம்பி ஓட வேண்டும்! அப்புறம், அங்கேயும் வேகம், வேகம்... என்று ஒரே ஓட்டம்தான்! அதற்குள்... சாந்திமதி, மும்பையிலிருந்து, சில கம்பெனி பங்குகளுக்கான 'டிவிடண்டு' அம்மாவுக்கு வந்திருக்க வேண்டும்! எதெல்லாம் வந்திருக்கின்றன என்று பார்த்து விடலாம். அம்மா வின் கணக்குப் புத்தகங்களை எடுத்துத் தருகிறாயா?" என்று சற்றும் மாறாத குரலில் இயல்பாகக் கேட்டான் மனோகரன்!

ஆஹா! அதற்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிறேன் என்று எண்ணியவாறே, "இதோ!" என்று டெலிபோனை நோக்கிச் சென் றாள் சாந்திமதி.

"எதற்கு அ... அங்கே?"

"கணக்குப் புத்தகங்களை உங்களிடம் கொடுப்பதற்கு மேடத் திடம் அனுமதி கேட்கத்தான்!" என்றாள் அவளும் இயல்பான குரலிலேயே!

"அடடா என்னம்மா சாந்திமதி, உன் பெயர் சாந்திமதி என்றால், அதற்காக ஒரேயடியாக உன் மதியை சாந்தப்படுத்தித் தூங்க வைத்து விடுவதா? தயவு பண்ணிக் கொஞ்...சம்... கொஞ்ச

மேனும் யோசித்துப் பாரேன்! இந்த சின்ன விஷயத்துக்குப் போய், தூங்குகிற அம்மாவை எழுப்ப வேண்டுமா? அசட்...டுத்தனமாக இல்லை?''

அவளுக்குப் புரிந்தது! அவளைச் சிரிக்க வைத்து, இளக்கும் முயற்சி!

முழுக்க முழுக்கத் தெளிவாக இருந்ததால், ''தூங்கியிருந்தால், அப்படியே சொல்லலாம்! ஆனால், மேடம் இப்போது தூங்க மாட்டார்களே! புத்தகம்தான் படிப்பார்கள்'' என்றாள் அவள் சாதாரணமாகவே!

''ஒருவேளை தூங்கியிருந்தால்? அனாவசியமாக, அம்மாவின் தூக்கத்தைக் கெடுப்பானேன்?''

''ஆனால், இப்போதுதானே படுக்கப் போனார்கள்? அதற்குள் தூங்கியிருக்க மாட்டார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியுமே!''

அவளது குரலில் சற்றே ஏளனம் தொனித்ததோ? மனோகர னின் முகமும் மாறியது!

''இப்போது நீ என்னதான் சொல்லுகிறாய்?'' என்று அழுத்தமான குரலில் கேட்டான்.

''உங்கள் அம்மாவின் அனுமதி இல்லாமல், கணக்குப் புத்தகங் களை உங்களிடம் காட்டவே மாட்டேன்!'' என்றாள் அவளும், அதே அழுத்தத்துடன்.

''ரொம்பத் திமிராகப் பேசுகிறாயே! கணக்குப் புத்தகங்கள் இருக்கும் இடம் எனக்குத் தெரியும்! இழுப்பறைச் சாவி, உன் கைப்பையில் இருப்பதும் தெரியும்! முரட்டுத்தனம் காட்டக் கூடாது என்று கட்டுப்பாட்டோடு இருக்கிறேன்! மற்றபடி வலுக்

கட்டாயமாக உன்னிடமிருந்து சாவியைப் பிடுங்கிப் போய்க் கணக்குகளைப் பார்க்க, என்னால் முடியாது என்றா, நினைத்தாய்? மரியாதைக் கொடுத்தால், அதை ஒழுங்கானபடி ஏற்கவும் தெரிந்து கொள்!" என்றான் அவன் ஆத்திரத்தோடு.

"மிரட்டுகிறீர்களா?" என்று அலட்சியமாகக் கேட்டாள் சாந்தி மதி! "இத்தனை வேலையாட்கள் இருக்கும் இடத்தில், என் கைப்பையைப் பிடுங்கி, அநாகரீகமாக நடந்து கொள்வதானால், அது உங்கள் விருப்பம்! உங்கள் துணிச்சல்! ஆனால், ஒன்று, பிறகு உங்கள் தாயாரிடம் சாட்சி சொல்லும் வேலையாட்கள், நானாகச் சாவியைத் தரவில்லை என்று சொல்வார்களே, அது எனக்கு மிகப் பெரிய நற்சாட்சிப் பத்திரமாக இருக்கும் என்பது மட்டும் நினைவில் இருக்கட்டும்! அத்தோடு நீங்கள் எந்த அள வுக்கு இறங்குவீர்கள் என்பதும் மேடம் காதுகளுக்குப் போகும்!" என்றாள் அவள்!

இதுவும் மிரட்டல்தான்!

"ஏய்ய்... நீ.." என்று, பல்லைக் கடித்தான் மனோகரன்.

இரண்டு பெரிய மூச்சுகள் எடுத்து தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு, "உனக்குக் கொஞ்சமாவது மூளை இருந்தால், நான் எதற்காக இந்தக் கணக்குப் புத்தகங்களைக் கேட்கிறேன் என்று புரிபட்டு, நீயாகவே என்னிடம் கொண்டு வந்து, அவைகளைக் காட்டியிருப்பாய்! இப்போது ஒன்று மட்டும் நிச்சயமாகி விட்டது! உன் மண்டையோட்டுக்குள் மதியும் இல்லை! நீ இருக்கும் இடத்தில் சாந்தியும் இல்லை! தாங்க முடியாமல்தான். உன் வீட்டினர், உன்னை இங்கே விரட்டி விட்டார்களோ, என்னவோ? இங்கே அம்மாவும், எப்படித்தான் உன்னைச் சகிக்கிறார்களோ,

பாவம் அவர்கள் தலை விதி! எப்படியோ போய்த் தொலை!'' என்று எரிந்து விழுந்துவிட்டு, அங்கிருந்து அகன்றான் அவன்!

அலட்சியமாகத் தோளைக் குலுக்கியபோதும், சாந்திமதிக்குக் கொஞ்சம் வருத்தமாகவும் இருந்தது! முன்தினம் மனோகரன் வந்ததிலிருந்து, பொழுது 'எவ்வளவு சந்தோஷமாகக் கழிந்தது! கடைசியில், எல்லாமே நாடகமாக அல்லவா இருந்திருக்கிறது!'

அத்தோடு, மனோகரன் கடைசியாகச் சொன்னதும், அவளை வருத்தியது!

அவன் சொன்னது போலவே, அவளுக்கு மதி இல்லைதான்! அதனால் மற்றவர்களைவிட, அவளுக்குமே சாந்தி இல்லாமல்தான் போயிற்று! அதனால்தானே, பிறந்து வளர்ந்த இடத்தை விட்டு, இவ்வளவு தூரமாக அவள் வந்ததே!

மனோகரனின் பேச்சு, ரொம்பவுமே வீட்டை நினைவுக்குக் கொண்டுவர, அன்றிரவே உட்கார்ந்து அன்னைக்கு ஒரு கடிதம் எழுதினாள், சாந்திமதி!

கடும் சினத்துடன் சென்னைக்குச் சென்ற மனோகரன் கொஞ்ச காலத்துக்குத் திரும்பி வரமாட்டான் என்றே சாந்திமதிக்குத் தோன்றியது!

செல்வநாயகியின் கணிப்பும் அதுதான்!

ஆனால், அது பற்றிச் செல்வநாயகி அதிகம் கவலைப்பட வில்லை!

மிஞ்சி மிஞ்சி மூன்று வாரங்கள்! அதற்கு மேல், தாயாரைப் பாராதிருக்க, அந்தச் செல்ல மகனால் முடியாது!

"இல்லாவிட்டாலும், நானே போன் பண்ணி விடுவேன். உடனே வந்து விடுவான். அதனால், கவலைப்படாமல், சாதாரணமாக இரு

சாந்திம்மா!'' என்று, அந்த மூத்த பெண்மணி கூறவும், சாந்தி மதிக்குத் தூக்கி வாரிப் போட்டது!

கவலைப்படுவதா? அவளா?

அதுவும் மனோகரன் வரமாட்டானோ என்றா?

என்ன அசட்டுக் கணிப்பு என்று எண்ணும்போதே, உடலிலும், உள்ளத்திலும் ஊடுருவியிருந்த சோர்வு புரிந்தது!

அவன் வரவுக்காக, அவள் ஏங்குவதா என்று யோசிக்கும் போதே, சாந்திமதிக்கு விஷயம் புரிந்து போயிற்று!

சும்மாவே, அம்மா, தம்பி தங்கையை நினைத்து அவளுக்கு ஏக்கம்! அதனால் சோர்வு!

அத்தோடு, தாயை விட்டுப் பிரிந்து வந்திருக்கும் சாந்திமதிக்கு, அவள் தாய் போலவே அன்பு காட்டும் செல்வநாயகியிடம், மிகுந்த பாசம் ஏற்பட்டு விட்டது!

மகனின் அருகாமையில், தாய் எப்படிப் பூரித்துப் போகிறாள் என்று, அவளும் பார்த்துக் கொண்டுதானே இருந்தாள்.

அவளால் அதற்குத் தடை.... அந்தத் தாயின் பூரிப்பு தள்ளிப் போடப்படுவதால் ஏற்படும் வேதனைதான்! அவளை வருத்தி, அதிகமாகச் சோர்வடைய வைத்திருக்கிறது!

அவ்வளவே!

நல்லவேளையாக, அவளுடைய தங்கையிடம் இருந்து, அவளுடைய புதிய ஆசிரியர்கள் பற்றிய வேடிக்கையான வர்ணனைகளுடன் அவளுக்கு ஒரு பதில் கடிதம் வரவும், சோர்வு அகன்று, புன்னகையோடு வளைய வந்தாள் சாந்திமதி!

செல்வநாயகி, சாந்திமதி இருவரின் கணிப்புக்கும் நேர் மாறாக, அந்த வாரமும் மனோகரன் கிராமத்துப் பண்ணை வீட்டுக்கு விஜயம் செய்தான்!

ஆனால், தனியாக அல்ல!

அவனது 'டைல்ஸ்' தொழிலுக்கான விளம்பரப் படங்களை இங்கே எடுப்பது பற்றி ஆலோசிக்க என்று, கூட நாலு பேரைத் தன்னோடு கூட்டி வந்தான்!

ஆலோசனையே முடியாத நிலையில், அந்த விளம்பரங்களில் நடிக்க இருக்கும் மாடல் பெண்ணும் அவர்களோடு வந்திருந்தாள்!

அவளுக்குக் கிராமத்தை நேரில் பார்க்க வேண்டுமாம்!

கிராமத்து வாழ்க்கையை! அவர்களது வாழ்க்கை முறையை!

என்னமோ, அமேசான் காடுகளுக்குள் போய், அங்கே வசிக்கும் பிக்மிக்களைப் பார்க்க வந்த மாதிரிப் பேசுகிறாளே என்று, சாந்திமதிக்கு உள்ளூர ஆத்திரம் வந்தது!

இங்கே இருப்பவர்களும் மனிதர்கள்தான்! அதிலும் டீ.வி.யில் பல்வேறு சானல்களைப் பார்த்துப் பார்த்து, நடை, உடைகளில், இங்கே அதிக வேறுபாடே இல்லாதிருந்தது! அக்கம், பக்கம் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடந்ததால், பெரும் பான்மையினருக்குப் படிப்பறிவும் நன்றாகவே இருந்தது!

இதில், இந்த அம்மாள் எந்தக் கிராம மக்களைப் பார்க்கப் போகிறாளாம்?

சலவைக் கல்லும், கிரானைட்டுமான மனோகரனின் தொழிலில், கிராமப் பின்னணியோடு கூடியதாக என்ன விளம்பரம் எடுக்க முடியும் என்பதும் அவளுக்குப் புரியாத புதிராகத்தான் இருந்தது!

நேரம், பணம் எல்லாம் விரயம் என்று எண்ணமிடும்போதே, ஏதோ குத்துவது போன்ற உணர்வில், சாந்திமதி, சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்!

மனோகரன்தான்!

சற்றுத் தள்ளி நின்று, அவளது முக பாவனையைக் கவனித்துக் கொண்டிருந்தான்!

கூர்மையாக!

ஏன் என்று மனம் யோசிக்கும்போதே, அதைச் சற்றும் காட்டிக் கொள்ளாமல், நேராக அவனிடமே சென்று, "ஏதேனும் வேண்டுமா, மனோகரன் சார்?" என்று வினவினாள் சாந்திமதி.

அவனும் அதற்குள் யோசித்து வைத்திருந்தான் போலும். "இவர்களுக்கெல்லாம் ஏற்றதாகச் சாப்பாடு மெனு தயார் செய்ய வேண்டுமே. அம்மாவிடம் உன்னைக் கொஞ்சம் கடன் வாங்கி, அந்த வேலையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிக் கேட்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். உன்னால் செய்ய முடியுமா, சாந்திமதி? அதிலும், என் கதாநாயகி, மோப்ப குழையும் அனிச்சம் பூ மாதிரி! சின்ன விஷயத்திலும், அவளுக்கு மூடு கலைந்து போகும்! எனவே, சாப்பாடு, அவளுக்குப் பிடித்திருப்பது, மிகவும் அவசியம். அவளுக்குப் பிடித்ததையே, எல்லோரும் சாப்பிட்டுக் கொள்ளலாம்!" என்ற அவன், "ஏனென்றால், மோனியின் மகிழ்ச்சிதான் எனக்கு எல்லாவற்றையும் விட முக்கியம்!" என்று அவளது கண்ணை நேராகப் பார்த்துச் சேர்த்துச் சொன்னான்.

விளம்பரப்படம் எடுப்பதில் இத்தனை இருக்கிறதா என்று நினைத்தபடி செல்வநாயகியைத் தேடிப் போனாள் சாந்திமதி.

பெரியவளின் அனுமதியோடுதானே, சமையலாளை இந்த அளவுக்கு அவள் ஏவ முடியும்!

விவரத்தைக் கேட்ட செல்வநாயகிக்கு எரிச்சல் வந்தது!

"மனோ கொடுக்கிற பணத்தை வாங்கிக் கொண்டு, இரண்டு தரம் கையை காலை ஆட்டப் போகிறாள்! இவள் விருப்பப்படி எல்

லோரும் சாப்பிட வேண்டுமா? இந்தப் பையன், தன் இஷ்டத்துக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்க மாட்டான்! எதற்கம்மா வீண் வேலை, நீங்கள் சாப்பிடுவதே எனக்கும் பிடிக்கும். போதும் என்பான். இப்போது பாரேன் அதெல்லாம், அ... அந்த மோனியின் அலட்டலுக்கும் எல்லோரும் ஆட முடியாது. ஏதோ வேளைக்கு ஒரு பதார்த்தம் வேண்டுமானால், அந்த ஒட்டடைக் குச்சிக்குப் பிடித்ததாகப் பண்ணச் சொல்லு! மற்றது வழக்கம் போல இருக்கட்டும்!'' என்றாள் அழுத்தம் திருத்தமாக!

நான் சொன்னது என்ன என்று, உணவு வேளையில் மனோகரன் குதிக்கக் கூடாதே என்று, இதைப் பற்றி அவனிடம் சொல்லப் போனால், "இதையெல்லாம் அம்மாவிடம் எடுத்துப் போக வேண் டுமா?'' என்று அவன் குறைப்பட்டான்!

ஆனால், சொல்லுக்கு நேர் மாறாக, அவனது குரலில் ஒரு திருப்தி தெரியவும் சாந்தமதி குழம்பினாள்.

ஒருவேளை, மனோகரனின் இந்த உணவு மெனுவே சும்மாச் சொன்னதுதானோ? சாந்திமதி இந்த வீட்டில் எந்த அளவுக்கு உரிமை எடுத்துக் கொள்கிறாள் என்று கண்டு பிடிக்கத்தானோ? அதன் மூலமாகத் தாயை அவள் எந்த அளவுக்குக் கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாள் என்று அறிவதற்காகவோ?

அப்படித்தான் இருக்கும் என்று சாந்திமதி தீர்மானித்தாள்.

ஆனாலும், "அந்த மோனிக்குப் பிடித்தமான பதார்த்தம் எது என்று கேட்டுச் சொல்கிறீர்களா?'' என்றும் ஒரு வார்த்தை கேட்டு வைத்தாள்.

"வாயேன், வந்து நீயே கேட்டுவிடேன்!'' என்று அவளை அழைத்துப் போய், அந்த மாடலுக்கு அறிமுகம் செய்து வைத்தான் மனோகரன்.

அவளது முழுப் பெயர், சாந்திமதி எதிர்பார்த்தது போல, மோனிகாதான்! மொழு மொழுவென்ற மெழுகு பொம்மை மாதிரி, ஆனால், ஒல்லியாக இருந்தாள். ஆனாலும், செல்வநாயகி சொன்னது போல ஒட்டடைக் குச்சி என்று அழைக்க முடியாதபடி வழுவழுப்பான தோலுடன், அழகாக இருந்தாள்!

அலட்டலே இல்லாமல், "எனக்காகத் தனியாக எதுவும் தேவை யில்லை, சாந்திமதி! உணவில், காய்கறி, கீரை, பழங்கள் அதிகம் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அது போதும்! மற்றபடி, ஆசைப்படுவதை எல்லாம் உண்டு களிப்பதற்கு, இந்த மாடல் தொழில் இடம் கொடுக்காதே! ஏதோ ஒரு காலத்தில்... ஒரு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, ரசமலாய், ஐஸ்கிரீம், பிரியாணி, நெய்ச்சோறு என்று வயிறு முட்ட விழுங்கப் போவதாகக் கனவு கண்டபடியே, இப்போது காலத்தை ஓட்டுகிறேன்!" என்றாள் அவள் ஏக்கமும் சிரிப்புமாக!

மெய்யாகவே பரிதாபமாக இருந்தது, சாந்திமதிக்கு.

"ஒரே ஒரு நாள் ஆசைக்குச் சாப்பிடலாம்!" என்றாள் அவள் பரிவாக.

"ஐயய்யோ, ஆசை காட்டாதீர்கள்! ஒரு கப் பிரியாணி சாப் பிட்டால் என் இடுப்பு இரண்டு சென்டிமீட்டர் பெரிதாகிவிடும்! அந்த மாதிரி, உடல்வாகு, என்னது! அதனால் வேண்டவே வேண்டாம்! ஆனால், சொல்லுங்கள். இந்த மாதிரி சருமத்துக்கு, நீங்கள் தனியாக என்ன செய்கிறீர்கள்?" என்று அவளிடமே கேட்டாள் மோனிகா.

"என்னையா கேட்கிறீர்கள்?" என்றாள் சாந்திமதி ஆச்சரியத் துடன். "உங்களுக்குத்தான் தோல் வழுவழுவென்று, பளபளப் பாக, ரொம்பவும் அழகாக இருக்கிறது!"

''இருக்காதா பின்னே? இந்த வழுவழுப்புக்கும், பளபளப் புக்கும் நான் செலவு செய்யும் பணத்துக்கும் கிடக்கும் பட்டி னிக்கும், அழகாக இருந்துதானே தீர வேண்டும்! ஆனால், உங் களைப் பார்த்தால், அந்த மாதிரி செயற்கைப் பக்கம் போகிறதே மாதிரித் தெரியவில்லையே! இந்தக் கிராமத்தில் ஏதேனும் இயற்கையாகச் செடி, கொடி, பச்சிலை என்று ஏதேனும் இருக் கிறதா?'' என்று மெய்யான ஆவலுடன் விசாரித்தாள் மோனிகா.

முறுவலித்து, ''நானும் இந்தக் கிராமம் இல்லை, மோனிகா! இங்கே பணிபுரிய வந்தவள்தான். ஆனால், சோப்புக்குப் பதிலாக பயற்ற மாவுதான் எங்கள் வீட்டில்!'' என்றாள் சாந்திமதி, பெற்றவளைப் பெருமையுடன் நினைத்தபடி.

''போச்சுடா! பெண்கள் சேர்ந்தால், அழகுக் குறிப்பு பரிமாறல் தானா? போதும், போதும்! ஏன் மோனி, நாங்கள் ஆண்கள் சேர்ந் தால், தொழில், விளையாட்டு என்று பேசுகிறோமே! நீங்கள் மட்டும் ஏன் இப்படி அழகு, மண்ணாங்கட்டி என்று உபயோகமே இல்லாத விஷயமாகப் பேசுகிறீர்கள்?'' என்று, மோனிகாவின் கையைப் பற்றி, லேசாகத் தன்புறம் திருப்பிக் கேட்டான் மனோகரன்.

''அதெல்லாமில்லை!'' என்று, தொடங்கிய சாந்திமதி மனதில் இருந்ததை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் தயங்கி நிறுத் தியபோது, ''சொல்லுவீர்களே!'' என்று, பட்டென்று அவன் தோளில் ஒன்று போட்டாள் மோனிகா.

''ஏன் மனோ, உங்கள் டைல்ஸ் விளம்பரத்துக்கு, அப்படித் தொழில் பிரபலம் யாரையாவது மாடலுக்குக் கூட்டி வர வேண் டியதுதானே? அழகான பெண் மாடல்தானே வேண்டி இருக்கிறது? அவளையும் பார்லரில் சாடின் குளோ ஃபேஷியல் பண்ணிக்கொண்டு வரச் சொல்வானேன்? அதை விடுங்கள்! வாழ்க்கை முழுவதற்கும்

சேர்ந்து வாழ வேண்டும்! அந்தக் கல்யாணத்துக்குப் பெண் தேடுகிறீர்களே, திறமை, புத்திசாலித்தனத்தையா தேடுகிறீர்கள்? அழகைத்தானே? உங்கள் கண்ணுக்குப் பெண்கள் அழகாக இருக்க வேண்டும்! ஆனால், அந்தப் பெண்கள் அது பற்றிப் பேச மட்டும் கூடாதா? என்னப்பா நியாயம் இது?''

பயந்தவன் போல நடித்து, ''பேசலாம்... பேசலாம்! அதுவும் நீ, என்ன வேண்டுமானாலும், யாரோடு வேண்டுமானாலும் பேசிக் கொண்டே இருக்கலாம்! ஆனால், இரவு உணவுக்கு என்ன வேண் டும் என்று சொல்லி, சாந்திமதியை அனுப்பிவிட்டால், அவள் அந்த வேலையைப் பார்ப்பாள்! இரவுச் சாப்பாடு தாமதமாகி பசியில் யாரும் துடிக்க வேண்டியிராது!'' என்றான் மனோகரன்.

அவன் சொன்னது சரிதான்.

அவள் போய், சமையல்காரம்மாவிடம் சொல்லி, அதற்கானப் பொருட்களைச் சேகரித்துச் சமையல் செய்யத் தாமதம் ஆகத்தான் செய்யும்!

ஆனால், அதற்காக மட்டும் மனோகரன் அவர்களது பேச்சில் குறுக்கிடவில்லை என்று சாந்திமதிக்குத் தோன்றியது!

மோனிகாவோடு, தான் நன்கு பழகுவது அவனுக்குப் பிடிக்க வில்லை! அதற்காகவே விரட்டுகிறான் என்று எண்ணிவிட்டு, தன்னைத்தானே உலுக்கி விட்டுக் கொண்டாள் சாந்திமதி.

சென்ற முறை அவன் நடித்து நாடகம் போட்டதால், இப்போது அவன் என்ன சொன்னாலும், செய்தாலும் உள்ளே வேறு காரணம் இருப்பதாக சந்தேகமாகவே இருக்கிறது. ஆனால், ஒரேயடியாக அப்படிச் சந்தேகப்படக்கூடாது. அவன் இயல்பாகவும் பேசலாமே என்றும் யோசிக்க வேண்டும் என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டாள் அவள்!

ஆனால், விஷயம் அப்படியில்லை என்று, அவளுக்கு அன்றிரவே தெரிய வந்தது!



4

சாந்திமதி அன்று களைப்புற்றிருந்தாள்.

மனோகரனுடைய புதிய விருந்தாளிகளின் தேவைகளை எந்தக் குறையுமின்றிக் கவனிப்பது, முழுக்க அவளது பொறுப்பாகி விட்டிருந்தது!

உணவு, பானம், உறங்கத் தேவையான படுக்கை போன்ற வசதிகள் எல்லாம் பார்க்க வேண்டியிருந்தது!

ஆனால், அந்த ஒரு சில அதிகப்படி வேலைகளைத் தாங்க மாட்டாமல், அவள் ஒன்றும் களைப்படைந்து விடவில்லை!

சாந்திமதி அன்று, மனதளவிலும் களைத்துப் போயிருந்தாள்!

முன்னர் தாய்க்கு அவள் எழுதியிருந்த கடிதத்துக்கு, ஆற, அமர, நிதானமாகப் பெற்றவள் எழுதிய பதில் கடிதமும், அன்றுதான் அவளுக்குக் கிடைத்திருந்தது!

மகள் கிளம்பிய பிறகு, அக்கம் பக்கத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், உறவு மற்றும் நட்பாகப் பழகியவர்கள் பற்றிய செய்திகள் எல்லாம் கடிதத்தில் இருந்தன.

அந்தச் செய்திகளுக்கு ஏற்ற வகையில், பல்வேறு உணர்ச்சிகள் அவளை ஆட்டிப் படைக்க, அதிகப்படியாக இந்த வேலைகளும் சேர்ந்து கொள்ள எப்போதடா படுக்கையில் விழுவோம் என்றிருந்தது அவளுக்கு!

ஆனால், மனோகரன் கூட்டி வந்தவர்களுக்குக் களைப்பு, சோர்வு போன்றவைகள் எல்லாம் வராதோ, என்னவோ உட்

கார்ந்து சாப்பிடத் தொடங்கியவர்கள் எழுந்து கையைக் கழுவும் எண்ணமே இல்லாதவர்கள் போல, அப்படியே அமர்ந்து பேசிக் கொண்டே இருந்தனர்.

மனோகரனின் சொல்லை மறுக்க முடியாமல், அவர்களோடு சேர்ந்தமர்ந்து உணவருந்திய சாந்திமதியாலும் இடையில் எழ முடியாது போயிற்று!

எப்படியும், அவன் தனியே வரும்போது, சேர்ந்து அமர்ந்து உண்பதுதானே? இப்போது மறுப்பதற்குக் காரணமே இல்லையே!

ஆனால், அவர்களது பேச்சு நீண்டு கொண்டே போகவும், அவளால் தாங்க முடியவில்லை!

கடைசியாக, ''நாம் எழுந்த பிறகுதான் பணியாட்கள் சாப் பிடுவார்கள். அதனால்...'' என்று சாந்திமதி இழுத்த பிறகுதான், "ஓ! சாரி!" என்று மற்றவர்கள் வருத்தம் தெரிவித்தபடி எழலாயினர்!

கூடச் சேர்ந்து எழுந்தபோதும், மனோகரனின் முகத்தில் இருந்த பாவம், சாந்திமதிக்கு வியப்பளித்தது!

அவனது கணிப்புதான் சரி என்று ஆனது போன்ற ஒரு தோற் றம்! கூடவே அதில் திருப்தியும்!

முன்பும், மோனிகாவுக்கான உணவுக்கான செல்வநாயகியிடம் அனுமதி கேட்டு வந்தபோதும், இதே தோற்றம்தான்.

என்ன கணிப்பு அது? அதில், அப்படி என்ன திருப்தி?

யோசித்தும், சாந்திமதிக்குப் புரியவில்லை!

சற்று நேரத்துக்குப் பிறகு, அதைப் பற்றி யோசிக்கவும் தோன்றவில்லை! அவ்வளவு அலுப்பு!

ஒவ்வொருவர் அறையிலும் ஒரு கப்பில் பாலும், ஓர் ஆப்பிளும் கொண்டு வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, சத்தமின்றிப் படுக்கப் போய்விட்டாள் அவள்!

ஆனால், படுக்கத்தான் முடிந்ததே தவிர, அவளால் தூங்க முடியவில்லை!

தாழ்வாரத்திலிருந்து வந்த பேச்சுச் சத்தம், அவளைத் தூங்க விடவில்லை!

இன்றைய நவீன வசதிகள் அனைத்தையும் செய்து கொண்ட போதும், முற்றம், தாழ்வாரம், தாழ்வாரத்தில் திறக்கும் அறைகள் என்று வீட்டின் பழையகால அமைப்பை செல்வநாயகி மாற்றவில்லை! ஓட்டுக் கூரைக்குப் பதிலாகத் தளம் போட்டிருந்தார்கள். அவ்வளவே!

எனவே, தாழ்வாரத்தில் நின்று பேசியது. அதுவும், அவளது அறைக்கு நேர் வெளியே நின்று உரையாடியது. சாந்திமதியின் காதுகளில் நன்றாகவே விழுந்து அவளது தூக்கத்தை விரட்டிக் கொண்டே இருந்தது!

கொஞ்சம் தள்ளிப் போய் நின்றாவது பேசக் கூடாதா என்று எரிச்சல் படும்போதுதான், மனோகரன், மோனிகா இருவரின் குரல்கள் மட்டுமே கேட்பது புரிந்தது!

இவர்களுக்கு மட்டும் உறக்கமே வரவில்லையா என்று எண்ணியவாறே கொட்டாவி விட்டபோது, கலீரென்ற மோனிகாவின் சிரிப்பு சாந்திமதியின் மூடத் தொடங்கிய இமைகளைத் தடுத்து நிறுத்தியது!

அதைத் தொடர்ந்த மனோகரனின் உரத்த சிரிப்பு, அவளை எழுப்பியே உட்கார வைத்து விட்டது!

மனோகரனா இப்படிச் சிரிக்கிறான்?

அவனிடம், அவள் முதல் முதலாகக் கண்ட நல்ல விஷயமே, அவனது சிரிப்புதான்! அவுட்டுச் சிரிப்பும் இல்லாமல், அசட்டு நகையாகவும் இல்லாமல், அமர்ந்த குரலில் கம்பீரமாக நகைப்பான் அவன்!

அவன் ஏன், இப்படி அலட்டலாகச் சிரிக்கிறான்? அதுவும், அவளது அறை வாயிலில் நின்று, அவளைத் தூங்க விடாமல் கெடுத்துக் கொண்டு?

சற்று அசட்டுத்தனமாக புகழாரங்களால், அந்த மோனிகாவையும் சிரிக்க வைத்துக் கொண்டு... அவனது பேச்சும், வழக்கத்துக்கு அதிகமாக உயர்ந்த குரலில்தான்!

இதில், என்னவோ இருக்கிறதே!

அப்போதும்... "உன் முகத்தைப் பார்க்கும்போது, மெய்யா கவே, ஸாடின் போலவே தெரிகிறது, மோனி! நல்ல உயர் ரக ஸாடின்! இந்த நிறத்தில், ஸாட்டின் துணி வேண்டும். தோலை உரித்துக் கொடு என்று யாரேனும் கேட்டாலும், ஆச்சரியப்படுவதற்கு இல்லை!" என்றுதான் மனோகரன் சொல்லிக் கொண்டிருந்தான்!

கல்லெனச் சிரித்து, "ஏ... பயங்கரமான ஆளுப்பா, நீ! ஸாட்டின் குளோ பண்ணிக் கொண்டு வா என்று, சென்னையில் இதற்குத்தான் சொன்னாயா?" என்று கிளுக்கியவாறே பதில் சொன்னாள் மோனிகா!

ஸாட்டின் குளோ!

இங்கே எந்த விதப் படப்பிடிப்பும் நடக்காதபோது, மோனிகா வுக்கு எதற்கு, இந்த அலங்காரம்?

அதுவும் படப்பிடிப்புக்குத் தேவையான கருவிகள் எதுவும் இன்றி, நாலே நாலு பேர் மட்டுமாக வந்திருக்கும்போது?

சட்டென்று அவளுக்கு எல்லாம் புரிபட்டுப் போயிற்று!

மனோகரனின் பார்வை, சொல் எல்லாம்!

மோனிகாவை அழகுபடுத்தி அழைத்து வந்தது, உணவு விஷயத்தில் மோனியின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்று அவளிடம் மெனக்கெட்டு வந்து சொன்னது, அவளோடு அதிகக் கலகலப்பாகப் பழகுவது, இப்போது அவளது அறை வாயிலில் நின்று கொண்டு மோனிகாவோடு உரக்கப் பேசிச் சிரிப்பது எல்லாம்!

மோனிகாவோடு பழகிக் காட்டி, சாந்திமதியின் பொறாமையைத் தூண்டுகிறானாம்!

மோனிகாவின் உணவு பற்றி, செல்வநாயகியின் கருத்தைச் சொன்னபோது, திருப்தியாக தோன்றினானே. அதுகூட, சாந்திமதி பொறாமையில்தான் தாயிடம் இந்த விஷயத்தை எடுத்துச் சென்றிருக்கிறாள். தன் திட்டம் வெற்றி பெற்று விட்டது என்று அவன் எண்ணியதால்தான்!

சாப்பிடும்போது இழுத்தடித்ததும், அவளது பொறாமையைத் தூண்டத்தான். சாந்திமதியாக எழுந்திருக்கலாமா என்று கேட்டதும், திட்டம் வெற்றி பெற்று விட்டதாகத் திருப்தி வேறு!

என்ன பைத்தியக்காரத்தனம்!

இந்த மோனிகா மட்டுமல்ல, இன்னும் எத்தனை பெண்களோடு அவன் பழகினாலுமே, அதைப் பற்றி அவள் ஏன் பொறாமைப் படப் போகிறாள்?

வாய்ப்பே இல்லையே!

பாவம்! என்ன ஒரு வீண் வேலை செய்து கொண்டு இருக்கிறான் என்று எண்ணுகையில், சாந்திமதிக்குச் சிரிப்பு வர, அந்தப் புன்னகையுடன் அவள் தூங்கியும் போனாள்.

இந்த அறை வாயிலை விட்டு, வேறெங்கேனும் போய்ப் பேசக் கூடாதா என்று எண்ணியபோது, எரிச்சலும் அமைதியின்மையும் இருந்ததால், அவளது தூக்கம் கெட்டது! ஆனால், அவனது காரணம் புரிந்தபோது, எரிச்சல் மறைந்து போகவே, அவளுக்கு உறக்கமும் வந்துவிட்டது!

ஆழ்ந்த உறக்கத்தின் பின் காலையில் எழுந்தபோதும், சாந்தி மதியின் முகத்தில் அப்படியே இருந்தது!

அந்தப் புன்னகைக்கேற்ற உற்சாகமும் உள்ளத்திலும், உட லிலும் ததும்பியது!

எம்.எஸ்ஸின் பக்த மீரா பாடல்கள் செல்வநாயகிக்குப் பிடிக் கும்! அடிக்கடி வைத்துக் கேட்பதுண்டு! அதில், 'மறைந்த கூண்டில் இருந்து விடுதலை அடைந்த பறவை பந்தாடுதே' என்று ஒரு பாடல் உண்டு!

எதிலிருந்தோ விடுதலை பெற்றாற்போல, உள்ளூர ஒரு துள்ளலோடு அறையை விட்டு வெளியே வந்து பார்த்தால், செல்வ நாயகி காபிக்கு வெளியே வரவே இன்னும் அதிக நேரம் இருந்தது!

உள்ளூர இருந்த துடிப்பில் சும்மா உட்கார்ந்திருக்க முடியாமல், தோட்டத்தில், இங்கும் அங்குமாக, சந்தோஷமாகத் திரிந்தாள் சாந்திமதி.

இந்தப் பூ என்ன அழகாக விரிகிறது! இந்த மரத்தின் இலைகள் காற்றில் என்னமாக சலசலக்கின்றன! கொத்துப் பூவோடு, இந்தக் கொடி எப்படித் தலையாட்டுவது போல அசைகிறது!

ஒவ்வொன்றாக நின்று பார்த்து ரசித்தபோது, என்னவோ முதுகைத் துளைக்கிற உணர்வு!

திரும்பிப் பார்த்தால், மனோகரன்தான்!

நின்று கவனித்துக் கொண்டிருந்தவன், அவள் திரும்பிப் பார்த்ததும் அருகில் வந்தான்!

அவள் முகத்தில் எதையோ தேடியபடி, "என்ன, இரவு முழுவதுமே சரியாகத் தூங்க முடியவில்லையா? அதனால், அதிகாலைக் காற்றில் நடந்தால் புத்துணர்ச்சி கிடைக்கும் என்று வந்தாயா?" என்ற பரிவு போல வினவினான்.

"ஏன்? நான் ஏன் தூங்காமல் இருக்க வேண்டும்?" என்று அவனது கண்களை நேராகப் பார்த்து வினவினாள் சாந்திமதி.

"இல்லை... ரொம்ப நேரம் கழித்துதான், அது உன் அறைப் பக்கம் என்பது நினைவு வந்தது! மோனியும், நானும் பேசிச் சிரித்தது. உன் தூக்கத்தைக் கெடுத்திருக்குமோ என்று... கொஞ்சம் கவலையாக இருந்தது..."

"ஓஹோ!" என்றாள் அவள் புன்னகையுடனேயே!

ரொம்பத்தான் கவலைப்பட்டிருப்பாய் சாரே, என்று உள்ளூரக் கிண்டலாக எண்ணியவாறு, "ஆனால், அனாவசியமாகக் கவலைப் பட்டு விட்டீர்களே, மனோகரன் சார்! முதலில் என் தூக்கம் கொஞ்சம் கலைந்தது நிஜம்தான்! ஆனால், உங்கள் சிரிப்புச் சத்தம் கேட்பதற்கு சந்தோஷமாக இருந்ததா? கூடச் சேர்ந்து முறுவலித்த படியே, அப்படியே தூங்கி விட்டேன்! சிரித்துக் கொண்டே தூங்கியதாலோ என்னவோ, விழித்ததும் ஒரே துறுதுறுப்பாக இருந்தது. துள்ளிக் குதித்து ஆட வேண்டும் போல புத்துணர்ச்சி! அதனால் தான், வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்க முடியாமல், இங்கே வந்து சுற்றிக் கொண்டு இருக்கிறேன்!" என்று உள்ளூர நகைத்தபடி, வேண்டுமென்றே, விலாவாரியாக விவரித்தாள் சாந்திமதி.

அவள் புன்னகையோடே சுற்றுவதைக் கவனித்திருந்ததால், அவளது பேச்சில் ஐயம் கொள்ள வழியில்லை!

மனோகரனின் முகம் கன்றுவதை ஓரக் கண்ணில் பார்க்கையில், அவளுக்கு மேலும் சிரிப்பு வந்தது!

''என்ன இளிப்பு?'' என்று எரிந்து விழுந்தான் அவன்! ''தனியாக இருந்து இப்படிச் சிரித்தால், மறை கழன்ற பைத்தியம் என்று எண்ண மாட்டார்கள்?'' என்று கோபமாகக் கேட்டுவிட்டு வேகமாக அங்கிருந்து போய்விட்டான் அவன்!

திட்டம் போட்டு, நேற்று அறை வாயிலில் நின்று பேசிச் சிரித்த போது நன்றாக இருந்ததுதானே? அதற்கு, இப்போது பட்டுத்தானே ஆக வேண்டும்?

புன்னகை அவள் முகத்திலிருந்து மறையவில்லை என்றாலும், முதலில் இருந்த உற்சாகம் சற்றுக் குறைந்து போனதை, சாந்தி மதியால் உணர முடிந்தது!

எப்படியாவது, மூடைக் கெடுத்து விடுகிறானே!

சற்று நேரத்தில் மோனிகா விடை பெற வரவும், இந்த முறையும், மனோகரன் அவளிடம் கோபத்தோடுதான் கிளம்புகிறான் என்று, சாந்திமதி அறிந்து கொண்டாள்!

எனவே சற்றுப் பொறுத்து, அலுவல் அறையில் சந்தித்த செல்வ நாயகி, ''இவ்வளவு தூரம் என் மகனைச் சமாளிப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! அவனுக்கு அவ்வளவு கோபம்!'' என்று மகிழ்ச்சியோடு கூறியதை அவள் ஓரளவு எதிர்பார்த்தாள் என்றே கூறலாம்.

அதாவது கோபத்தை!

மற்றபடிதான், இந்த முறை தாயின் கணக்குகள் பற்றிய பேச்சே வரவில்லையே!

ஒரு வேளை, சாந்திமதியின் பொறாமையைத் தூண்டிவிட்டு, அதன் பின்னதாக ஏதோ வகையில் இந்தக் கணக்கைக் கொண்டு

வருவதற்கு, மனோகரன் திட்டமிட்டிருக்கலாம்! ஆனால், அவளுக்குப் பொறாமையே தோன்றவில்லை என்றதும், அவனது திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை போலும்!

"என்ன சொன்னார் மேடம்?" என்று வினவினாள் சாந்திமதி.

"அதற்கு முன் இதைக் கேட்டுக் கொள்! பல நாட்களாகவே, உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். இனி, இப்படி மேடம் என்று என்னைக் கூப்பிட வேண்டாம், சாந்திமதி. யாரோ மாதிரி, அந்நியமாகத் தெரிகிறது! உன்னை வீட்டுப் பெண்ணாக, நான் எப்போதோ நினைக்கத் தொடங்கி விட்டேன்! அதனால், ஆன்ட்டி என்று அழை!" என்றாள் பெரியவள்.

சாந்திமதிக்கும், செல்வநாயகியைப் பார்த்தால் வேற்றாளாகத் தோன்றவில்லைதான்! ஆனால், மனோகரன் என்ன சொல்வானோ என்று குழம்பினாள்.

"அவன் என்ன வேண்டுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும்! என்னை, யார் எப்படி அழைப்பது என்பதில் எல்லாம், மனோ குறுக்கிட முடியாது! இனிமேல், நான் உனக்கு ஆன்ட்டிதான்! என்ன?" என்று பெரியவள் அதட்டிக் கேட்கவும், சம்மதமாகத் தலையாட்டினாள், சின்னவள்!

"உங்கள் மகன் என்ன சொன்னார் என்று, நீங்கள் சொல்லவே இல்லையாமே... ஆன்ட்டீ?" என்று அவசரமாகத் திருத்திக் கொண்டு, மறுபடியும் கேட்டாள் அவள்.

"எல்லாம் வழக்கம்போலத்தான்!" என்றாள் செல்வநாயகி அசட்டையாக! "என்ன, கொஞ்சம் கூடுதலாக, நீ இங்கே இருந்தால், இனி வரமாட்டேன்! என்று விட்டுப் போயிருக்கிறான்!" என்று முதியவள் கூறவும், சாந்திமதி அதிர்ந்தாள்!

''என்ன மேடம் இப்படிச் சொல்லிவிட்டார்?''

சாந்திமதியின் முகத்தைப் பார்த்துவிட்டு, செல்வநாயகி சிரித்தாள்!

''அவன் நினைத்தது நடக்கவில்லை அல்லவா? அப்படித்தான் சொல்லுவான்! ஆனால், அதற்காகவே நான், உன் வேலையை உறுதிப்படுத்தப் போகிறேன்! ஆனால், ஒரு நிபந்தனை! நீ இந்த 'மேட'த்தை விட்டுவிட வேண்டும்! இல்லாவிட்டால் பார்த்துக் கொள்!'' என்று விளையாட்டாக, ஒற்றை விரல் தூக்கி மிரட்டினாள் செல்வநாயகி!

லேசாக முறுவலித்தாள் சாந்திமதி!

''உங்களை நான் அழைக்கும் விதத்தில், யாரையும்... உங்கள் மகனைக் கூடக் குறுக்கிட விட மாட்டேன், ஆன்ட்டி! ஆனால், தாய், மகன் உறவு கெடுவதற்கு, நான் காரணமாவதை, என்னால் எப்படிப் பொறுக்க முடியும்? மனோகரன் சாருக்கு, என் மீது இந்த அளவுக்கு வெறுப்பு என்றால், இனியும் நான் இங்கிருப்பது, சரியில்லையே!'' என்றாள் சாந்தமதி வருத்தத்துடன்.

ஆனால், ''வெறுப்பாவது, மண்ணாவது!'' என்றாள் மனோகரனைப் பெற்றவள்! ''மனோவுக்கு எப்போதும், தான் நினைத்தது நடக்க வேண்டும்! படிப்பில் கெட்டிக்காரனாக இருந்து, தொழிலையும் நன்றாக நடத்தவே, ஆசிரியர்கள், அவன் தாத்தா, அப்பா என்று எல்லோரும் அவன் இஷ்டத்துக்கு ஆடி விட்டார்கள்! அப்போது, நானும் அப்படித்தான். விளைவாக, அவனைத் தவிர யாருக்கும், எதுவும் தெரியாது என்ற எண்ணமும் வந்து விட்டது! உன் மறுப்பு, அவனைக் கொஞ்சம் திகைக்க வைத்து விட்டது என்று நினைக்கிறேன்! ஆனால் மனோ கெட்டவனோ, அறிவற்றவனோ கிடையாது! சற்று யோசித்துப் பார்த்துவிட்டு, அவனாக

வருவான்! அதனால், நீ எதையேனும் நினைத்து மனதைக் குழப்பிக் கொள்ளாதே!'' என்றாள் தொடர்ந்து.

அப்போதும் சாந்திமதியின் முகம் முழுமையாகத் தெளியா திருக்கவும், ''தனக்கும் மறுப்பும், எதிர்ப்பும் வரக்கூடும் என்பது, அவனுக்குப் புரியவேண்டும், சாந்திம்மா! இல்லாவிட்டால்... இப்படி யோசித்துப் பார், அவனை மணக்கப் போகிறவள் எவ் வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கும்!'' என்று செல்வநாயகி மேலும் கூற, சின்னவளின் முகம் வியப்பால் மலர்ந்தது.

செல்வநாயகி சொல்வது சரிதான், கணவன் சொல்வதற்கெல் லாம் பணிந்து போக இது என்ன, திரேதா யுகமா, துவாபர யுகமா?

ஆனால், அப்போதும் கூட, சீதை ராமனையும், திரௌபதி தரும புத்திரரையும் எதிர்த்துப் பேசியதாக எழுதி வைத்திருக் கிறார்களே!

அந்தக் காலத்திலேயே அப்படி என்றால், பெரும்பாலும் ஆணுக்குச் சமமாகவே வளர்க்கப்படுகிற இந்தக் காலத்துப் பெண் மனோகரனின் பேச்சுக்கெல்லாம் தலையாட்டுவது நடக்கிற காரியமா?

மாற்று அபிப்பிராயங்களும் இருக்கும் என்று மனோகரன் இப்போதே புரிந்து கொள்வதுதான், அவனுக்கே நல்லது! கூடவே, இந்தப் பெண்ணுக்கும்!

சாந்திமதியின் விரிந்த கண்களைப் பார்த்துவிட்டு, ''என்ன?'' என்று செல்வநாயகி விசாரித்தாள்.

''நான் இந்த மாதிரி யோசிக்கவே இல்லை, ஆன்ட்டி!''

''அதற்காகத்தான் யோசித்துப் பார் என்று சொன்னேன்! ஆனால், என்ன செய்வது? உங்கள் தலைமுறைக்குத்தான் யோசிக்கிற

பழக்கமே இல்லையே! ஆனால், அதற்கும் ஒரு காரணம் இருக் கிறது!'' என்றாள் பெரியவள் ரொம்ப சீரியசாக.

சந்தேகமாக நோக்கி, ''என்ன காரணம்?'' என்று கேட்டாள் சாந்திமதி.

''அதுதான், யோசிப்பதற்கு மிகவும் அவசியமான பொருள்... மூளை... அது இல்லையே!'' என்று. அதே சீரியசான குரலில் சொன்ன போதும், அதற்கு மேல் அடக்க மாட்டாமல், செல்வ நாயகிக்கே சிரிப்பு பீறிக் கொண்டு வந்துவிட்டது!

செல்வநாயகியின் குரலிலேயே இப்படி ஒன்றை எதிர்பார்த் திருந்த சாந்திமதி உடனேயே, ''நீங்கள் சொல்வது, ரொம்ப சரிதான், ஆன்ட்டி! சரி, நமக்குத்தான் இல்லையே. அவசரத்துக்கு, இங்கே யாரிடமாவது கொஞ்..சம், கொஞ்சமே கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று சுற்று முற்றும் தேடிப் பார்த்தால், அக்கம் பக்கம் யாரிடம் இவ்வளுண்டு மூளை கூட இல்லையே, ஆன்ட்டி!'' என்று பதில் கொடுத்துவிட, செல்வநாயகி, இன்னமும் அதிகமாகச் சிரித்தாள்!

பிறகு வயிற்றைப் பிடித்துக் கொண்டு, ''தைரியத்தைப் பாரேன்! உன்னை விட இவ்வளவு பெரியவள், எனக்கே மூளை இல்லை என்கிறாயா? என் மகனுக்குக் கோபம் வந்ததில், ஆச்சரியமே கிடையாது என்று, இப்போதல்லவா தெரிகிறது?'' என்றாள், தொடர்ந்து.

மனோகரனின் பேச்சு வரவும், மீண்டும் சாந்திமதியின் முகம் வாடியது!

''ஆனாலும், மனோகரன் சார் தொடர்ந்து இங்கே வராமல் இருந்தால், நான் போய் விடுகிறேன், ஆன்ட்டி!'' என்றாள் அவள்.

''அதற்கு அவசியமே இராது!'' என்றாள் பெரியவள் வெகு நிச்சயமாக! ''ஆனால், எதற்காகவும், நீ இந்த வீட்டை விட்டுப் போகவே கூடாது!''

ஆனால், அவனது சொல்லை வலியுறுத்துகிறவன் போல, அடுத்த சனிக்கிழமையன்று மனோகரன் சொந்த ஊருக்கு வரவே இல்லை!

சாந்திமதி கலங்கிப் போனாள்!

ஒரு குடும்பம் அழிந்து போகாமல் நல்லபடியாக வாழ வேண்டும் என்பதற்காக, பிறந்து வளர்ந்த ஊரை விட்டு, அன்பான பெற்றோரையும், பிரியமான தம்பி தங்கையையும் விட்டுப் பிரிந்து வந்தவள் அவள்!

இங்கே, இன்னொரு குடும்பத்தில் பிரச்சினை ஏற்படக் காரணம் ஆகி விடுவாளா?



5

தாயிடம் சொல்லிவிட்டுப் போனது போல, தான் இங்கிருக்கும் வரை, மனோகரன் இங்கே வராமலே இருந்து விடுவானோ என்று, அவ்வப்போது ஒரு சஞ்சலம் சாந்தி மதியின் மனதில் தோன்றிக் கொண்டேதான் இருந்தது!

அப்படி அவன் பிடிவாதமாக இருந்தால், அவள் அங்கிருந்து சென்றுதானே ஆக வேண்டும்?

அங்கிருந்து கிளம்புவது பற்றிய எண்ணம் தோன்றவும், பெற்றவர்கள், தம்பி, தங்கையைப் பற்றிய நினைப்பும், அவளுக்கு அடிக்கடி வரலாயிற்று! அவர்களையெல்லாம் பார்க்க வேண்டும்,

அவர்களோடு பேச வேண்டும், விளையாட வேண்டும் என்றெல்லாம்!

ஆனால், அங்கே போய் விடலாம் என்று தைரியமாகத் திட்டமிடவும் அவளால் முடியவில்லை!

அவளுடைய அன்னையின் கடிதத்தைப் படித்ததில் இருந்து, அங்கே செல்லவே கூடாது என்றிருந்தது மாற்றி விட்டதுதான்! என்றாலும் போவது பற்றி உற்சாகமாகத் திட்டமிட, அவளால் முடியவில்லை!

ஏன்? போகத் தயக்கம் என்றுகூடச் சொல்லலாம்!

ஏதோ இங்கே வந்ததில் இருந்து, மனதுக்கு எவ்வளவோ நிம்மதியாக... ஏன் சந்தோஷமாக இருப்பதாகக் கூடச் சொல்லலாம்! என்றாலும் போவது பற்றி உற்சாகமாகத் திட்டமிட, அவளால் முடியவில்லை!

ஆனால், இந்த வீட்டில் அவளால் தகராறு ஏற்பட்டால், அப்புறம் அவள் போய்த்தான் தீர வேண்டும்! அவளிடம் அன்பாக இருக்கிற ஒரே காரணத்துக்காக, செல்வநாயகி ஆன்ட்டி வருந்தும் நிலை வரவே கூடாது!

ஆன்ட்டி வருந்தினால், அதை அவளால் கொஞ்சமும் தாங்க முடியாது!

வழக்கமாக மனோகரன் வருகிற மாலை நேரம் வரை, சாந்திமதி அப்படி ஒன்றும் அதிகமாகக் கவலைப்பட்டு விடவில்லை!

செல்வநாயகியைப் போலவே, மனோகரனின் தாய்ப் பாசத்தில், அவளும் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தாள்!

ஆனால், இரவு எட்டு மணி நெருங்கவும், அவளது நெஞ்சுக் குள் பிசையத் தொடங்கி விட்டது!

அவளது மன நிலையை போல, தூரத்து இடி முழக்கங்களோடு லேசாக மழையும் பெய்யவும், "ஆன்ட்டி, உங்கள் பிள்ளை சொன் னதிலேயே பிடிவாதமாக இருந்து விட்டார் போலத் தெரிகிறதே! இன்னும் வரவில்லையே, ஆன்ட்டி!" என்று, கவலையுடன் கூறினாள் அவள்!

ஆனால், செல்வநாயகி அம்மாள் சற்றும் கலங்கவே இல்லை!

"இந்த வாரம் வராவிட்டால், அடுத்த வாரம் வந்து விட்டுப் போகிறான்! கடுகளவு சமாச்சாரம்! அதற்கு ஏன், பூசணிக்காய் அளவுக்கு இவ்வளவு கவலைப்படுகிறாய்?" என்று, கேலி போலக் கேட்டு, சாந்திமதியின் முகத்தை உற்றுப் பார்த்தாள் அந்த அம்மாள்.

"எப்படி வருவார்?" என்று ஆத்திரத்துடன் கிறீச்சிட்ட சாந்தி மதி, தன் நிலை உணர்ந்து, சட்டெனக் குரலைத் தணித்தாள். "என்ன ஆன்ட்டி, இவ்வளவு சாதாரணமாகக் கேட்கிறீர்கள்? மனோகரன்.. சார் சொல்லிவிட்டுப் போனது என்ன என்பது நினைவில்லையா? நான்... இங்கே இருக்கும் வரை, அவர் வரவே போவதில்லை என்றாரே! அதனால்தான் வராமல் இருக்கிறார்" என்று வருத்த மாகக் கூறினாள்.

"அது கோபத்தில் சொன்ன வார்த்தை, சாந்திம்மா! அவனது எண்ணம் நிறைவேறாத கோபம்! அங்கே போய், அவனே, அதை மறந்திருப்பான்...!"

"பின்னே வரவில்லையே!"

"எப்போதுமே, இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு முறை அவன் வருவதுதான், பழக்கம்? இப்போதும் அதைப் போல..."

"மூன்று தடவை, ஒவ்வொரு வாரமும் தொடர்ந்துதானே வந்தார்? இந்த வாரம் மட்டும்தானே வரவில்லை?"

"இந்த வாரம், ஏதேனும் வேலை இருந்திருக்கும்!"

"என்ன பெரிய வேலை? அதை போன் பண்ணிச் சொல்லி யிருக்கலாம் அல்லவா?"

"நிஜமாகவே பெரிய வேலையோ, என்னவோ? போன் பண்ணக்கூட அவகாசம் இல்லாத அளவு பெரிய வேலையாக இருக்கலாம்!" என்று, அலட்டிக் கொள்ளாமல் செல்வநாயகி பதில் கூறவும், சாந்திமதி திகைத்தாள்!

ஒரு தாயாக இருந்து கொண்டு, இப்படி அக்கறையற்று, செல்வ நாயகியால் எப்படி முடிகிறது?!

அல்லது, அவள் வருத்தப்படப் போகிறாளே என்று, இப்படிக் கவலைப்படாதது போல நடிக்கிறாளா? நடிப்பு இதில் மட்டும்தானா?

ஒரு வேளை, மகன் முன்பே போன் செய்து, அவனது நிபந் தனையை நினைவுறுத்த, அம்மா, மகன் இருவருக்கும் இடையே, ஏற்கனவே தகராறு நேர்ந்திருக்குமோ?

மகன் வரப்போவதில்லை என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டதால்தான், இப்படி விட்டேற்றியாக இருப்பது போலக் காட்டிக் கொள்கிறாளோ இந்த அன்பான பெண்மணி?

வந்த அன்றிலிருந்து, ஊதியத்துக்கு வேலை பார்க்க வந்தவள் என்பதே இல்லாமல், வீட்டுப் பெண்போல உடனமர்த்தி உண் பதும், டீ.வி. பார்ப்பதுமாக, அன்பு காட்டி வருகிறாள், செல்வ நாயகி அம்மாள்.

ஆன்ட்டி என்று அழைக்கச் சொன்னதே, அந்த அன்பினால் தானே?

சாந்திமதிக்கும், தாயைப் பிரிந்த துயரம் அதிகம் தாக்காததன் காரணம், செல்வநாயகி காட்டிய அன்புதான்!

அவளுக்கும் செல்வநாயகியைப் பிடித்துப் போகவே, வேடிக்கையும், விளையாட்டுமாக, இது ஓர் உரசல் இல்லாத, உள்ளன்புடன் கூடிய உறவாக அமைந்தது!

அந்த வகையில், அவளுக்கும் மிகவும் மகிழ்ச்சிதான்!

ஆனால் அதற்காக செல்வநாயகிக்குத் தன் மகனோடு தகராறு ஏற்படுமானால், அதை, அவளால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதும் நிச்சயமே!

அந்தத் தகராறைக் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்வது என்றால், அப்புறம் சாந்திமதியின் அன்புக்கு என்ன அர்த்தம்?

நீ சொன்னது பொய்யா, மெய்யா என்று பிரியமான ஒரு மூத்த தலைமுறையிடம் கேட்க வேண்டும்!

மனதைத் திடப்படுத்திக் கொள்ள ஒரு பெரிய மூச்சை எடுக்கும் போது, பளிச்சென்ற அடுத்தடுத்த மின்னல்களோடு, இடியும், மத்தளமாக முழங்கியது!

இடிச் சத்தம் சற்று அடங்கியதும், ''மனோ வரவில்லை, வரவில்லை என்று அவ்வளவு கவலைப்பட்டாயே! இந்தக் காற்று மழையில், அவன் காரில் வராதிருந்ததே நல்லது அல்லவா?''

''காற்று வீசும் திசையைப் பார்! அங்கிருந்துதான் மழையும் காற்றும் வந்து கொண்டு இருக்கிறது! சென்னைப் பகுதியில் ஏற்கனவே மழை என்று கூட, மனோ கிளம்பாமல் இருந்திருக்கலாம் அல்லவா?'' என்றாள் செல்வநாயகி.

"ஆமாம்..." என்று சொல்லும்போதே, சாந்திமதியின் முகம் வெளுத்தது! "ஏன் ஆன்ட்டி, ஒரு வேளை மனோகரன் சார் கிளம்பி மழையில் எங்காவது மாட்டிக் கொண்டிருந்தால்? மழையில் சில சமயம் காரில் பிரேக் கிடைக்காது என்பார்களே!" என்று கவலைப்படத் தொடங்கினாள் அவள்.

கண்கள் விரியப் பார்த்த செல்வநாயகிக்குச் சிரிப்பு வந்தது.

"என் பிள்ளை அப்படி ஒன்றும் அசடன் அல்ல. சாந்தி! புயல், மழை பார்த்துதான் பயணமே தொடங்குவான்! இடையில் மழை வலுக்கத் தொடங்கினால், பயணத்தை நிறுத்தி, எங்காவது தங்கி விடுவான். அதனால், அவனைப் பற்றிக் கவலைப்படத் தேவையே கிடையாது!" என்று செல்வநாயகி அமைதியாகச் சொன்னது, சாந்திமதிக்கும் ஆறுதலை அளித்தது!

ஆனாலும், "கிளம்பினார், கிளம்பவில்லை என்று ஒரு போன் செய்து சொல்லிவிட்டால், உங்களுக்கு நிம்மதியாக இருக்கும் அல்லவா?" என்று சொல்லாதிருக்க அவளால் முடியவில்லை!

அந்த நிம்மதி தேவைப்பட்டது, முக்கியமாக அவளுக்குத்தான்!

தன்னால்தான் மனோகரன் வரவில்லையோ என்ற துணுக்கம், இன்னும் அவளுக்குத் தீரவில்லையே! போனில் என்ன பேசினாலும், அவனது மனப்போக்கு எப்படி இருக்கிறது என்று கண்டு கொள்ளலாம் அல்லவா?

ஆனால், செல்வநாயகி வேறு சொன்னாள்!

"என் நிம்மதிக்காகத்தான் மனோ வரும்போது போன் செய்வதில்லை! முன்னெல்லாம், அதாவது, அவன் அப்பாவை இழந்து, நான் இங்கே வந்த புதிதில், அவன் அங்கே கிளம்பியதுமே போன் செய்வான். ஆனால் வரவேண்டிய நேரத்துக்கு, முன்னே

பின்னே வந்தால், தவித்துப் போவேன், தாமதமாக வந்தால், கேட்கவே வேண்டாம்! முன்னதாக வந்தாலும், ஏதோ ஓர் இடத்தில் அதிக வேகமாக வந்திருக்கிறான்தானே என்று கலங்கு வேன்! பார்த்துவிட்டு, அவன் பக்கத்திலேயே வைத்து, வேகமாக, மெதுவாக எல்லாம் ஓட்டிக் காட்டி, அவன் காரை ஓட்டுவது பற்றிக் கவலைப்பட வேண்டியது இல்லை என்ற நம்பிக்கையை ஊட்டிவிட்டு போன் செய்வதை மனோ நிறுத்திவிட்டான். அதாவது, பயணம் சமயம் மட்டும்தான்! மற்றபடியும், சுகம், சுகமா தவிர பேசுவதற்கு என்ன இருக்கிறது? நேரில் பார்த்தால், இந்தக் குருவி, அந்தப் பூ என்று நிறைய பேசலாம்! போனில் அதையெல் லாம் சொல்ல முடியுமா? மற்றது... என் பணக் கணக்கு பற்றி, நான் சொல்ல, மாட்டேன்! தொழில் பற்றிப் பேசினால், எனக்குப் புரி யாது என்பது அவன் எண்ணம்! மனோவுக்கு ஒரு மனைவி வந்து, பிள்ளை குட்டி என்று ஆன பிறகுதான், போனில் பேசுவதற்கு நிறைய விஷயம் கிடைக்கும் என்று தோன்றுகிறது!''

''பின்னே மனோகரன் சாருக்குச் சீக்கிரமே திருமணத்தைச் செய்து வைத்து விட வேண்டியதுதானே, ஆன்ட்டி?'' என்று ரொம்ப சாதாரணமாகத் தீர்வு சொன்னாள் சாந்திமதி.

சற்று வியந்து நோக்கிவிட்டு, ''நீ சொன்னால், செய்ய வேண் டியதுதான்! ஆனால், என்ன திடீரென்று, இப்படி ஒரு யோசனை?'' என்று காரணம் விசாரித்தாள் பெரியவள்.

''நான் சொல்லிச் செய்வானேன்? எப்படியோ, நீங்கள் இந்த விதமாக யோசியாது விட்டிருக்கிறீர்கள்! அவ்வளவுதான்! எண் ணிப்பாருங்கள், திருமணமாகி, மனைவி குழந்தை என்று இருந்தால், சார் இன்னும் கொஞ்சம் நீக்குப் போக்காக இருப்பாரில்லையா? இந்தப் பிடிவாதம், கோபம் இராது! அதனால், முதலில் அந்த

வேலையைப் பாருங்கள்!'' என்று சீரியசாக ஆலோசனை கூறினாள், சாந்திமதி!

அவளை யோசனையாகப் பார்த்துவிட்டு, ''நான் 'ஆன்ட்டி!' என் பிள்ளை மனோகரன் மட்டும் உனக்கு 'சாரா?' என்று கேட்டாள் செல்வநாயகி.

''பேச்சை மாற்றாதீர்கள், ஆன்ட்டி! மனோகரன் சாருக்கு இன்னமும் ஏன் திருமணம் செய்யாமல் வைத்திருக்கிறீர்கள்?'' என்று மீண்டும் அதிலேயே நின்றாள் சின்னவள்.

''மனோ என்ன சின்னப் பையனா, இந்தப் பெண் கழுத்தில் தாலியைக் கட்டுடா என்று நான் அதட்டுவதற்கும், அதற்குப் பணிந்து அவன் நடப்பதற்கும்? அதெல்லாம். துரை, அவராக நினைத்தால்தான் நடக்கும்! எப்போது, யாரோடு என்பதெல்லாம்.. அடுத்து அவன் வரும்போது, நீயே கேட்டுவிடேன்! அவசரம் என்றால், அவன் போன் பண்ணும்போது கூடக் கேட்கலாம்!'' என்று விட்டு, சின்னவளின் முகம் போன போக்கைப் பார்த்துச் சிரித்தாள் செல்வநாயகி.

''கிண்டலா, ஆன்ட்டி? இப்போதைக்கு, நான் இங்கே இருந்தால் வரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்! அப்புறம், நான் இங்கே இருக்கிற வரையில், போனும் பண்ணமாட்டேன் என்று விடுவார்...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, அவளைச் சீண்டுவது போல, டெலிபோன் குரலெழுப்பியது!

'காலர் ஐடி'யில் எண்ணைப் பார்த்தால், மனோகரனேதான்!

''ஆன்ட்டி, ஆன்ட்டி, மனோகரன் சார்தான்! வந்து எடுத்துப் பேசுங்கள்!'' என்று அவசரமாக நகர்ந்து கொண்டாள் சாந்திமதி!

' ஏன்? நீயே பேசி, உன் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள லாமே!'' என்று கிண்டலடித்துச் சிரித்தவாறே, போனை எடுத்தாள், செல்வநாயகி.

ஆண்டவனிடம் முறையிடுவது போல வேடிக்கையாகக் கண்களையும், கைகளையும் மேலே உயர்த்திக் காட்டியபோதும், சிறு கவலையும் தயக்கமுமாக அங்கேயே நின்றாள் சாந்திமதி.

அவளது தயக்கத்தைக் கவனித்து, 'பரவாயில்லை, இரு' என்பது போல சைகை செய்துவிட்டு, மகனோடு பேச்சைத் தொடர்ந்தாள் செல்வநாயகி.

''அப்படியா? சரி... யாரையெல்லாம் சொன்னாய்? சமையல் காரம்மா... காரோட்டி... வேலு... என்னது? சரியாகக் கேட்கவில்லை... ஓ சாந்திமதி என்றாயா? அவளைப் போகச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருந்தாய் அல்லவா? அதனால்தான், நான் அவள் பெயரை எதிர்பார்க்கவில்லை!.. அப்படியா? நீ சொன்னால், சரியாகத்தான் இருக்கும்! சரிப்பா, சரி! கூட்டி வருகிறேன்! அதுதான் சொன்னேனே, கட்டாயம் கூட்டி வந்து விடுகிறேன். மறுத்தாலும் கட்டாயப்படுத்திக் கூட்டி வந்து விடுகிறேன்! உடனே கிளம்புகிறோம்! இல்லை. தாமதம் செய்ய மாட்டோம்! கிளம்பும் போது பேசுகிறேன்!'' என்று விட்டு ரிசீவரைக் கீழே வைத்தாள் செல்வநாயகி.

''என்ன ஆன்ட்டி? உடனே, எங்கே கிளம்ப வேண்டும்?'' என்று சாந்திமதி விசாரித்தாள்.

''சென்னைக்குத்தான்! வேலை விஷயமாக டெல்லிக்குப் போயிருந்தானாம்! வந்து பார்த்தால், மேற்குப் பகுதி மழையால், இங்குள்ள அணைகளுக்கு நீர் வரத்து அதிகமாம்! அதனால்,

அணைகளில் இருந்து நதிகளில் அதிக நீரை விடப் போகிறார் களாம். நம் வாய்க்கால் மட்டம் எல்லாம் உயர்ந்து, தண்ணீர் ஊருக்குள் வர வாய்ப்பு இருக்கிறதாம்! அதனால், ஓரளவு முக்கியப் பொருட்களை மச்சில் போட்டுவிட்டு, உடனே கிளம்பி, சென்னைக்கு வரச் சொன்னான்.

"நான் பேசியதைக் கேட்டாய் அல்லவா? உன்னையும் கூட்டிக் கொண்டுதான் வர வேண்டுமாம்! சந்தேத்துக்கு இரண்டு தடவை கேட்டு விட்டேன்!" என்று கண் சிமிட்டி முறுவலித்தாள் மனோ கரனுடைய அன்னை!

சாந்திமதிக்குப் புரிந்தது!

வேண்டுமென்றே மகனை இரண்டு தரம் சொல்ல வைத்திருக் கிறாள், இந்த ஆன்ட்டி!

அவளை வேலையை விட்டுத் தூக்கச் சொன்னதற்குத் தண் டனை!

"நீங்கள் பொல்லாதவர்கள், ஆன்ட்டி!" என்றாள் அவள்!

"அவனும் அதைத்தான் சொன்னான்!" என்று சிரித்தாள் செல்வநாயகி.

சிரித்துவிட்டு, "உடனே சாமான்களை ஒதுக்கி வைத்து விட்டுக் கிளம்பா விட்டால், நான் இன்னமும், ரொம்ப பொல்லாதவளாக ஆகி விடுவேன், தெரியுமா?" என்று கண்ணை உருட்டிக் கையை ஓங்கிக் காட்டவும், "ஐயோ, பயம்... மாய் இருக்கிறதே!" என்று சாந்திமதியும் கூடச் சேர்ந்து நகைத்தாள்.

பிறகு, "சொல்லுங்கள் ஆன்ட்டி, மச்சிலுக்கு எதையெல்லாம் கொண்டு போடுவது? மற்றதை எப்படி அடுக்குவது?" என்று வினவினாள்.

இரவு நேரம் என்றபோதும், அடுத்த சில மணி நேரம், அந்த வீட்டில் வேகமாக வேலை நடந்தது.

வேலை நடக்கும்போதே, சாந்திமதிக்குச் சந்தேகம்!

"ஏன் ஆன்ட்டி வாய்க்கால் நிரம்பித் தண்ணீர், இந்த வீட்டுக்குள் புகுந்து விடுமா? வீடு உயரத்தில்தானே இருக்கிறது?"

"லேசில் வராது! நான் அறிய வந்ததும் இல்லை! ஆனால், முன்னொரு காலத்தில், சுமார் நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு பேய் மழை பெய்தபோது, அப்படித்தான், அணை உடைப்பெடுத்து, திடீரென்று தண்ணீர் வந்ததாகச் சொல்லுவார்கள்! ஊர் முழுவதும் முழங்கால் அளவுத் தண்ணீராம்! நம் தோட்டம், வீடு, எல்லாம், வாய்க்காலுக்கு ரொம்பப் பக்கமாக இருப்பதால், இன்னும் அதிகத் தண்ணீர்! அதற்குப் பிறகு, வாய்க்கால் கரையை உயர்த்தி, பழைய வீட்டையும் இடித்துப் புதிதாகவே உயரத்தில் கட்டினார்களாம்! என் மாமியார் சொன்னார்கள்! இப்போதும், அணை உடைப்பெடுத்து விட்டால், கொஞ்சம் பயம்தான் என்கிறார்கள்! அதனால், 'வருமுன் காப்பானாக' மனோ நம்மைக் கிளம்பச் சொல்லுகிறான்!"

"அது சரி! ஆனால், சென்னைக்குச் செல்லும் வழி? அங்கேயும் மழை இருக்கக் கூடும். அதனால்தான் உங்கள் அருமைப் பிள்ளை முன்னெச்சரிக்கையோடு வரவில்லை என்று சொன்னீர்கள்! நாம் போகிற வழியும் அதுதானே?"

"அந்தப் பக்கம் பிரச்சினை இல்லை என்கிறான். இங்கே கூட, அணை திறப்பதால்தான் கவலையாம்! அத்தோடு, டிரைவரிடம் வழியெல்லாம் வரைபடம் போல, என் பிள்ளை தெளிவாகச் சொல்லியாயிற்று! எல்லாம் சரியாக இருக்கும்! வா. வேலையைப் பார்ப்போம்!"

அவ்வப்போது கிண்டலடித்தாலும், மகனின் செயற்பாடுகளில், தாய்க்கு மிகவும் நம்பிக்கை இருப்பது, நன்றாகத் தெரிந்தது!

புத்தகங்கள், டீ.வி., மின் சாதனங்கள், மற்ற முக்கியப் பொருட்கள் எல்லாம் மேல் மாடியில் அடைக்கலம் புகுந்தன.

மாடியிலேயே பொங்கிச் சாப்பிட வசதியாக அறைகள் இருந்தன.

பூட்டிக் கிடந்த அந்த அறைகளைத் திறந்து சாமான்களை அடுக்கியபோது, "வெள்ளமே வந்தால்கூட, இங்கேயே பாதுகாப் பாக இருக்க முடியும் போல இருக்கிறதே, ஆன்ட்டி! பின்னே ஏன் இங்கிருந்து போக வேண்டும்?" என்று கேட்டாள் சாந்திமதி.

"என்னம்மா நீ? இரண்டு பாதுகாப்பற்ற பே...தைப் பெண் களை, ஆபத்திலிருந்து காப்பாற்ற என் பிள்ளை அரும்பாடு படுகிறான்! நீயானால், அந்தப் பெருமை அவனுக்குக் கிடைக் காமல் கெடுக்கப் பார்க்கிறாயே!" என்று பாவனையோடு செல்வ நாயகி சொல்ல, கலீரென்று சிரித்த சாந்திமதியின் முகம், விரைவி லேயே மாறியது!

"சே, பாவம் ஆன்ட்டி! அங்கே தனியாக இருந்து, அம்மாவுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று, மனோகரன் சார் மனதால் என்ன பாடு படுகிறாரோ? இங்கே இருந்து கொண்டு, அதைக் கிண்டல் செய்வது தப்பு! சீக்கிரமாகக் கிளம்பிப் போவோம்! உங்களைக் கண்ணாலே பார்த்த பிறகுதான், அவருக்கு நிம்மதியாக மூச்சு விட முடியும் என்று நினைக்கிறேன்!" என்றாள் அவள், சற்றுப் பரிவான குரலில்!

"என்னை மட்டுமா பார்க்க வேண்டும்? உன்னையும்தான்! உன்னைக் கட்டாயம் கூட்டி வந்தாக வேண்டும் என்று, திரும்பத் திரும்பச் சொன்னானே!" என்று ஒரு கேலிப் பார்வையைச் சின்ன

வளிடம் வீசி விட்டு, அலமாரிக் கதவைச் சாத்தினாள் செல்வ நாயகி.

"ஆஹா!" என்று மீண்டும் சிரித்தாள் சாந்திமதி! "ஆன்ட்டி, இன்று என்னைச் சிரிக்க வைத்தே வயிற்று வலிக்காரியாக ஆக்கி விட வேண்டும் என்று திட்டமா? என்னைப் பார்த்து, அவருக்கு நிம்மதியா வரும்? இருக்கிற நிம்மதிக்கு இறக்கை முளைத்துப் பறந்து போகாமல் இருந்தால், அதல்லவா அதிசயம்!" என்றாள் தொடர்ந்து!

"என்ன மாதிரி அதிசயம் நடக்கிறது என்றுதான் பார்ப்போமே! எப்படியும், அவன்தானே, உன்னைக் கட்டாயமாகக் கூட்டி வரச் சொன்னான்?"

"வேறு என்ன செய்ய முடியும், ஆன்ட்டி? உங்களிடம் வேலை செய்ய, வெளியூரில் இருந்து வந்திருக்கும் சின்ன்...னப் பெண், நான்! நீங்கள் சொன்ன மாதிரி, 'பாவம், பேதைப் பெண்!' எனக்கு ஏதேனும் நேர்ந்தால், யார் பொறுப்பு? என் பெற்றோர் உங்களைத் தானே கேட்பார்கள்? பதில் சொல்ல வேண்டுமே! அதற்குப் பயந்து கூட்டி வரச் சொன்னால், என்னைப் பார்த்து நிம்மதியாவது, இன்னொன்றாவது? போங்கள், ஆன்ட்டி!" என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள் சாந்திமதி.

"இதில் எனக்குப் புரியாத விஷயம் என்ன என்றால், இருபத்தி யிரண்டு வயது, படித்த, கெட்டிக்காரி என்று பேர் வாங்கிய ஒருத்தியை, இந்த வாய்க்கால் நீர் பெருகினால், இங்கிருக்கும் மற்றவர்களைப் போலத் தற்காத்துக் கொள்ளத் தெரியாத அசடு என்று எண்ணிக் கூட்டி வரச் சொல்லுகிறாரே என்பதுதான்! என் 'பயோ டேட்டா'வை மனோகரன் சாரும் பார்த்திருக்கிறார்தானே, ஆன்ட்டி? எனக்கு நீச்சல் தெரியும் என்றுகூட, அதில் குறிப்பிட்டிருக்

கிறேனே! பிறகு ஏன்? என்று, சிறு குழப்பத்துடன் தொடர்ந்து கூறினாள்.

யோசனையாக நோக்கிவிட்டு, ''எப்படியும், உன் வேலை, எனக்குத் துணையாக எப்போதும் என்னுடன் இருப்பதுதானே? அதை, இங்கே மட்டும்தான் செய்யலாம். சென்னையில் கூடாது என்று ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டாள் செல்வநாயகி!

''ஐய்யோ, அப்படியெல்லாம் கிடையாது, ஆன்ட்டி! என்னைக் கண்டாலே மனோகரன் சாருக்கு ஆகாதே! அவரது இடத்திலேயே இருக்கும்போது, என்ன வாங்கு, வாங்கப் போகிறாரோ, என்று அந்தக் கவலைதான்!'' என்றாள் சாந்திமதி.

''என்னோடு வருகிறவள் நீ! உன்னை, யார் என்ன செய்ய முடியும்?'' என்று செல்வநாயகி நிமிர்வுடன் கூறவும், சாந்திமதி ஓரளவு அமைதியடைந்தாள்!

ஆனால், இவ்வளவு பேசிய செல்வநாயகி, சென்னைக்கு வந்து சேர்ந்த மறுநாளே, ''இங்கே எனக்குத் துணை தேவையில்லை! அதனால், இதைச் சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக எடுத்துக் கொண்டு, நீ உன் வீட்டாரைப் போய்ப் பார்த்துவிட்டு வா!'' என்று சாந்திமதியை அவளது வீட்டுக்குப் போகச் சொன்னாள்!

வீட்டுக்குப் போவதா?

சாந்திமதி திகைத்தாள்!



## 6

சென்னைக்குக் கிளம்பும்போது, சாந்திமதிக்கு இருந்த ஒரு பெரிய கவலை, மனோகரன் அடுத்து என்ன பிரச்சினை கிளப்புவானோ என்பதுதான்!

கிராமத்து வீட்டுக்கு அவன் வந்த மூன்று சமயங்களிலும், அவன் ஒவ்வொரு விதமாக, அவளைத் தனக்குப் பணிய வைக்க முயன்றதை, அவள் மறக்கவில்லை!

தாயின் வரவு செலவுக் கணக்குகளை அவளிடம் இருந்து பெறுவது, அவனது முக்கியக் குறிக்கோள்!

அதற்காக, ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமாக அணுகு முறை!

இந்த மழை, வெள்ளத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இன்னொரு முயற்சி செய்யப் போகிறான் என்றுதான் அவள் உள்ளூர எண்ணினாள்.

எனவே, அவனது சொல், செயல் எல்லாவற்றையுமே எச்சரிக் கையோடு கவனிக்கவும் செய்தாள்.

ஆனால், புன்னகையோடு வரவேற்றதிலிருந்து, மனோகரன் ஒரு கௌரவமான வீட்டுத் தலைவனாக நடந்து கொண்டானே தவிர, பார்வையில் கூட அவளால் குற்றம் கண்டுபிடிக்க முடிய வில்லை!

குற்றமென்ன? வீட்டுத் தலைவனின் இயல்புக்கு மாறான எதுவுமே இருக்கவில்லை!

வரவேற்றான். உட்கார்ந்து உணவருந்தச் சொல்லி உபசரித் தான். வீட்டைச் சுற்றிக் காட்டினான். உற்சாகமாகப் பேசினான்!

தாயிடம் பணி புரிகிறவள் என்பது போலக் கூட இல்லாமல், வீட்டு விருந்தாளி போலவே அவளை நடத்தினான்!

இதை ரொம்ப பெரிதாக நினைப்பதற்கு, சாந்திமதிக்குத் தோன்ற வில்லை. ஏனெனில், முதலில் இருந்தே செல்வநாயகியும், அவளை அப்படித்தானே நடத்தி வருகிறாள்.

எனவே, மனோகரனின் சொல், செயல் அனைத்தையும், வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளூரப் பூதக் கண்ணாடியால் ஆராய்ந்து பார்த்துப் பெரிதும் திருப்தியுற்றிருந்தாள் அவள்.

கலக்கம் மறைந்து, இயல்பாக, சுற்றுச் சூழலை சாந்திமதி ரசிக்கவும் தொடங்கியிருந்தாள். ரசிப்பதற்கு, அங்கே நிறைய விஷயங்களும் இருந்தன.

கிராமத்து வீட்டைப் போலவே, செல்வநாயகி குடும்பத்தின் சென்னை வீடும், இன்னொரு விதத்தில் மிகவும் அழகாகவே இருந்தது!

மனோகரனின் மேற்பார்வையில், பராமரிப்பும் சிறப்பாக இருந்தது!

அழகான காரோடும் பாதை. அதற்கு வரப்புக் கட்டினாற் போல வண்ணப் பூஞ்செடிகள், வீட்டினுள் கலை நயத்துடன் கூடிய மர வேலைப்பாடுகள், அந்த மர வேலைப்பாடுகளுக்கு ஒத்த விதமாக, அங்கங்கே நேர்த்தியான சட்டங்களுடன் பொருத்தமான சித்திரங்கள்!

இத்தனைக்கும் மேலாக, குத்தலோ, உள் குறிப்போ இல்லாமல், தாயைப் போலவே இயல்பான கேலியும் சிரிப்புமாக, மனோகரனின் பேச்சு!

எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு, முழு மனதுடன் வாய் விட்டுச் சிரித்தவளுக்குக் கிண்கிணி நாதமாகத் தன் சிரிப்பைக் கேட்கவே ஆச்சரியமாக இருந்தது!

இப்படிச் சிரிப்பது, அவளேதானா?

சிரிப்பே மறந்து போய், 'ஏன் இப்படி உம்மென்று இருக்கிறாய்' என்று கேட்ட வீட்டினருக்காக, பொய்ச் சிரிப்பை உதட்டில்

ஒட்டி வைத்துக் கொண்டு அலைந்தது. அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது!

செல்வநாயகியோடு பழகத் தொடங்கியதுமே, பழைய பொய்யான சிரிப்பு குறைந்து, அடியோடு மறைந்தும் போயிற்று எனலாம்!

சட்டெனச் சிரிக்கவும் முடிந்தது!

ஆனாலும் இந்தச் சிரிப்பு, அவளே எதிர்பாராதது!

உள்ளூர மகிழ்ச்சி பொங்க, மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து மகிழும் விதமானது!

ஒரு பூ காற்றில் அசைவதைப் பார்த்தால், "என்ன, நமக்குப் போட்டியாக ஒன்று வந்திருக்கிறதே என்று என்னமாய் நடுங்கு கிறது. பார்!" என்பான் மனோகரன்!

அதே போல இன்னொரு பூவைத் தேடிவிட்டு, பிறகே அர்த்தம் புரிந்து, "அச்சூ!" என்று தும்மிவிட்டுச் சிரிப்பாள் சாந்திமதி.

"போச்சு! இதற்கே இப்படித் தும்மினால் எப்படி? இன்னும் சொல்ல வேண்டியதை எல்லாம் சொன்னால், குளிரில் விறைத்துப் போவாய் போல இருக்கிறதே!"

இன்னும் என்ன சொல்லப் போகிறாயாம் என்று கேட்க முடியாமல், "நான் விறைத்துப் போவது இருக்கட்டும். இதற்கு மேல் அளந்தீர்கள் என்றால், உங்கள் பூக்கள் கோபத்தில் விறைத்துக் கொண்டு போய் விடும், ஜாக்கிரதை!" என்று எச்சரிப்பாள் அவள்.

"நல்லவேளை! அதற்குக் கால்கள் கிடையாதுடா, சாமி!" என்பான் அவன் பதிலுக்கு.

"பூக்களுக்குக் கண்களும் கிடையாது என்பதையும் மறக்க வேண்டாம் சாரே!" என்று, அவன் முதலில் சொன்னதையே பொய் யாக்கி நகைப்பாள் சாந்திமதி!

செல்வநாயகியும், அந்தச் சிரிப்பை ரசித்து, கூடச் சேர்ந்து சிரிப்பது போலத்தான் தோன்றியது!

ஆனால், வீட்டுக்குப் போ என்கிறாளே!

அவளது வீட்டுக்குப் போவதென்ன, அவ்வளவு எளிதா?

முதலில், அவள் மனது அல்லவா திடப்பட வேண்டும்?

திகைப்பும் கலக்கமுமாகச் சற்று அதிகப்படியான நேரம், விழித்துக் கொண்டு இருந்து விட்டாள் போலும்!

சாந்திமதியின் முன்னே ஒரு தரம் சொடக்குப் போட்டு விட்டு, "நான் உன்னை, உன் வீட்டுக்குத்தான் போய் வரச் சொன்னேன், சாந்திம்மா! என்னவோ, அடுத்த கிரகத்துக்குப் போகச் சொல்லுவது போல விழிக்கிறாயே!" என்று செல்வநாயகி கேலி பேசவும், மற்றவளுக்கு சுய நினைவு வந்தது.

அவசரமாக சமாளித்து, "வேலைக்குச் சேர்ந்து ஒரே ஒரு மாதமே ஆகிறது! அதற்குள் எப்படி விடுமுறை எடுப்பது, ஆன்ட்டி? உங்கள் மகனின் மெல்லுகிற வாய்க்கு அவல் கிடைப்பதாக ஆகாதா?" என்று மனதில் தோன்றிய முதல் தடையை எடுத்துச் சொன்னாள்.

ஆனால், சொல்லும்போதே அவளுக்குத் தயக்கம்தான்!

மனோகரன் இப்போதெல்லாம், அவளிடம் குற்றம் காண்பதே இல்லையே! இப்போது, போய், அவனை, அவள் குறை கூறலாமா?

செல்வநாயகியும், அதையே சுட்டிக் காட்டி, "உன்னைப் பொறுத்தவரை, மனோ நல்ல மனநிலையில் இருக்கிறான்! அதனால் தான், அவனது இந்த மனோபாவத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உன் உறவினரைப் பார்த்துவிட்டு வந்து விடு என்றேன்!" என்றாள்.

அவசரமாக யோசித்து, "ஆனால் ஆன்ட்டி, வேலைக்குச் சேர்ந்து இவ்வளவு, சீக்கிரமாக லீவெடுத்துக் கொண்டு ஊருக்குப்

போனால், வேலையே போய்விட்டதோ என்று, என் பெற்றோர் கவலைப்படுவார்கள், ஆன்ட்டி...'' என்று இழுத்தாள்.

அவளே நினைத்தது போல, ''இது ஒரு பெரிய காரண மாம்மா?'' என்றாள் பெரியவள், ''வேண்டுமானால், நான் கிரா மத்துக்குக் கிளம்புகிற வரையிலும்தான் விடுமுறை. கிளம்புகிற நாள் பற்றித் தகவல் தந்ததும், உடனே புறப்பட்டு வந்துவிட வேண்டும் என்று எழுதித் தரட்டுமா?

''தேவைப்பட்டால், உன் பெற்றோருக்குக் காட்டிக் கொள்ள லாம்!'' என்றாள் செல்வநாயகி.

''அதில்லை ஆன்ட்டி! என் முக்கியமான வேலை, உங் களுக்குத் துணையாக இருப்பது! அதை விட்டுவிட்டு எப்படிப் போவது?''

''அங்கே தனியாக இருப்பேன்! ஓர் ஆத்திர, அவசரத்துக்கு, எனக்காக யோசிக்கும் அளவுக்குப் படித்த பெண் தேவைப்பட்டாள். இங்கே தான் பையனே இருக்கிறானே! எனக்கு ஒரு தலைவலி என்றால்கூட, அவனுக்கு போன் பண்ணிச் சொல்லி விடுவார்கள்! அதனால்தான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, உன் பெற்றோரைப் பார்த்து, அவர்களிடம் கொஞ்சம் சீராடிவிட்டு வா என்கிறேன்!''

இதற்கு மேல் மறுத்தால், பெற்றோரைப் பார்க்கப் பிடிக்க வில்லையா என்ற கேள்வி வரும்!

அப்புறம், என்ன தயக்கம், ஏன் தயக்கம் என்று யோசனை வரும்! கேள்வி வரும்!

கேட்டால், அவளால் பதிலே சொல்ல முடியாதே!

அதை விடவும் அங்கே போகப் பிடிக்காதது ஏன் என்றால்... என்று யோசிக்கும்போதே, தங்கையின் குறும்பு முகமும்,

பெற்றோரின் அன்பும், தாயின் கைச் சமையலின் சுவையும் மணமும் நினைவு வந்து, அவளை வா, வா என்று ஆசை காட்டத் தொடங்கின!

அதிலும், சாதத்தில் அவியலும், பருப்பும், ரசமும், நெய்யும் கலந்து நன்கு பிசைந்து, கூடவே அப்பளமும் நொறுக்கிப் போட்டு, மொட்டை மாடியில் எல்லோருக்கும் அன்னை அள்ளித் தருவதை நினைக்கையில், நாவில் நீர் ஊறிற்று!

போனால்தான் என்ன?

போய், வீட்டோடு இருந்துவிட்டு வந்து விடுவது!

எப்படியும், தாயின் கடிதப்படி பார்த்தால், நடக்க வேண்டியது எல்லாம் நடந்து முடிந்தாயிற்று! இனி, அவள் அங்கே போவதால், எந்தவிதப் பிரச்சினையும் இருக்கப் போவது இல்லை! முடிந்த வரை மற்றவர் கண்ணில் படாமல் ஒதுங்கி இருந்துவிட்டால், அப்புறம் யாருக்கும் எதுவும் இராதே!

ஓசைப்படாமல் போய், ஒதுங்கி இருந்துவிட்டு, சத்தமின்றித் திரும்பி வந்து விட்டால் என்ன?

மதுரையில் இருந்த பெற்றோரிடம் செல்லும் ஆவல், அவளுள்ளும் மெல்லத் தலை தூக்கலாயிற்று!

மனோகரன் தடுப்பானோ என்ற கவலையும் தோன்றிற்று!

அப்படித் தடுத்தால், நின்றுவிட வேண்டியதுதான் என்று எண்ணுகையில், வருத்தமும் நிம்மதியும் ஒருங்கே சேர்ந்து தோன்றின!

நேரம் ஆக, ஆக வருத்தத்தின் அளவு அதிகமாயிற்று!

எப்படியும் பெற்றோரிடம் போயே தீர வேண்டும்!

அன்று காலை உணவின்போது, சாந்திமதி மதுரைக்குச் செல்லும் பேச்சு எழவும், மனோகரன் ஒரேயடியாகத் தடுத்துப் பேசினான்.

வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதத்துக்குள்ளாக, எப்படி விடுமுறை கொடுப்பது?

"விடுமுறை தருவதாக நான் சொல்லிவிட்டேன்! என்னைப் பொய்யாளாக்காதே. அத்தோடு, நான் சென்னையில் இருக்கும் போது, உன் படை, பரிவாரங்கள் அத்தனை பேரும் சேர்ந்துகூட, என் ஒருத்திக்கு வேண்டியதைக் கவனிக்க முடியாது என்கிறாயா?"

செல்வநாயகியின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் மனோகரன் தலையாட்டிவிட்டான்!

பெற்ற தாயைக் கவனிக்கத் தனக்குத் துப்பில்லை என்று, எப்படி ஒத்துக் கொள்ள முடியும்? அதிலும், அவனுடைய தாயார், அப்படி ஒன்றும் நடமாட்டமே இல்லாமல் படுக்கையில் கிடப்பவளோ, வக்கிரம் பிடித்தவளோ அல்ல!

சில விஷயங்களில் பிடிவாதம் உண்டே தவிர, மற்றெந்த வகையிலும், தாயாரைக் குறை கூறவே முடியாது!

கூடவே, இந்தப் பெரிய வீட்டில், பொருட்களைத் துடைக்க ஓர் ஆள், காவலுக்கு, தோட்ட வேலைக்கு, சமையலுக்கு, சமைய லாளுக்கு உதவிக்கு... என்று வீடு நிறைய ஆட்களை வைத்துக் கொண்டு, தாயைக் கவனிப்பது இயலாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

அவர்களிலும் பெரும்பான்மையான பணியாட்கள், தாயிடமே பணி புரிந்தவர்கள் வேறு! இன்னமும், தாயின் கண்ணசைவில் குறிப்பறிந்து வேலை செய்கிறவர்களும் கூட!

இவர்களை வைத்துக் கொண்டு, கிடுக்கிப்பிடி போட்ட மாதிரி செல்வநாயகி கேள்வி கேட்கும்போது, அவனால் மறுத்துப் பேச முடியாது போயிற்று!

அப்போதும், "இதுதான் சாக்கு என்று, அங்கேயே உட்கார்ந்து விட வேண்டாம்! இந்த மழை, வெள்ளம் குறையும் போது, அம்மா கிராமத்துக்குக் கிளம்பி விடுவார்கள்! அதனால், சீக்கிர மாகவே திரும்பி விடு!" என்று சொல்லியே அனுமதி கொடுத்தான்!

"மனோ சொல்வதைச் சொல்லட்டும்! உன்னைப் பணியில் அமர்த்தியது நான்தானே? தேவைப்படும்போது, இரண்டு நாள் முன்னதாகவே தெரிவிக்கிறேன். அப்போது நீ கிளம்பி வந்தால் போதும்!" என்றாள் மனோகரனைப் பெற்றவள்!

என்னவோ, இங்கிருந்து வெளியேற்றுவது போலவே மீண்டும் மனதில் சாந்திமதிக்கு உறுத்தியது!

ஏன், ஏன் என்று பலமுறை யோசித்துப் பார்த்தாள்.

மகன், தன்னிடம் பணிபுரியும் தகுதியற்ற ஒரு பெண்ணிடம் மயங்கி விடுவானோ என்று அஞ்சுகிறாளோ என்று ஒரே ஒரு தரம் எண்ணிப் பார்த்துவிட்டு, அந்த எண்ணத்தை அடியோடு ஒதுக்கினாள்.

அது போன்ற வர்க்க மனப்பான்மை செல்வநாயகிக்கு இல்லை என்பதோடு, மனோகரனோடு, சாந்திமதி பேசுவதைத் தடுக்க, பெரியவள் ஒரு முயற்சிகூடச் செய்வதே இல்லை என்பதும், அவளுக்கு நன்றாகவே தெரியும்!

இப்படி ஒரு குடும்பத் தலைவியாக இருப்பவள், வெளியே காட்டிக் கொள்ளாமல், என்னென்ன விதத்திலோ, ஒருவரை ஒதுக்க முடியும்!

ஆனால், சாந்திமதியாக ஒதுங்கிப் போனாலும் இழுத்து வைத்துச் சேர்த்து பேசுவதுதான் செல்வநாயகியின் வழக்கம்!

சாந்திமதி வேலைக்குச் சேர்ந்து முதல் வாரத்தில் மட்டும்தான், அவளை ஒதுங்கிப்போக, செல்வநாயகி அனுமதித்தது! அதன் பின் எப்போதும், சேர்த்துக் கொண்டுதான் பழக்கம்!

அத்தோடு, அவளை ஒதுக்க நினைக்கிறவள், வீட்டுப் பூஜை யறையில் வைப்பதற்காக, மதுரையிலிருந்து தாழம்பூ, குங்குமம் வாங்கி வரச் சொல்லிப் பணம் கொடுக்க மாட்டாளே!

குங்குமத்தை வாங்கி வந்த பிறகு, பணத்தை வாங்கிக் கொள்வதாக சாந்திமதி கூறியபோதும், "அதெல்லாம் முடியாது! அங்கே போனதும், அம்மா அன்பாக அள்ளித் தரும் கலந்த சாத ஆசையில், நீ பேசாமல் அங்கேயே உட்கார்ந்து விட்டால், நான் என்ன செய்வது? பணத்தை வாங்கிக்கொண்டு போனால்தான், அடித்துக் கொண்ட மாதிரி தோன்றி விடுமே என்ற பயத்தில், நீ கட்டாயமாகத் திரும்பி வருவாய்! அதனால் பணத்தை வாங்கிக் கொண்டே போ!" என்று கட்டாயமாகப் பணத்தைக் கையில் திணித்தல்லவா கொடுத்தாள்!

எனவே, குயுக்தியான எந்தவிதமான திட்டமும் இல்லாமல், மெய்யாகவே, வாய்ப்புக் கிடைத்திருக்கும் இந்தச் சமயத்தை, சாந்திமதி தன் உறவினரோடு சந்தோஷமாகக் கழித்து விட்டு வரட்டும் என்ற நல்ல எண்ணத்தோடேயே செல்வநாயகி தன்னை அனுப்புவதாக முடிவெடுத்து, தன் வீட்டுக்கு மகிழ்ச்சியுடனே கிளம்பினாள் சின்னவள்!

ஊரிலும் அவளுக்கு மிகுந்த ஆவலோடு கூடிய வரவேற்புதான்!

ரயில் நிலையத்துக்குக் குடும்பம் முழுதுமே வந்திருந்தது!

அவளது கையைப் பிடித்துக் கொண்டு, "இனி இங்கேயே இருந்து விடுக்கா!" என்றாள் தங்கை!

"ஆமாம்! இங்கே இல்லாத வேலையா? கூடக் கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தேடினால், தானாகக் கிடைத்துவிட்டுப் போகிறது!" என்றாள் தாய் சுமதி!

''அப்படி சாந்திக்குட்டி வேலை செய்துதான் தீர வேண்டும் என்று என்ன கட்டாயம்? சும்மா சந்தோஷமாக வீட்டில் இருக் கட்டும்!'' என்றார் தந்தை வாசவன்!

செல்வநாயகி சொன்ன 'அம்மாவின் கலந்த சாத ஆசையில் அங்கேயே உட்காருவது' பற்றிய நினைவு வர, சாந்திமதி தனக்குள் முறுவலித்துக் கொண்டாள்!

எல்லோரையும் பார்த்தது மிகவும் சந்தோஷமாகவே இருந்த போதும், இங்கேயே தங்கிவிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவே இல்லையே!

இந்த நேரத்துக்கு, செல்வநாயகிக்குப் பத்திரிகை படித்துக் காட்ட வேண்டும்!

கிராமத்துக்கு வரும்போது செய்வது போல, மனோகரன் இப்போது வாசித்துக் கொண்டிருப்பான்!

அப்புறமாகக் கடிதங்கள்... பணக்கணக்கு...

அதை மகன் அறியக் கூடாது என்றுதானே, தன்னை வேலை யில் சேர்த்தது?

ஓரளவு தருமத்துக்கு அளிப்பது எல்லாம் கொடுத்து முடிந்து விட்ட போதும், பெற்றுக் கொண்டதற்கான ரசீதுகள் வருகிற சமயம்!

யார் யாருக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று, மனோகரனுக்குத் தெரிந்து போகும்!

அடுத்த மாதச் செலவுக் கணக்கில் என்னென்ன செய்யப் போகிறானோ?

செய்வான் என்று தெரிந்தும், கட்டாயமாகப் போய்வா என்று, பிடிவாதமாக அனுப்பி வைத்த செல்வநாயகி, இதையெல்லாம் யோசித்தாளோ என்னவோ, தெரியவில்லையே!

குறைந்த பட்சமாகத் தானாவது, இதை செல்வநாயகி அம்மாளுக்கு நினைவுபடுத்தி இருக்க வேண்டும்!

இப்போது, அடுத்த மாதம் மகனுக்கும் மற்றவர்களுக்கும் என்ன பதில் சொல்லப் போகிறாளோ, பாவம்!

மனம் இதிலேயே உழன்றபோது, தங்கை சுந்தரி அங்கே வந்து சேர்ந்தாள்.

யோசனையோடு அமர்ந்திருந்த தமக்கையைப் பார்த்து, "என்னமோ அக்கா அங்கே வெட்டி முறித்துவிட்டு, ஓய்வுக்காக வந்திருக்கிறாள். பயணக் களைப்பும் அதுவுமாகத் தூங்குகிறாள். எழுப்பி விடாதே என்று அம்மாவும், அப்பாவும் என்னைக் கையைக் காலைக் கட்டி, சாமான் அறையில் போடாத குறைதான்! இங்கே வந்து பார்த்தால், அம்மையார் உலகத்தையே உய்விக்கத் திட்டம் தீட்டுகிற கணக்கில், அப்படியே ஆழமான சிந்தனைக் கடலில் மூழ்கிக் கிடக்கிறாய்! என்னக்கா, அவ்வளவு யோசனை? அம்மா, அப்பா சொல்வது போல ஐடியா பண்ணி விட்டாயா?" என்று, அக்கறையோடு விசாரித்தாள்.

"என்ன ஐடியா?" என்று புரியாமல் வினவினாள் சாந்திமதி.

"அதான்க்கா, காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறிவது போல, நீ இப்போது பார்க்கும் வேலையை விட்டு விட்டு, இங்கேயே இருந்து விடுவது!" என்றுரைத்து, தமக்கையை அதிர வைத்தாள் சின்னவள்.

மூத்தவளின் அதிர்ச்சியைப் பார்த்துவிட்டு, அவள் பதில் கூறும் முன்பாகவே, "உன் முகத்தைப் பார்த்தாலே அப்படியில்லை என்று தெரிகிறது! அப்புறம், என்ன, அவ்வளவு ஆழ்ந்த யோசனை? நாளன்று, என்ன உடை அணிவது என்றா?" என்று மறுபடியும் புரியாத கேள்வி கேட்டாள் சுந்தரி.

"நா...ளனன்று என்ன உடையா? நாளனன்று, அப்படி என்ன விசேஷம்?" என்று தங்கை முகத்தைப் பார்த்தாள் சாந்திமதி!

"என்ன விசேஷம்மா? கடவுளே! நீ இங்கிருந்து போய், இன்னமும் முழுவதாக ஒரு மாதம் ஆகவில்லை! அதற்குள் இங்கே அக்கம் பக்கம் எல்லோரையும் மறந்துவிட்டாயே! நல்லவேளை, இப்போது வந்தாய்! இன்னும் ஒரு மாதம் தள்ளி அடுத்த மாதம் வந்திருந்தால், எங்களையே யார் என்று கேட்பாய் போல!" என்று கண்டனக் குரலில் கூறினாள் தங்கை.

"ஏய், ரொம்பத்தான் ஓட்டாதேடி! அப்படி நான் யாரை மறந்து விட்டேனாம்?"

"எல்லாம் நமக்கு முக்கியமான ஆளைத்தான்! நம் பரசு அண்ணனை!" என்றுரைத்து, மீண்டும் தமக்கையை அதிர வைத்தாள் தங்கை!

அதிர்ச்சி என்றால், கொஞ்ச நஞ்சமில்லை! மின்சாரத்தைத் தொட்டு விட்டது போலப் பேரதிர்ச்சி!

அவனுக்காகத்தான், நான் மாடக் கூடல் என்று நம் பழந்தமிழ் இலக்கியங்களிலேயே புகழ்ந்து பாடப் பெற்று, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இந்த அழகிய மதுரை மாநகரத்தைத் துறந்து, சாந்திமதி வெளியூருக்கு ஓடியது!

மீண்டும் அவனது பெயரைக் கேட்டதும், விதிர்விதிர்த்து நின்றாள் அவள்!



## 7

பரசு!

அது ஒன்றும் சாந்திமதிக்குத் தெரியாத பெயர் அல்ல!

சொல்லிச் சொல்லிப் பழக்கமான பெயர்தான்!

ஆனால், அது சாதாரணப் பழக்கம் மட்டும் அல்ல என்பதுதான். இந்த அதிர்ச்சியின் அடி முதல் நுனி வரையிலான முழுக் காரணமும்!

பரசுராமன் அக்கம் பக்கம் உள்ளவன்தான்! ஒரே தெருவில், சின்ன வயதிலிருந்து சேர்ந்து வளர்ந்தவனே! அப்போதெல்லாம், சாந்திமதியும் அவனை அண்ணன் என்றுதான் சொல்லுவாள்!

சில ஆண்டுகளுக்கு முன்புதான், பெரியதாகப் புதிதாக வீடு கட்டிக் கொண்டு குடி போனார்கள்.

அங்கிருந்து படிப்புக்காக வெளியூர் சென்று, படிப்பு முடிந்து, பரசு திரும்பி வந்த பிறகு, சாந்திமதி அவனை அண்ணன் என்று அழைத்ததில்லை!

அப்படி அழைக்க அவளுக்குப் பிடிக்காததோடு, அவனும் அதற்கு அனுமதிக்கவில்லை!

இருவருமே எதையும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

சாந்திமதியின் படிப்பு முடிய வேண்டும், பரசுவுக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று காத்திருந்தார்கள்!

பரசுராமனின் பெரிய வீட்டில், மகாராணியாக வளைய வருவது பற்றி, சாந்திமதி கனவு கண்டாள்!

கடைசியில், அழகான அந்த வீடுதான் வில்லனாகிப் போயிற்று!

சக்திக்கு மிகவும் அதிகமாகச் செலவழித்துக் கட்டி, அதனால் பரசுராமனுடைய அப்பா பெரிய கடனாளியாகி, அந்தக் கடனைத் தீர்க்க, மகனது காதலைக் களப்பலி கொடுத்தார்!

மகனது காதல் மட்டுமல்ல! ஓசைப்படாமல் சாந்திமதியின் காதலுமே பலியாக நேர்ந்தது!

"அப்பாவிடம் கேட்டுப் பார்த்தேன். ஆனால், அந்தப் பெண்ணின் கழுத்தில் நான் தாலி கட்டாவிட்டால் அவர் உடம்பு தூக்குக்

கயிற்றில் தொங்கும் என்கிறார்! நான் என்ன செய்யட்டும், சொல்லு?'' என்று அழுதான் பரசு!

தந்தை சொல் தட்டாத அந்தப் 'பரசுராமனே'தான்! ஆனால், இவனுக்குத் தைரியமும் இருக்கவில்லை! ஒரேயடியாக அழுதான்!

அவனது கண்ணீரைப் பார்த்த பிறகு, காதலுக்காகப் போராடும் எண்ணம் கூட, சாந்திமதிக்கு வரவில்லை!

ஒரே ஒரு நிம்மதி!

பரசுவுக்கும் அவளுக்கும் காதல் என்பது வேறு யாருக்கும் தெரியாது!

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டதும், பேசிக் கொண்டதும், வேறு யாருக்குமே அவ்வளவாகத் தெரியாது! இருவரும் எங்கேனும் சந்தித்துப் பேசியதை யாரேனும் பார்த்தாலும், சிறு வயதிலிருந்து சேர்ந்து வளர்ந்தவர்கள் என்ற அளவுக்கு மேலாகப் பெரிதாக நினைக்கும்படி அவர்கள் நடந்து கொண்டது கிடையாது!

தந்தையிடம் கூட, அவளது பெயர் சொல்லிக் கேட்கவில்லை என்றான் பரசு!

சொல்லியிருந்தால் ஒரு வேளை...

அவனுடைய பெற்றோரும் அவளிடம் பாசம் உள்ளவர்களே!

ஆனால், அவளுக்காகத் தலைக்குமேல் வெள்ளமாகக் கடனை வைத்துக் கொண்டு கஷ்டப் படுவது... சந்தேகமே! கஷ்டம் மட்டுமின்றிக் கேவலத்தையும் அனுபவிக்க நேரும் என்கையில்...

ஆனால், அதையெல்லாம் இப்போது யோசித்துப் பார்ப்பது கூட அறிவின்மைதான்!

தான் ஒதுங்கிப் போய் விடுவதாகப் பரசுவிடம் வாக்களித்தவள், அதே போலக் கண்ணில் பட்ட ஒரு விளம்பரத்துக்கு

விண்ணப்பம் எழுதிப் போட்டு, உடனே ஊரை விட்டுக் கிளம்பிச் சென்றும் விட்டாள்!

அவன் இருக்கும் அதே ஊரில் அவளும் இருப்பது, இனி அவனுக்குத் துன்பம்தானே? கலக்கமாகவும் இருக்கும்! எதற்குப் பாவம்!

சாந்திமதி மதுரையை விட்டுச் சென்றதுமே திருமண வேலைகள் வேகமாக நடந்து, பத்து தினங்களில் பரசுராமனுக்குத் திருமணமும் முடிந்து விட்டதாக, அவளுடைய தாயாரின் கடிதம் தெரிவித்திருந்தது!

மகனின் மனம் மீண்டும் மாறிவிடக் கூடாதே என்று, அவனுடைய தந்தை அவசரப்பட்டிருக்கலாம்! எப்படியோ, அவரது பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டார்!

பரசுவுடைய மனைவி ஒரே பெண் என்பதால், அவளது குடும்பத் தொழிலில் மருமகனும் ஐக்கியமாகி விட்டதாக, சாந்திமதிக்கு அவளுடைய அன்னை எழுதியிருந்தாள்.

எதிர்பார்த்திருந்த விவரம் என்பதாலோ என்னவோ, வருத்தமாக இருந்தபோதும், அவள் முன்னர் நினைத்தது போலத் தாங்க முடியாத துயரமாக இருக்கவில்லை!

அந்த வருத்தமும், அன்றாட வேலைகளிலும், செல்வநாயகியின் கலகலப்பிலும் விரைவிலேயே மறைந்து போயிருந்தது!

நினைத்தால் வருத்தமாகத்தான் இருந்திருக்கும்! ஆனால், நினைக்கவே வழியில்லாதபோது, வருத்தத்துக்கும் இடமில்லை தான்?

மதுரைக்குக் கிளம்பும்போது, பழைய நினைவும், அதனால் தடுமாற்றமும் ஏற்படத்தான் செய்தது! ஆனால், எப்போது பரசு

ராமனுக்குத் திருமணம் முடிந்து விட்டதோ, அத்தோடு, அந்த அத்தியாயமும் முடிந்து விட்டதாகத்தானே கொள்ள வேண்டும்?

அவன், அவனுடைய மனைவி என்று, அவனுடைய குடும்பம் இனி, வேறு!

அடுத்த சுற்றுக்கு, அவனுடைய மனைவி வழி உறவினர்கள் இருந்தார்கள்!

இவர்கள் எல்லோருக்கும் அப்புறமாக, யாரோ ஒரு சிறு வயதில் பார்த்துப் பழகிய ஒருத்திதான் சாந்திமதி! அன்னியப் பெண்! அவ்வளவே!

அவனைப் போய்ப் பார்க்கவோ, பேசவோ, எந்த விதமான தொடர்பும் இருக்கப் போவதும் இல்லை!

அதுதான் நியாயம் என்பதால், ஒரு மாதிரி, சாந்திமதியின் மனதும், அந்த நிலைக்குத் தயாராகி விட்டிருந்தது.

இங்கே வீட்டுக்கு வருவதில் கூடச் சட்டென்று ஏற்பட்ட திகைப்புடன் சிறு சஞ்சலமும் ஓரளவு தோன்றினதுதான். ஆயினும், வரவே கூடாது என்கிற அளவுக்குத் தயக்கம் அவளுக்கு ஏற்பட வில்லை!

அதுவும், பரசுராமனின் வீடு அருகில் இல்லை எனும்போது, அவனைத் தற்செயலாகச் சந்திக்கும் வாய்ப்பு கூட இருக்கப் போவ தில்லை என்று எண்ணி, அவள் உற்சாகமாகத்தான் இங்கே வந்தாள்!

ஆனால், இந்த சுந்தரி வேறு என்னவோ சொல்கிறாளே!

வயிறு கூடாகிக் கொண்டிருப்பதைக் காட்டிக் கொள்ளாமல், 'பபரச... பரசு அண்...ணனை நினைப்பதற்கு இப்போது என்ன அவசியம் வந்ததாம்?'' என்று சிரமப்பட்டுக் கட்டுப் படுத்திய குரலில் வினவினாள் தமக்கை.

"என்ன... வந்ததா?" என்று மீண்டும் கண்டனக் குரல் எழுப்பினாள் தங்கை. "பரசு அண்ணனுக்குத் திருமணம் ஆனது, உனக்குத் தெரியும்தானே? திருமணம் ஆன கையோடு இரண்டு பேரும் தேனிலவுக்காக வெளிநாடு சென்று விட்டார்கள்! இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறார்களாம்! அதனால், அண்ணனின் திருமண வரவேற்பு நாளன்றுதான் நடக்கப் போகிறது! நம் எல்லோரையும் கூப்பிட்டிருக்கிறார்கள்! அங்கிளும் ஆன்ட்டியும் வீட்டுக்கு வந்து அழைத்தார்கள்!" என்று பெருமையோடு விவரம் தெரிவித்தாள், அவள்!

பரசுராமனின் திருமண வரவேற்புக்கு, சாந்திமதி போவதா?

என்ன அநியாயம்?

இது எப்படிச் சாத்தியமாகும்?

அவளால் எப்படி முடியும்?

பரசு கண்ணில் படாதவரை, எல்லா ஊரையும் போல, இந்த ஊரும் நிம்மதிதான்!

ஆனால், அவனது திருமண வரவேற்பிலேயே, அவளால் எப்படிக் கலந்து கொள்ள முடியும்?

ஆறி வரும் காயத்தில், கத்தியை விட்டுத் திருகினாற் போல இராதா? எப்படித் தாங்குவாள்?

சிலை போல நின்றவளைப் பார்த்துவிட்டு, "என்னக்கா, நல்லதாக எதையும் கொண்டு வரவில்லையா? அப்படியில்லையே! நீதான், நல்ல ஆடைகள் எதையும் எடுத்துப் போகவே இல்லையே! எல்லாம் இங்கேதானே வைத்து விட்டுப் போனாய்! ஆனால், நல்ல அழகான எதையாவது அணிய வேண்டும், அக்கா! அந்த லேகா பரசு அண்ணன் மனைவி, ஜிலுஜிலு என்று என்னமாக உடை

அணிகிறாள், தெரியுமா? கழுத்தில், காதில் எல்லாம் வைரம்தான்! ஆள் சுமார்தான். ஆனால், எந்நேரமும் பார்லர்தான்! இந்த ஃபேசியல், அந்த மேனிக்யூர் என்று பண்ணிக் கொண்டு வந்து, நகைகளும் தானுமாக ஜொலிக்கிறாள்! திமிர் வேறு! என்னிடமெல் லாம் பேசவே இல்லை தெரியுமா? அவளை அடிக்கிற மாதிரி, உடையணிய வேண்டும், அக்கா!...'' என்று அளந்து கொண்டே போனாள் சுந்தரி!

தலை வெடித்து விடும் போல வலிக்கத் தொடங்கியது, சாந்தி மதிக்கு!

"சரி, சரி பார்ப்போம்! அது நாளை மறுநாள்தானே? எவ்வளவோ அவகாசம் இருக்கிறதே! அப்புறமாக யோசிப்போமா? எனக்கு ஒரே தலைவலி மண்டையே பிளந்து விடும்போல இருக்கிறது! கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கினால் சரியாகி விடும் என்று நினைக்கி...''

அவளை முடிக்க விடவில்லை, சின்னவள்!

''ஐயையோ! அம்மா சொன்னது போல, உனக்கு அசதி! சே! கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கக்கூட விடாமல் நான் வந்து அறுத்து விட்டேன், இல்லையாக்கா? சாரிக்கா! வா! படுத்துக்கொள்! நான் வேண்டுமானால், உனக்குக் காபி போட்டு எடுத்து வரவா? மாத்திரையும்...'' என்று கழிவிரக்கத்துடன் தமக்கைக்கு உபசாரம் செய்யத் தொடங்கினாள்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். சுந்தா! சற்று நேரம் சும்மாப் படுத்து இருந்தாலே சரியாகி விடும்! நீ போகிறபோது, கதவைச் சாத்திக் கொண்டு போகிறாயா?'' ஒருவாறு தங்கையை அனுப்பிவிட்டுப் படுக்கையில் விழுந்தாள் சாந்திமதி!

இப்போது என்ன செய்வது?

சஞ்சலமும் தவிப்புமாக யோசிக்க முயன்றாள் அவள்.

மனம் குழம்பியதே தவிர, ஒரு வழியும் தென்படவில்லை!

இங்கேயே இருந்து கொண்டு, வரவேற்புக்கு வர முடியாது என்று சொல்லவும் முடியாது! இரு குடும்பங்களும் பழகிய விதத் துக்கு, அவளைப் பெற்றவர்களே ஒத்துக் கொள்ள மாட்டார்கள்!

மேலும் என்ன காரணம் சொல்லி வர முடியாது என்பது?

விரிந்து மணம் பரப்புமுன்னதாக மொட்டிலேயே கருகி, பரசுவும் அவளும் தவிர யாருமே அறியாமலே உதிர்ந்து விட்ட காதலைப் பற்றி இப்போது தெரிவிப்பது மகா மடத்தனம்!

எனவே, வரவேற்பைத் தவிர்ப்பது முடியாத காரியம்!

பெற்றோர், அக்கம் பக்கத்தினருக்காவேனும், அங்கே தலையைக் காட்டித்தான் ஆக வேண்டும்!

உள்ளம் துடிக்க, உதட்டில் புன்னகை வாடாமல் காத்தபடி... என்ன கஷ்டம்!

சே! இங்கே வந்திருக்கவே கூடாது! உடனே எழுந்து, சென்னைக்கே திரும்பி ஓடிவிட முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

ஆனால், அதுவும் பிரச்சினைதான்! அங்கே, செல்வநாயகி அம்மாவுக்கும், மனோகரனுக்கும் பதில் சொல்லியாக வேண்டுமே!

எதற்காக இப்படி விழுந்தடித்துக் கொண்டு திரும்பி வந்தாய் என்று செல்வநாயகி கேட்டால், என்னவென்று விளக்கம் சொல்வது?

கடவுளே! பேச்சு வார்த்தை அறியாத பழைய கற்காலமாக இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!

எவ்வளவு யோசித்தும், நடைமுறைக்கு ஒத்ததாக, உருப்படி யாக ஒன்றும் தோன்றாமல் சாந்திமதி திகைத்தாள்!

இந்த யோசனையிலேயே ஒரு நாள் முழுவதும் ஓடிவிட, வரவேற்பு நாளும் விடிந்தது!

அன்றைய விடியலே வேறு விதமாக இருந்தது!

இரவெல்லாம் சரியான ஆழ்ந்த தூக்கமே அவளுக்கு வர வில்லை! காலையிலும் அதே உருளல், புரளல்தான்!

இனித் தூக்கம் அசாத்தியம்... பத்திரிகையேனும் படிக்கலாம் என்று எழுந்து சென்று, கதவைத் திறந்து பார்த்தவள் சட்டென அதிர்ந்தாள்!

வீட்டுக்கு நேர் முன்னே, கேட்டை அடைத்தவாறு நிறுத்தப்பட் டிருந்த காரிலிருந்து, அவளது வீட்டையே பார்த்துக் கொண்டிருந் தவன், மனோகரன்!

அவளைப் பார்த்ததும், பல் தெரிய முறுவலித்தான்!

கடவுளே! இவன் வேறு, இங்கே எங்கே வந்தான்?!

இரண்டு நாட்களாகக் கடவுளை அடிக்கடி தொல்லை செய் கிறோமே என்று எண்ணிய போதும், அவனது முறுவலுக்குப் பதி லாக தானாக உதடு விரிய, சாந்திமதி மனோகரனை வரவேற்றாள்.

வேலைக்காரி வாசலில் கோலம் போடுவதற்கு வசதியாகக் காரைச் சற்று ஒதுக்கி நிறுத்திவிட்டு, சாந்திமதியின் பின்னோடு மனோகரன் வீட்டினுள் வர, மெல்ல விழித்தெழுந்து, காலைக் காபிக்கு வந்து சேர்ந்திருந்த வீட்டினருக்கு, அவனை அறிமுகம் செய்து வைத்தாள்.

''உனக்கு முதலாளியா?!!' என்று விழி விரியக் கேட்டுவிட்டு, ''பந்தாவே இல்லாமல் என்ன மரியாதையாய்ப் பேசுகிறார்! இவரிடம் வேலை செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!'' என்று வந்ததும் வராததுமாக மகளை வேலையை விடச் சொன்

னதை அடியோடு மறந்து, இப்போது வந்தவனைப் புகழ்ந்துவிட்டு, அவனுக்கும் ஒரு கப் காபியை சூடாகக் கலந்து எடுத்து வந்தாள் சுமதி.

"அக்கா வந்து, இரண்டு நாட்கள் ஆகவில்லை., அதற்குள்ளாக அவள் பின்னோடு, நீங்களும் இங்கே வந்திருக்கிறீர்களே! ஏன்? என்ன விஷயம்?" என்று புருவம் நெறித்து, அவனைக் கூர்மையாக நோக்கி வினவினாள் சுந்தரி.

உள்ளூரச் சிறு படபடப்புடன் சாந்திமதியும் யோசித்ததுதான்! ஆனால், வீட்டின் கடைக் குட்டியின் துறுதுறுப்போடு சுந்தரி கேட்டபோது, அப்போதும் சஞ்சலமாகத்தான் இருந்தது!

மனோகரன் என்ன சொல்லப் போகிறானோ?

இப்போது தெரிந்துவிடும் என்று கவனிக்கும்போதே, "ஏய் முந்திரிக் கொட்டை! அவர் காபி குடிக்கும் வரை சும்மா இரு!" என்று அதட்டினாள் தாயார்!

"ஆமாம் சார்! என் சின்னப் பெண் எப்போதுமே சற்று அவசரக்காரி! நீங்கள் காபியை குடியுங்கள்" என்று வாசவனும் உபசாரம் செய்தார்!

"பெயர் என்ன, அங்கிள்? சாந்திமதி, ஏதோ சுந்தரி என்றதாக ஞாபகம். ஆனால், இப்போது முந்திரிக்கொட்டை என்பதாகவும் காதல் விழுந்ததே சுந்தரியா, முந்திரியா?" என்று மனோகரன் கலகலப்பாகப் பேசிக் கிண்டலடிக்கவும், பெரியவர்கள் இருவரும் மனமகிழ்ந்து நகைத்தனர்.

"சுந்தரிதான்! ஆனால், எதற்கும் முந்திக் கொண்டு பேசுவதால், அவள் அம்மா, அவளை முந்திரிக்கொட்டை என்பாள்!" என்று பெருமைக்குரலில் விளக்கினார் தந்தை.

சுந்தரியின் முகம் சிணுங்க, பெண்கள் இருவருக்கும் ஆன்ட்டியின் பெயரில் கொஞ்சம் பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள்! மதுரை என்பதால், சக்திக்கு அவ்வளவு மரியாதையா அல்லது, அன்பின் அடையாளமா?'' என்று மனோகரன் மேலும் இலகுவாக உரையாடியவாறே, சுமதி அளித்த காபியைக் குடித்து முடித்தான்.

அவன் பேசிய விதம், மகள்களுக்கு யோசித்துப் பெயர் வைத்த தங்களது புத்திசாலித்தனத்தைப் பாராட்டுவது போலவும் இருக்கவே, சாந்திமதியுடைய பெற்றோருக்கு உச்சி குளிர்ந்து போயிற்று!

''நீங்கள் சொன்ன மாதிரி, மதுரையில் இருந்து கொண்டு, நான் வேறு என்ன சார், செய்ய முடியும்?'' என்று சோகம் போல ராகம் போட்டுக் கேட்ட போதும், உடனேயே சிரித்து, ''ஆனால், நீங்கள் இரண்டாவதாகச் சொன்னதுதான், சார்! சுமி கூட எவ்வளவோ சொன்னாள், என் பெயர் வருகிற மாதிரி ஏதாவது வைக்கலாம் என்று! எனக்கு இதுதான் பிடித்ததா, அப்படியே வைத்துவிட்டோம்!'' என்று மீண்டும் பெருமைப் பட்டார் வாசவன்.

''ஆமாம்! இந்தப் பெயர்ப் புராணத்திலேயே இருங்கள்! அவர் எதற்காக வந்திருக்கிறார் என்று இன்னமும் சொல்லவே இல்லை! நான் கேட்டால், முந்திரி, தந்திரி என்பது!'' என்று அலுத்துக் கொண்டாள் சுந்தரி.

புதிதாக வந்தவன் முன்னிலையில், தன்னை முந்திரிக்கொட்டை என்றதில் கோபம் அவளுக்கு!

''ஷ்! வீட்டுக்கு வந்தவர்களிடம் ஏன் வந்தாய் என்று கேட்கக் கூடாதுடா!'' என்று தணிந்த குரலில் எச்சரித்தாள் தாயார்!

''ஐயோ, அவள் கேட்பதில் தப்பு ஒன்றும் இல்லை. ஆன்ட்டி! மற்றபடி, நான் எதற்கு வந்தேன் என்று உங்களுக்கு எப்படித்

தெரியும்?'' என்று, இப்போது சுந்தரிக்கு வக்காலத்து வாங்கினான் மனோகரன்.

எதற்காக இப்படி ஆள்மாற்றி ஆளுக்கு ஐஸ் வைக்கிறான் என்று சாந்திமதி யோசித்தாள்.

ஏதோ காரணம் இருக்க வேண்டும்!

மற்றபடி, அவன் ஒன்றும் சும்மா வெட்டியாக இப்படிப் பேசுகிறவன் அல்ல!

இவ்வளவு தூரம் வந்து, இங்கே எல்லோர் மனதையும் குளிர்வித்து... ஏதோ அதிர்ச்சியை, இப்படி இலகுவாக்கித் தரப் போகிறானா? ஒரு வேளை அவளை வேலையை விட்டு விலக்க...

அதற்கு மேல் யோசிக்க மாட்டாமல் அவளது மனமே விக்கித்தது!

"ஆனாலும், இன்னமும் வந்த காரணம் சொல்லக் காணோம்!'' என்று அதிலேயே நின்ற சுந்தரியை அணைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது சாந்திமதிக்கு.

"ஐயையோ, இதோ சொல்லி விடுகிறேன்பா! அல்லது, உங்கள் முந்திரி... இல்லை சுந்தரி, நான் சொல்லும் முன்பாகவே என்னை வீட்டை விட்டே வெளியேற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!'' என்று பயந்தவன் போல நடித்துவிட்டு, அவன் மதுரைக்கு வந்த காரணத்தைத் தெரிவித்தான் மனோகரன்!

அவனைப் பொறுத்த வரையில், அவன் அங்கே வந்திருப்பது, ஒரு தூதுவனாக மட்டும்தானாம்! அவனுடைய தாயாரிடம் இருந்து, சாந்திமதிக்கு ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறானாம்!

"என்ன செய்தி?'' என்று சாந்திமதி கலக்கத்தை மறைக்கும் குரலில் கேட்கையிலேயே, "அடக்கடவுளே! உன் பாஸ் வீட்டில்

டெலிபோன் கிடையாது என்று நீ சொல்லவே இல்லையேக்கா!'' என்றாள் சுந்தரி உரக்க.

திகைப்புடன் எல்லோரும் நோக்க, ''என்னடி உளறுகிறாய்? சற்று வாயை மூடிக்கொண்டு சும்மாயிரு! என்ன செய்தி என்று அவர் சொல்லட்டும்!'' என்று மகளை அதட்டினாள் சுமதி.

''நான் ஒன்றும் உளறவில்லை! வெறும் செய்தியை, டெலி போனிலேயே சொல்லி விடலாமே! அதற்காக, இவ்வளவு தூரம் ஒருவர் வரவேண்டியது இல்லையே! அதைச் சொன்னால், என்னைப் போய் அதட்டுகிறீர்கள்!'' என்றாள் சுந்தரி பதிலுக்கு!

முறுவலித்து, ''சுந்தரி கேட்பதில் தப்பே இல்லை!'' என்று மீண் டும் சுந்தரிக்கு ஆதரவாகப் பேசிவிட்டு, ''ஆனால் அம்மா என் னிடம் அனுப்பிய செய்தியை நான் நேரில் சொல்வதுதான் சரியாக இருக்கும்!'' என்றான் மனோகரன்.

''இப்படியே சொல்லிக் கொண்டே இருங்கள்! ஆனால், அந்த செய்தியை மட்டும் சொல்லவே சொல்லாதீர்கள்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் சுந்தரி.

''நீ சொல்ல விட்டால்தானே? சொல்லலாம் என்று வாயைத் திறக்கு முன் குறுக்கே குறுக்கே பேசிக்கொண்டு! முந்திரிக்கொட்டை விஷயம் இப்போதல்லவா எனக்கு நன்றாக புரிகிறது!'' என்று மனோகரன் சீண்ட, சமமான பதில் சீண்டலாகக் கையால் வாயைப் பொத்திக்கொண்டு, மேலே சொல்லும்படி சுந்தரி சைகை செய்ய, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது!

அந்தச் சிரிப்பில் முழுமையாகக் கலந்துகொள்ளாமல் லேசான புன்னகையோடு நிறுத்திக் கொண்டு, ''என்ன விஷயம்?'' என்று தணிந்த குரலில் கேட்டாள் சாந்திமதி.

அவளது, மனதில் இருந்த கலக்கம், குரலில் தெரிந்ததோ என்னவோ, சிரித்த முகமாகவே தலையசைத்து, "நான் இங்கே ஒரு வேலையாக வந்தேன்! திரும்பி வரும்போது சாந்திமதியைக் கூட்டி வந்துவிடு என்று சொல்லி அனுப்பினார்கள். காலைப் பத்து மணிக்குக் கிளம்பினால், ஓரளவு வெளிச்சம் இருக்கும்போதே, சென்னையை அடைந்து விடலாம்! எல்லாம் நேரிலேயே சொல்வது நன்றாக இருக்கும் என்று வீட்டுக்கே வந்தேன். அதைச் சொல்வதற்குள் உங்கள் சுந்தரிக்கொட்டை.... இல்லை, முந்திரி... அடடா, அதுவுமில்லையே, சுசு... சுந்தரிதானே, இந்த சுந்தரி இத்தனை தரம் குறுக்கிட்டுக் குழம்பி விட்டாள்!" என்று வேண்டுமென்றே பேச்சில் ஒரு தடுமாற்றம் காட்டி முடித்து, எல்லோரையும் மீண்டும் சிரிக்க வைத்தான் மனோகரன்!

கலகலப்பான பேச்சினூடே, மறுநாள் காலைப் பத்து மணிக்குக் கிளம்புவதை மறுக்க, யாருக்குமே தோன்றாது போயிற்று!

ஆனால், சாந்திமதிக்கு உள்ளூர சந்தேகம்.

சென்னையில் மகன் வீட்டில் தான் இருக்கும்போது, பெற்றோரிடம் சென்று ஆசை தீரச் சீராடிவிட்டுத் திரும்பி வருமாறு அவளிடம் கூறி அனுப்பிய செல்வநாயகி, சாந்திமதி மதுரைக்கு வந்து இரண்டு நாட்களுக்குள்ளாகத் திரும்ப அழைத்து வருமாறு எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

ஆனால், மனோகரன் தன் தாயைச் சம்பந்தப்படுத்திப் பொய் சொல்வானா, என்ன?

பெற்றவர்கள் முன்னிலையில் எதையும் கேட்க இயலாமல் சாந்திமதி சும்மா இருக்கையில், மனோகரன் கிளம்பலானான்.

"இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாமே!" என்று சுமதியும் வாசவனும் உபசரித்தார்கள்!

"ஆசைதான்! உங்கள் வீட்டுச் சாப்பாடு பற்றிச் சொல்லிச் சொல்லி, எத்தனையோ தரம் சாந்திமதி எங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறாள்! அதனால், கட்டாயமாக இங்கே வந்து நான் சாப்பிடத்தான் போகிறேன். ஆனால் இன்றல்ல! உறவினர் வீட்டு விழா ஒன்று இருக்கிறது! அதற்கு முன்.. வேறு சில வேலைகளும் இருக்கின்றன! அதனால், இன்னொரு நாள் பார்க்கலாம்! பார்க்கலாம் என்ன? நிச்சயமாக வருவேன்! வந்து விருந்தே சாப்பிடுவேன். இப்போது போய்வரட்டுமா?" என்று விடை பெற்றவன், "சாந்திமதி, சற்று வருகிறாயா? அம்மாவின் உணவு பற்றி ஒன்று கேட்க வேண்டும்!" என்று அவளைத் தனியே அழைத்தான்.

கார் அருகே சென்றதும், "என்ன? என்னவோ கேட்கத் துடித்துக் கொண்டிருப்பது போல முகம் இருக்கிறதே, என்ன விஷயம்?" என்று வினவினான்.

பெற்றோர் முன்னிலையில், முதலாளியாகத் தனியே கூப்பிடுகிறானே என்று எரிச்சலில் வந்தவளுக்கு, அவன், அவளுக்காகத் தான் அழைத்திருக்கிறான் என்று புரியவும், ஒரு மாதிரியாகி விட்டது!

கூடவே, அவளது முகத்திலிருந்து, அவளது மனதை மனோகரன் ஊகித்தது, இன்னொரு விதமாக அவளைப் பாதித்தது!

அவளது உள்ளத்தைத் திறந்த புத்தகமாக ஒருவன் அறிவது நல்லதில்லையே!



# 8

எவ்வளவோ கவனமாக நடந்து, அவளது வாழ்வின் பெரும் துக்கத்தையே யாரும் அறியாமல் ஒரு தலைவலி என்ற போர்வையில் மறைத்து முடித்தவள் சாந்திமதி.

அதில் வெற்றியடையவே, மனதை நன்கு மறைக்கக் கற்றுக் கொண்டு விட்டதாக, சிறு கர்வம் கூட, அவளுக்கு உண்டு!

இப்போதும், தன் ஐயத்தைச் சென்னைக்குப் போய்த் தீர்த்துக் கொள்ளுவதாகத்தான் அவள் எண்ணியிருந்தாள்.

அதை மனதுக்குள் மறைத்து வைத்திருப்பதாகவும், வீட்டில், மனோகரனும், சுந்தரியும் உண்டாக்கியிருந்த கலகலப்பில் முழுமையாகக் கலந்து கொண்டிருப்பதாகக் காட்டிக் கொண்டிருப்பதாகவும் கூட எண்ணம்தான்!

ஆனால், மனோகரன் அவளைக் கண்டுகொண்டிருக்கிறானே!

திகைப்பை சமாளித்து, தன் ஐயத்தை அவள் வெளிப்படையாகத் தெரிவிக்க, அவன் தோளைக் குலுக்கினான்.

"சென்னைக்குத்தான் வரப் போகிறாயே! உன் சந்தேகத்தை, அம்மாவிடம் நேரிலேயே கேட்டுத் தெரிந்துகொள்!" என்று இலகுவாக கூறிவிட்டுக் காரில் ஏறிச் சென்று விட்டான்.

ஆனால், அவனிடம் தோற்றுவிட்டது போன்ற உணர்வு, அவளுக்கு உண்டாயிற்று!

அவளை அறிந்து கொண்டதோடு, அவளுக்குச் சரியான பதிலும், அவன் தரவில்லை.

இனி, இவனிடம் எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும்!

முக்கியமாக, முக பாவங்களில் முழுக் கவனம் செலுத்த வேண்டும்! அதை இயல்பாகச் செய்ய முடிந்தால்தான், மனோகரனின் அதிரடி நடவடிக்கைகளைத் தடுக்க முடியும்!

என்ன சாதாரணமாக, அவள் மறுநாள் அவனோடு சென்னை செல்வதை உறுதிப்படுத்தி விட்டான்! ஆற்றுநீர் ஓட்டம் போல, எந்தத் தடையும் இல்லாமல், எவ்வளவு இயல்பாக வந்த வேலையை முடித்துவிட்டான்!

யாருக்கும்... முக்கியமாக அவளுக்கு மறுக்கத் தோன்றவே இல்லையே! இத்தனைக்கும், அவனிடம் சாந்திமதி மறுத்துப் பேசாதவளும் இல்லை!

அவனுடைய தாயாரே என்றாலும், செல்வநாயகியின் வரவு செலவுக் கணக்கைப் பிடிவாதமாக அவனிடம் கொடுக்க மறுத்து, அதில் வெற்றியும் பெறவில்லையா?

அப்போதிருந்த கவனத்தை, இப்போது கலைய விட்டுவிட்டாளே!

ஆனால், இது கூடாது! மறுபடியும் கவனமாக இருந்து, மனோகரனின் கை ஓங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! இந்த வேலையில் நிலைப்பதற்கு, அது முக்கியம்!

சாந்திமதியின் திட்டம் என்னவோ பிரமாதமாகத்தான் இருந்தது!

ஆனால், எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவது முழுக்க முழுக்க வேறு அல்லவா? அப்படி முழு மூச்சுடன் செயல்பட வேண்டிய தருணத்தில், அவளது மூளை அடியோடு மக்கர் செய்து, நல்ல ரகக் களிமண்ணாய் இருந்து, அவன் சொன்னதற்கெல்லாம் அவளைத் தலையாட்ட வைத்து விட்டது!

மனோகரன் கிளம்பிச் சென்றபின், ஒரு சில நிமிஷங்களே, சாந்திமதியால் இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டு நிற்க முடிந்தது! அதற்குள் அவளை அழைத்தபடி, சுந்தரி வாயிலுக்கே வந்துவிட்டாள்.

''என்னக்கா, கார் கிளம்பி இவ்வளவு நேரம் இங்கே என்ன செய்கிறாய்? அவர் அம்மாவின் சாப்பாடு விஷயம் கேட்க என்று அழைத்து ஏதேனும் டோஸ்விட்டாரா? அட, விடுக்கா! அதுதான் கிளம்பிவிட்டாரில்லையா? இனி, நாளைக்குத்தானே வருவார்! அதுவரை, அவரைப் பற்றி நினைப்பானேன்? நாம், நம் விஷயத்தை யோசிப்போம்! அக்கா, நான் பாவாடை தாவணி போடப் போகிறேன்! தாவணி ஓரம் கூட, பூ வேலை செய்து வாங்கி வைத்தாயிற்று! நீ சேலையா, சுடிதாரா? இரண்டுமே, உனக்கு அழகாகத்தான் இருக்கும்! ஆனால், என் பாவாடை தாவணிக்குப் பொருத்தமாக, நீ சேலையை கட்டுக்கா.... அதுதான் கரெக்ட்! எந்தச் சேலை... ம்! மஞ்சளும் பிங்குமாகப் போன தீபாவளிக்கு அழகா...க ஒன்று வாங்கிக் கொண்டாயே, அதைக் கட்டுகிறாயா? அதற்குக் கழுத்தில்...''

தங்கையின் வேகப் பேச்சில், சாந்திமதிக்கு மூச்சு முட்டியது!

எதற்காகப் பாவாடை, தாவணி, சேலை என்று யோசித்தவளுக்குப் பரசுராமனின் திருமண வரவேற்பு நினைவு வந்து, இன்னமும் மூச்சடைக்க வைத்தது!

பரசுராமனின் திருமண வரவேற்பையே எண்ணிப் பார்க்க முடியாதவளுக்கு, அங்கே என்ன உடையணிந்து போவது என்று எப்படி யோசிக்க முடியும்?

சுந்தரிக்கோ, அது தவிர வேறு நினைப்பே இருக்கவில்லை! தனக்கு மட்டுமின்றித் தமக்கைக்கும் அவளே ஆடை அலங்காரத்தைத் திட்டமிட்டு முடித்தும் விட்டாள்!

கடந்த தீபாவளியின் போது, பரசு வீட்டுக்கு வந்தான்!

சுந்தரி இன்னும் அதிக வெடி எடுத்து வர, உள்ளே சென்றபோது, சேலையில் அவள் மிகவும் அழகாக இருப்பதாகச் சொன்னான்!

அடுத்த தீபாவளிக்கு, இந்த வீட்டு மாப்பிள்ளையாக வரப் போவதாகவும்...

"ஐயோ, என்னக்கா முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக் கிறாய்? என்ன சொல்லு!! அந்த மனோகரன் ஏதாவது திட்டினாரா? நீ பேசாமல், அந்த வேலையை விட்டுவிடக்கா!" என்றாள் தங்கை, தானாக ஒன்றை ஊகித்து, அந்த ஊகத்தினால் வந்த கோபத்துடன்!

தங்கையின் கோபம் ஒரு விதமாக ஆறுதலைத் தர, "அப்படி எதுவும் இல்லை, சுந்தா! அவர் திட்டவே இல்லை!" என்று உண்மை சொன்னவள், தங்கையின் அடுத்த கேள்வியை ஊகித்து, அவசரமாக யோசித்து, "எனக்குத் தலைவலி, சுந்தும்மா! நேற்று... இல்லை, முந்தாநாள் ரயிலில் சரியாகத் தூங்காமல், லேசாக முணு முணுப்பாகத் தலைவலி இருந்து கொண்டே இருந்ததா? இப் போது, அதிகமாகிவிட்டது!" என்று சமாளித்தாள்!

"அந்த மனோகரன் சாரைப் பார்த்ததும் அதிகமாகிவிட்டது போல! என்னைப் போய், சுந்தரிக் கொட்டை என்கிறாரே! அவர் தான் சரியான தலைவலிக் கேஸ்! அவரைப்பார்த்ததும், உனக்குத் தலைவலி அதிகமாகி விட்டதே! வரட்டும், அந்த ஆள்... அந்த மனோ கரன் நாளைக்கு வரட்டும்! மிஸ்டர் தலைவலி என்று கூப்பிடு கிறேன்!" என்று ஆத்திரத்துடன் கூறினாள் சுந்தரி!

"ஏய் அதெல்லாம் வேண்டாம்ப்பா! அவர் சும்மா வேலையைப் பார்க்க வந்தார்! விடு. எனக்குச் சற்று நேரம் படுத்திருந்தாலே, தலைவலி சரியாகிப் போய்விடும்!" என்று பெரியவள் சொல்லி

முடிக்கும் முன்பே "படுத்திருப்பதா?!" என்று துள்ளிக் குதித்தாள் தங்கை.

"நீ பாட்டில் படுத்திருந்தால், பார்லருக்கு எப்போது போவது? முகத்துக்கு 'மாஸ்க்' எல்லாம் போட்டு, எப்போது ஃபேஷியல் செய்வது? ஊகூம், அதெல்லாம் முடியாது! ஒரு தலைவலி மாத் திரையைப் போட்டுக் கொண்டு, கிளம்பு! வா!" என்று தமக்கையை விரட்டினாள்.

"ச்சு! அதெல்லாம் எனக்கு வேண்டாம்! இந்த... இந்தத் தலைவலியில், எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை! வரவேற்புக்கு வரக்கூட வர வேண்டாம் என்று பார்க்கிறேன்..." என்று மெல்ல நூல் விட்டுப் பார்த்தாள் சாந்திமதி.

சுந்தரியை அறிந்திருந்ததால், நம்பிக்கை இல்லாமல் சொன் னதுதான்!

அதற்கேற்றாற்போல், அவள் வாக்கியத்தை முடிப்பதற்குள் ளாக, "என்னது?!" என்று சுந்தரி மீண்டும் துள்ளிக் குதித்தாள்!

"என்னக்கா நீ? யோசித்துதான் பேசுகிறாயா? நீ இங்கே இருந்து கொண்டு வரவில்லை என்றால், பரசு அண்ணன் என்ன நினைப் பார்? அவர் வீட்டு ஆன்ட்டி, அங்கிள் எல்லோரும் எவ்வளவு வருத் தப்படுவார்கள்? வந்ததும், வராததுமாக நாளைக்கே கிளம்பப் போகிறாய்! உன்னை வீட்டில் விட்டுவிட்டு அம்மா, அப்பாவுக்கு எப்படி இருக்கும்? எல்லாருக்கும் மேலாக எனக்கு எப்படி இருக் கும், சொல்லு!" என்று காரணங்களை மடமடவென்று பொரிந்து கொட்டியவள், கடைசிக் காரணமாக, "அப்புறம், அந்த லேகா முகத் தில் எப்படிக் கரியைப் பூசுவது?" என்று கேட்டு, சாந்திமதியைத் துள்ளிக் குதிக்க வைத்தாள்.

அதிர்ந்து போய், "அவள்... பரசுவுடைய **மனைவி** முகத்தில் கரி பூசுவதா என்ன உளறுகிறாய்?" என்று, **சற்று அதட்டிக்** கேட்டாள் சாந்திமதி.

"ஆமாக்கா!" என்று சுற்றும் முற்றும் பார்த்துக் குரலைத் தணித்து, "அந்த லேகா இல்லை, லேகா, அவளை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லைக்கா. எங்களில் யாருக்குமே பிடிக்காது! அதனால்தான், அவள் பார்த்து வயிறு எரிகிற மாதிரி, எல்லோரும் பளீரென்று ஆடை, அலங்காரம் எல்லாம் பண்ணிக் கொண்டு போக வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம்!" என்று தமக்கையைத் தனியே அழைத்துப் போய், தகவல் தெரிவித்தாள் சுந்தரி!

ஏன் என்று கேட்பதா, வேண்டாமா என்று சாந்திமதி யோசனை செய்வதற்குள்ளாக சுந்தரியே அந்த விவரமும் சொன்னாள்.

"பரசு அண்ணனின் திருமணத்தின் போதே, எங்கள் எல்லோருக்கும் அவளைப் பிடிக்காமல் போய்விட்டது, அக்கா! நம் மூன்றாம் வீட்டுப் பாரிஜா இல்லை, அவள் பரசு அண்ணனுக்கு உறவுதானே? பெரியப்பா மகனுடைய மகள்! அவளைப் பிடித்து, 'சித்தப்பா, கித்தப்பா என்று பக்கத்தில் வந்து நிற்கிற வேலை எல்லாம் இனி வைத்துக் கொள்ளாதே' என்றாளாம்! அண்ணனுக்குக் கை குலுக்கி வாழ்த்துச் சொன்னேன் அக்கா! 'ஏன், கையைப் பிடித்து உலுக்காமல், வாழ்த்துச் சொன்னால், அவர் காதில் விழாதா' என்று என்னை... என்னையே முறைக்கிறாள், அக்கா! மணமேடைத் தூணில், மஞ்சள் ரோஜாப்பூ வைத்து அலங்காரம் செய்திருந்தார்கள்! திருமணம்தான் முடிந்துவிட்டதே, ஆளுக்கு இரண்டு பூ எடுத்துக் கொள்ளலாம் என்று போனோமா, 'ஒரே பொட்டைக் கழுதைகள் கூட்டமாக இருக்கிறதே' என்று அண்ணனிடம் சொல்லிக்கொண்டு

இருக்கிறாள்! அதென்ன பொட்டை என்பது என்று, எங்களுக்கெல் லாம் ஒரே கோபம்! ஏன், இவள் மட்டும் பெண் இல்லையா? பெண் ணாக இருந்துகொண்டே, இன்னொரு பெண்ணைப் பொட்டை என்பது கேவலம் இல்லை? அதனால், நாங்கள் எல்லோரும், அவளை லைகா என்றுதான் சொல்வது!" என்று என்னைச் சட்டிக் கடுகாய்ப் பொரிந்து கொட்டித் தீர்த்தாள்.

சாந்திமதிக்கு உண்மையிலேயே தலையை வலித்தது!

ஆனால், இதைச் சாக்கிட்டு, வீட்டில் இருப்பது, நடக்காத காரியம்! காய்ச்சலே, வந்தால் கூட, 'சோமசுந்தரம் வருத்தப்படுவார், கண்ணு! சும்மா போய்த் தலையைக் காட்டிவிட்டு வந்துவிடலாம்' என்று தந்தை அழைத்துப் போய்விடுவார்!

வீட்டுப் பெரியவர்களின் சினேகிதம் அப்படி!

அதனால்தான், தந்தையிடம் அவளது பெயரைச் சொல்லத் துணியவில்லை என்றான் பரசு! நண்பர் மகளா, வீடு ஏலம் போகிற அவமானமா என்று எந்த முடிவும் எடுக்க முடியாமல், தந்தை தூக்கில் தொங்கி விடுவாரோ என்ற அச்சம் இருந்ததால் என்று, அதற்குக் காரணமும் சொல்லியிருக்கிறான்!

அந்த அளவுக்கு அவர்களுள் நட்பு உண்டுதான்! தனி வீடு கட்டிக்கொண்டு போன பிறகும் தொடர்ந்த நட்பு!

எனவே, ஒரு தலைவலிக்காக அவளை வீட்டில் விட்டுவிட்டு, அவளுடைய, பெற்றோர் போய்விட மாட்டார்கள்! பரசுவுடைய பெற்றோரும், காலம் முழுவதும் குறைப்படுவார்கள்!

ஆனால், அந்த லை... இல்லை, லேகாவைப் பற்றி, சுந்தரி சொல் வதைக் கேட்கும்போது, வரவேற்புக்குச் செல்ல, சாந்திமதிக்குப் பயமாகவும் இருந்தது!

எப்படியும், சுந்தரி விரும்புவது போல, அலங்காரவல்லியாக அங்கே போவது, நிச்சயமாகக் கூடாது!

வேதனையைக் காட்டும் புருவச் சுளிப்புடன் தங்கையைப் பார்த்து, "ரொம்பத் தலைவலி, சுந்தரி! அதற்காக மாத்திரையைப் போட்டால், வலிக்குப் பதிலாக, சோர்வாக இருக்கும்! அதனால், நான் பகலெல்லாம் படுத்திருக்கிறேன். தலைவலி போய்விடும். சோர்ந்து விழாமல், அங்கே நல்லபடியாக வர முடியும்! ஆனால், இந்த பார்லர், ஃபேஷியல் எல்லாம் வேண்டாம்! என்ன?" என் றுரைத்து, அவளை ஒத்துக்கொள்ளச் செய்தாள்.

"ம்ம்ம்..." என்று யோசனையோடு தமக்கையைப் பார்த்தாள் அவள்!

"ஒன்றும் பண்ணாமலே, நீ நன்றாகத்தான் இருக்கிறாய்! ஆனால், சினிமா நட்சத்திரம் மாதிரி உன்னை நிறுத்தி, அந்த லைகாவை அசர வைக்கலாமே என்று நினைத்தேன்! சரி, விடு! சும் மாவே, அவளை விட, நீ எத்தனையோ மடங்கு அதிக அழகுதான்! அத்தோடு, நாங்கள்தான் ஒரு படையே இருக்கிறோமே! எங்கள் முன்னேயே, அது எண்ணை விளக்கு மாதிரி அழுது வடியப் போகிறது! அதுவே போதும்!" என்றாள் தங்கை!

முகமறியாத அந்தப் பெண் லேகாவை நினைத்து, இப்போது சாந்திமதிக்குப் பாவமாக இருந்தது.

ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ, கல்லூரியில் அடியெடுத்து வைத்தவள் என்று, சுந்தரியின் வயதை ஒட்டி, அந்தப் பகுதியில் ஏழெட்டு பெண்கள் இருந்தார்கள்! எல்லோருமே படு சுட்டிகள்! பயமறியாத இளங்கன்றுகள்! தேன் கூட்டைக் கலைத்த மாதிரி, அவர்களைப் போய், எதிரிகளாக்கிக் கொண்டாளே, அந்த லேகா!

பாவம்! மனைவிக்காகப் பரசுராமனும் வருந்தும்படி ஆகிவிடக் கூடாதே என்று சாந்திமதி கவலைப்பட்டாள்!

நெஞ்சுக்குள் ஏதோ பிசைகிற உணர்வோடுதான், பரசுராமனின் திருமண வரவேற்புக்கு சாந்திமதி புறப்பட்டதே!

அங்கே, பரசுராமன், அவனுடைய குடும்பம்... முக்கியமாக அவனுடைய மனைவியைச் சந்திக்க நேருமே!

தான் இருக்க வேண்டிய இடத்தில் இவளா என்று தோன்றுமா?

தோன்றாதிருந்தால், அது அதிசயம்தான்!

என்ன தோன்றினாலும், முகத்தில் காட்டிக் கொள்ளாமல் கவனமாக இருக்க வேண்டும்! அதுதான் முக்கியம்!

கண்ணாடியில் பார்த்து, நாலைந்து போஸ்களில் முகத்தை வைத்து பார்த்து அவற்றையும் சிலபல முறை செய்து பயிற்சி எடுத்துக் கொண்டு, அதன் பிறகே, சற்று தைரியமாகப் பெற்றோருடன் அவள் கிளம்பினாள்.

ஆடையிலும் சாந்திமதி மிகுந்த கவனம் எடுத்திருந்தாள்.

ரொம்பவும் பளிச்சென்று இராமல், அதே சமயம் பழந்துணியைக் கட்டிக்கொண்டு நிற்பது போலவும் தோன்றாதபடி, ஒரு சேலையை தேர்ந்தெடுத்து அணிந்தாள். அணிமணிகளிலும் அதே கவனம்!

இன்னும் கொஞ்சம் சிறப்பாக அலங்காரம் செய்யலாமே என்ற எண்ணம்தான் தாய் தங்கை இருவருக்கும்! ஆனால், இந்த மட்டும் கிளம்பினாளே என்றும் இருக்கவே இருவரும் வாயே திறக்க வில்லை!

அத்தோடு, சற்று எளிமையான இந்த அலங்காரமும் அவளுக்கு அழகாகவே இருந்ததாலும் அவர்கள் சும்மா இருந்தார்கள் எனலாம்!

பரசுராமன் அவளை எதிர்பார்க்கவில்லை என்பது நன்றாகவே தெரிந்தது!

விழிகள் தெறித்து விழுந்து விடும்போல அவன் பார்த்த பார்வையில், தன்னைக் காட்டிக் கொண்டு விடுவானோ என்று ஒரு சில வினாடிகள், சாந்திமதி மிகவும் கலங்கிப் போனாள்.

ஆனால், நல்லவேளையாக அப்போது அங்கே வந்த சோமசுந்தரம். அவளைப் பார்த்ததும், ''சாந்திமதியா?'' என்று பிரியமாக அழைத்து... "திருமணத்தின்போது நீ மட்டும் இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன், சாந்திம்மா! எப்படி வரவேற்பிற்குக் கடவுள் உன்னைக் கொண்டுவந்து விட்டிருக்கிறார், பார்! நீ வந்தது, எனக்கு ரொம்பவும் சந்தோஷம்மா!'' என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்!

''நீ சந்தோஷப்படுவாய் என்றுதான், அவ்வளவு தலைவலியிலும், சாந்தி கிளம்பி வந்தாள், தெரியுமா?''என்று பெருமையோடு விவரம் தெரிவித்தார் வாசவன்.

''பின்னே? நம் வீட்டு விசேஷம் ஆயிற்றே! காய்ச்சலே என்றாலும், சாந்திகுட்டி வந்துவிட மாட்டாளா? வாம்மா, முதலில் உன் ஆன்ட்டியைப் போய் பார்த்துவிட்டு வருவோம்! அந்த வீட்டுக்குப் போனதில் இருந்து, உன் ஆன்ட்டிக்கு இதே புலம்பல்! அங்கே கண்ணுக்குக் குளிர்ச்சியாக சாந்திப் பொண்ணை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருக்கலாம்., இங்கே காய்ந்த காட்டுக்குள் கொண்டு வந்து தள்ளி விட்டீர்களே என்பாள்! உன்னைப் பார்த்தாலே, அவளுக்கு உச்சி குளிர்ந்து போகும்...'' என்றபடி, அங்கிருந்து சோமசுந்தரம் அவளை அழைத்துப் போய்விட அப்பாடா என்றிருந்தது, அவளுக்கும்!

ஆனால், மேடைப் பகுதியிலிருந்து கண் மறைகிறவரை இருந்த முதுகைத் துளைக்கிற உணர்வு, யாரோ அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை சாந்திமதிக்குத் தெரிவிக்க, அது யாராக இருக்கும் என்று கலக்கத்துடன் யோசித்தாள் அவள்!

பார்ப்பது பரசுவாக இருந்து, மனைவியிடம் அவன் மாட்டிக் கொள்ளக் கூடாதே!

அவள்... அந்த லேகாவாக இருந்தால்...

எப்படியோ? மறுநாள் அவள் இந்த ஊரை விட்டுக் கிளம்பி, இந்தப் பிரச்சினைகள் எதுவும் எட்டாத தூரம் சென்றுவிடப் போகிறாள் என்று, முதல் தடவையாகச் சென்னைக்குக் கிளம்புவதைப் பற்றி நிம்மதியோடு நினைத்தாள் சாந்திமதி!

ஆனால், நிம்மதி அதில் மட்டும்தான்!



## 9

பரசுவுடைய அன்னையும் சாந்திமதியிடம் மிகுந்த பிரியம் உள்ளவளே!

பின் சாமான் அறையில், முக்கியமான, விலை உயர்ந்து பொருட்களுக்குக் காவலாக, அங்கேயே இருந்தாள்!

சாந்திமதியைக் கண்டதும், அவளை ஆவலாக வரவேற்று, அருகே உட்கார வைத்துப் பேசினாள்.

ஆனால், அவளிடம் மிகவும் அன்பாகப் பேசியவள் தொடர்ந்து. அடிமனதில் தான் திருப்தியற்று இருப்பதை இன்னோரன்ன வார்த்தைகளால் சுமதி, சாந்திமதி இருவரிடமும் வெளிப்படையாகவே கூறினாள்.

''வரவேற்பை வீட்டிலேயே வைக்கிற மாதிரி, எவ்வளவு பெரிதாகக் கட்டியிருக்கிறேன் பார் என்று, இந்த வீட்டைப் பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்கிறார்! ஆனால், இதைத் தக்க வைக்க வென்று என்ன விலை கொடுத்திருக்கிறார் என்று நினைத்துப் பார்த்தால் வயிறு எரிகிறது, சுமி!'' என்று தன் சிநேகிதியிடம் கூறியவள் அக்கம் பக்கம் பார்த்துக் குரலைத் தணித்து, ''என் பையனுக்கும், அவளுக்கும் கொஞ்சமேனும் பொருத்தமா, சுமி? நான், இந்தத் தங்கத்தை நினைத்துக் கொண்டே இருந்தேன்! பரசுவும், வேறு யார் மேலோ ஆசைப்பட்டானாம்! அவன் ஆசைப் பட்ட பெண்ணையாவது கட்டி வைத்திருக்கலாம்! தேடிப்பிடித்துக் கடைசியாக ஒரு லங்கிணியைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்! பார்வைக்குத்தான் ஆள் மட்டு என்று பார்த்தால், அவள் பேச்சு தலை சுற்றுகிறது! பரசு அப்பாவானால், செல்லமாக வளர்ந்த பணக்காரப் பெண், அப்படித்தான் இருப்பாள். நாம்தான் பொறுத்துப் போக வேண்டும். விட்டுக் கொடுத்து நடந்துகொள்ள வேண்டும் என்கிறார்! எவ்வளவு பொறுப்பது? எந்த அளவுக்கு விட்டுக் கொடுப்பது? வீட்டுக்குள்ளே ஒரு பெண்ணாக இருந்து பார்த்தால் அல்லவா தெரியும்? இங்கே எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை, சுமி!'' என்று என்று புலம்பித் தீர்த்தாள், அந்த அம்மாள்!

அவளைப் பார்த்துப் பரிதாபப்படும்போதே, இந்தத் துன்பம் எதுவும் தேவையே இல்லையே என்று நினைத்துப் பாராமல், சாந்திமதியால் இருக்க முடியவில்லை!

அதுவும், 'இந்த தங்கத்தை நினைத்தேன்' என்று பரசுவுடைய அன்னை கூறிய பிறகு, அந்த எண்ணம் வராதிருப்பதுதான் அதிசயம்!

ஆனால் நினைத்ததுமே, சாந்திமதி வெகுவாகத் தவித்தும் போனாள்.

இப்போதுதான் திருமணம் ஆகியிருக்கிறது., இன்னும் முழுமையாக இரண்டு வாரம் முடியவில்லை! அதற்குள், அந்தத் திருமணத்தைப் பற்றி இப்படி எண்ணுவது, எவ்வளவு தப்பான காரியம்?

ஒரு வகையில் கேவலமும் கூட அல்லவா?

இந்த நிலைக்கு இறங்கிவிட்டோமே என்று, குன்றிப் போனாள் அவள்.

இங்கே இருந்தால், இதே பேச்சுதான் தொடரும் என்று புரிந்து, மற்றவர்களைப் பார்த்து வருவதாகச் சொல்லி, இரு அன்னை யரையும் விட்டு விலகிப் போனாள்.

ஆனால், வீடெங்கும் உறவினர் கூட்டம்!

பலர் முகம் புதிதாக இருக்கவும், லேகா வகை உறவினர் என்று சாந்திமதி புரிந்து கொண்டாள்.

ஆனால், அறிமுகம் அற்ற பெண் என்பதாலோ, என்னவோ, அவர்கள் வெறித்துப் பார்க்கவும் மெல்லப் பின்வாங்கினாள்.

இந்த இரு குடும்பங்களுக்கும் இடையே உள்ள பழக்கமும், நட்பும் பற்றி, அவர்களுக்கு என்ன தெரியும்?

விருந்தாளி போல நடித்துத் திருட வந்திருப்பதாகக் கூட எண்ணலாமே என்று நினைக்கும்போதே, அவளுக்கு அருவருப் பாக இருந்தது!

ஒவ்வோர் அறையிலும், சாமான்கள் வேறு இறைந்து கிடந்தன.

இப்படிக் கிடக்கும் பொருட்கள் தொலைவதும் சுலபம்! அதே போல, இப்படி ஒரு பெண் வந்தாளே, அவள் திருடியிருப்பாள் என்று சொல்வதும் எளிதே!

பழகிய தோழமை மனிதர்கள் எல்லோரும், முன்புறமாய் வரவேற்புப் பகுதியில் இருந்தனர்!

அங்கே சென்று, பரசுராமனின் பார்வையில் படும் விதமாக உட்கார்ந்திருக்கவும், அவளுக்குப் பிடிக்கவில்லை! அது, அவர்கள் இருவருக்குமே வேதனை!

ஏன், மூன்றாவது ஆளாக அந்த லேகாவுக்குமே துன்பமாகி விடக் கூடும்!

துன்பத்தை அவள் வெளிக்காட்டும் விதம் எப்படியோ? அவளைப் பற்றிக் கேட்ட அளவில், எதுவுமே அவ்வளவு சரி யாகத் தோன்றாத நிலையில், எதற்கு வீண் வம்பு?

எப்படியோ, பரசுவும் லேகாவுமாவது ஒத்து வாழ்ந்தால், அதுவே போதுமானது!

முன்புற வரவேற்புப் பகுதி, வீட்டின் உள்ளறைகள் எங்குமே இருக்க முடியாது போக, சாந்திமதி பக்கவாட்டுத் தோட்டத்தில் தஞ்சம் புகுந்தாள்.

இந்த இடத்தை வாங்கியதில் இருந்து, பரசுவுடைய தாயார் திட்டமிட்டு ஆசையாக வளர்த்த தோட்டம்! அழகாக செடி கொடி களைச் செழிப்பாக வளர்த்து வைத்திருந்தாள். இங்கேயே குடி வந்தபின், பழைய நட்பு, சுற்றத்துக்காக ஏக்கம் வந்தால், இந்தத் தோட்டத்தில் வந்து உட்கார்ந்து பொழுதைக் கழிப்பதாகச் சொல்லு வாள்.

சாந்திமதிக்கும் இந்தத் தோட்டம் மிகவும் பிடித்தமானதே!

இங்கே வந்தால், தோட்டத்துக்குள் சுற்றாமல் திரும்ப மாட்டாள்!

சில சமயங்களில், தற்செயலாக வருவது போலப் பரசுவும் வந்து சேர்ந்து கொள்ளுவான்!

இப்போது எல்லோருமாக வரவேற்பிலும், மேல் தளத்தில் நடந்த விருந்திலும் கவனமாக இருக்க, சாந்திமதி இந்தத் தோட் டத்தைப் புகலிடமாகக் கொண்டு, அங்கே ஒரு குறு மரத்தடியில் போடப்பட்டிருந்த கல் பெஞ்சியில் போய் அமர்ந்தாள்!

மனோரஞ்சிதம், ஜாதியோடு, மல்லியும், ரோஜாவுமாக, இன்றைய விழா வேலையில் பறிக்காமல் விடப்பட்டிருந்த மலர் கள் மணம் வீசி அவளது அலைபாய்ந்த மனதுக்கு ஆறுதல் அளித்தன!

பகலாக இருந்தால், பூக்களின் அழகும் சேர்ந்து கண்களையும் கவர்ந்திருக்கும்!

ஆயினும், தோட்டத்து இளம் காற்றும், குறுக்கீடற்ற தனிமை யும் இதம் தர, பூ வாசனையை அனுபவித்தபடி, கண் மூடிச் சாய்ந் திருந்தாள் அவள்!

வீட்டார் தேடுவார்களோ என்று தோன்றிய சிறு சலனமும், உடனே மறைந்து போனது!

அம்மா, அப்பா சுந்தரி மூவருமே அவரவர் கூட்டத்தோடு இருப்பார்கள்! அவர்களுள் யாருடனாவது, ஏதோ ஒரு கூட்டத்தில் இவளும் இருப்பாள் என்று எண்ணுவார்களே தவிர, தொலைந்த குழந்தை போலத் தேட மாட்டார்கள்! விருந்துச் சாப்பாட்டு அரவம் கொஞ்சம் குறைந்து, நெருக்கமான உறவும் நட்பும் உணவருந்தச் செல்லும்போது போய்ச் சேர்ந்துகொண்டால் போதும்!

அதுவரை, சாந்திமதி இங்கே நிம்மதியாக அமர்ந்திருக்கலாம்!

மெல்ல மெல்ல உடலும் மனமும் இறுக்கம் தளர, எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ, 'நீ இங்கேதான் காத்திருப்பாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்!'' என்ற பரசுராமனின் குரல் அருகில் கேட்க, தூக்கிவாரிப்போட்டது அவளுக்கு!

திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தவளுக்கு, அந்த அரையிருளில், பரசுவின் முகம் சரியாகத் தெரியவில்லை!

விழாவுக்கு வந்தவர்கள் புகுந்தால் தோட்டம் நாசமாகி விடக் கூடும் என்று பரசுவுடைய தாயாருக்குப் பயமாக இருந்தது போலும்! அதனால், தோட்டத்தின் மின் விளக்குகள் போடப்பட்டிராமல், வீட்டு விளக்குகளிலிருந்து கசிந்து வந்த சிறு வெளிச்சம் தவிரத் தோட்டம் பெருமளவு இருட்டாகவே இருந்தது!

நல்லகாலம் என்று நினைத்தாள் சாந்திமதி.

மற்றபடி, இவர்கள் இருவரும் இங்கே தனியாகப் பேசிக் கொண்டிருப்பதை, யாரேனும் பார்க்க நேர்ந்தால், எவ்வளவு தவறாகக் கருதக் கூடும்!

அதுவும், அந்த மாதிரி எண்ணமே இல்லாதபோது... என்று எண்ணமிடும் போதே, பரசுராமனின் பேச்சு நினைவு வர, சாந்தி மதி திகைத்தாள்!

அவள் காத்திருப்பதாகத்தானே அவனே சொன்னான்?

யாருக்காகக் காத்திருக்கிறாளாம்?

அவனுக்காகவா?

எவ்வளவு தவறான கருத்து!

முதலில், இவனது கணிப்பைத் திருத்த வேண்டும்!

அதற்குள், கல்பெஞ்சில் தானும் அமர்ந்தபடி, "நீ அங்கே கண்ணில் படவில்லை, குரலும் கேட்கவில்லை என்றதும், இங்கேதான் இருப்பாய் என்று எனக்குத் தெரிந்து போயிற்று! ஆனால், கடைசி செட் ஆட்கள் வந்து முடியும் வரை. அங்கிருந்து அசைய முடியவில்லை! எனக்காகக் காத்திருந்து, காத்திருந்து ரொம்பவும் போரடித்துப் போயிற்றா, சந்தும்மா!" என்று பரசு உருகவும், என்ன

இப்படிப் பேசுகிறான் என்று. முதல் தடவையாக அவன் மீது சாந்திமதிக்கு சிறு கோபம் உண்டாயிற்று!

''இல்லை, பரசு. நான் உங்களுக்காகக் காத்திருக்கவில்லை. அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்!'' என்று தொடங்கினாள் அவள்.

ஆனால், அவளது பேச்சை ஒத்துக் கொள்ளாமல், ''சும்மா அசட்டு கௌரவம் பார்க்காதே, சாந்தி! என்னிடம், உனக்கு அது அவசியமே கிடையாது! ஏன், இந்தத் தோட்டத்தில் உன்னோடு சந்தோஷமாக விளையாடுவது பற்றி நான் எத்தனை கனவு கண்டிருக்கிறேன் என்று சொல்வதில், எனக்குத் தயக்கமே கிடை யாது, தெரியுமா? உன் ஆசைகளை வெளிப்படையாக என்னிடம் கூறுவதற்கு, நீயும் வெட்கப்படவே வேண்டாம்! என்னால் புரிந்து கொள்ள முடியும், கண்ணு!'' என்றான் அவன், உருக்கமாக!

தன் திருமண வரவேற்பின்போது, இன்னொரு பெண்ணிடம் இந்த மாதிரிப் பேசுவது நாகரீகம் இல்லை என்று இவனுக்கு ஏன் புரியவில்லை?

''பரசு, ப்ளீஸ்! உங்களுக்குக் கல்யாணமாகி, மனைவியும் வந்துவிட்டாள்! தயவு பண்ணி, இந்த மாதிரிப் பேசாதீர்கள்! தப்பு!'' என்றாள் சாந்திமதி.

''நானும் அப்படித்தான் எத்தனையோ முறை சொல்லிக் கொள் கிறேன், சந்தும்மா! ஆனால்,நீ இப்படி வந்து, எனக்காக இங்கே காத்துக் கொண்டிருக்கும்போது, அதெல்லாம் என் நினைவில் கொஞ்சம் கூட நிற்க மாட்டேன் என்கிறதே!'' என்று வருத்தத் துடன் கூறினான் பரசுராமன்.

அவளது மறுப்பைப் பொருட்படுத்தாமல், அவன் திரும்பவும் அதே சுதியில் பேசவும், ''நான் உங்களுக்காக இங்கே

காத்திருக்கவில்லை என்று, முதலிலேயே சொன்னேன், பரசு ராமன்!'' என்று சற்று அழுத்தமான குரலில் சாந்திமதி கூறினாள்.

அவள் வருத்தப்பட்டு அழுதிருந்தால், அவனும் உருகிப் போயிருப்பான்!

ஆனால், அவளது அழுத்தக் குரல். அவனை உசுப்ப, ''அப்படி யானால், இவ்வளவு நேரமாக நீ யாருக்காக இங்கே காத்துக் கிடக்கிறாயாம்? ரொம்ப நேரமாக நீ வீட்டுக்குள் இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும்! இப்போது சொல்லேன். என்னைத் தவிர, வேறு யாருக்காக நீ இங்கே காத்திருந்தாய்?'' என்று பரசு ராமன் கேட்கவும், பதில் சொல்ல வாயெடுத்த சாந்திமதி சட்டெனத் திகைத்தாள்.

உன் தாயார், உன் மனைவியைப் பற்றி இப்படியிப்படிச் சொன் னாள். அதனால் இங்கே வந்து உட்கார்ந்தேன் என்று எப்படிச் சொல்லுவது? விஷயம் வெளியே தெரிந்தால், ஆன்ட்டிக்கு அல்லவா, மேலும் துன்பமாகி விடும்?

அவள் சில வினாடி யோசிப்பதற்குள்ளாக, ''பார்த்தாயா, உனக்குப் பதில் சொல்ல முடியவில்லைதானே? எதற்கு? சும்மா உண்மையை ஒத்துக் கொள்ள வேண்டியதுதானே? இப்போது, நான் ஒத்துக் கொள்ளவில்லையா, உன்மேல் வைத்த ஆசை அப்படியே இருப்பதாக...'' என்று அவன் பந்தாவாகச் சொல்லிக் கொண்டிருக் கும்போதே, ''மாப்பிள்ளை! எங்கள் மாப்பிள்ளை சார் எங்கேப்பா? அவரை, யாராவது பார்த்தீர்களா? லேகாப்பொண்ணு தேடினாள்!'' என்று வீட்டுப் பக்கம் இருந்து உரத்த குரல் ஒன்று கேட்டது!

பாதி வாக்கியத்தை முடிக்கும் எண்ணம்கூட இல்லாமல், பரசுராமன் சட்டென எழுந்துவிட்டான்!

"ஐயய்யோ! நன்றாக மாட்டிக் கொண்டேன்! இங்கே உன்னுடன் பேசிக் கொண்டிருந்தது மட்டும் வெளியே தெரிந்தால், நான் தொலைந்தேன்! வீடு முழுதும் பார்த்துவிட்டு, யாராவது என்னைத் தேடி இங்கே வந்துவிட்டால்... ஐயோ நான் என்ன செய்யட்டும்?" என்று பதறினான் அவன்!

என்னவோ அழுத்திக் கொண்டிருந்த பளு இறங்கிய உணர்வு, சாந்திமதிக்கு!

என்னவென்று தெரியாவிட்டாலும், ஏதோ குழப்பம் அகன்றது போன்ற உணர்வு!

அப்போதைய பிரச்சினையும் இலகுவாகவே தெரிய, "பரசு நீங்கள் முதலில் இங்கிருந்து போய்விடுங்கள்! நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருந்துவிட்டு, மெல்ல வருகிறேன்! நாம் இருவரும் பார்த்ததாகவோ, பேசியதாகவோ யாருக்கும் தெரியாமலே போய்விடும்! ஆனால் ஒன்று மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்! தயவு பண்ணி, இனி எப்போதும், நாம இருவரும் ஒருவரை ஒருவர் பாராமல், பேசாமலே இருந்தும் விடுவோம்!" என்று அவனுக்கு வழி சொல்லிக் கொடுத்தாள்.

அவளது பேச்சை பரசுராமன் முழுதாகக் கேட்கக் கூட இல்லை! "ஆமாம், ஆமாம்! நான் முதலிலேயே போய் விடுகிறேன்! நீ, இப்போதைக்கு அங்கே வந்துவிடாதே! ஆர அமர, ஓர் அரை மணி நேரம் கழித்தே உள்ளே வா!" என்று ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து சென்றுவிட்டான்!

உள்ளூரச் சிரிப்பும், கூடவே வருத்தமுமாக உணர்ந்தாள் அவள்!

எப்போதுமே, நாலு பேர் கண்ணில் பட சாந்திமதியைச் சந்திக்க அவன் எப்போதுமே தயங்குகிறவன்தான்!

பெண்ணாகிய அவள் பெயர் கெட்டுவிடுமோ என்று கலவலைப் படுகிறான்.. அவளுக்காகப் பார்க்கிறான் என்று உருகுவாள் அவள்!

இப்போது பார்த்தால், தன் தோலைப் பாதுகாப்பதில், உள்ள அக்கறையோ என்று எண்ணத் தோன்றிற்று!

ஆனால், ஒரேயடியாக அப்படி நினைப்பதும் சரியாகாது!

தனக்கொரு காதல் இருப்பதைத் தந்தையிடம் துணிந்து சொல்லித்தானே, இருக்கிறான்?

மேற்கொண்டு அதிரடியாகச் செயல்படும் அளவுக்கு பரசு பெரிய தைரியசாலி அல்ல என்பது உண்மையே! ஆனால், அதற்காக அவனை ஒரேயடியாக மட்டமாக எடை போடக் கூடாது! உலகில் எல்லோருமா, பயமறியாத பீமனாக இருக்க முடியும்?

"இன்னும் எவ்வளவு நேரம், இப்படி இங்கேயே இருக்கப் போவதாக உத்தேசம்?" என்ற குரலில், சாந்திமதிக்கு மீண்டும் தூக்கி வாரிப்போட்டது!

ஏனெனில், இப்போது குரல் கொடுத்தது மனோகரன்!

இவன் எங்கே, இங்கே வந்தான்? எவ்வளவு நேரமாக இங்கேயே இருக்கிறான்? பரசுவும் அவளும் பேசியது முழுவதையும் கேட்டிருப்பானோ?

அல்லது அரைகுறையாகக் கேட்டுவிட்டுத் தானாக ஒரு முடிவெடுத்து, அவளை வாட்டி வதைக்கப் போகிறானா? செய்யக் கூடியவன்தான்!

செய்வது தப்பென்று தோன்றினால், தலைகீழாக மாறியும் விடுகிறவன்தான்!

இதையும், சொன்னால் புரிந்துகொள்வானா?

மனோகரன் புரிந்துகொள்ள வேண்டுமே என்று தவிப்பாக இருந்தது சாந்திமதிக்கு!

ஏனெனில், சென்னையில் இந்த கலகலப்பு மாறுவதை அவளால் தாங்க முடியாது!

நிலவு ஒளி வீசத் தொடங்கியிருந்தபோதும், ஒருவரின் முக பாவனைகளைக் கண்டறியக் கூடிய வெளிச்சம் இருக்கவில்லை!

முயன்று பார்த்துவிட்டு மெல்ல, ''மனோகரன் சா...ர்'' என்று தயக்கத்துடன் அழைத்தாள் அவள்!

''இன்னொருத்தியைத் திருமணம் செய்துவிட்டவன் உனக்குப் பரசு! நான் மட்டும் சாரா?''

''பரசு சின்ன வயதிலிருந்து சேர்ந்து வளர்ந்தவர்!''

''அதனால் மட்டும்தான், அவ்வளவு உருக்கமாகப் பேசினீர்களா? கடவுளே! நானும் ஏன், ஏன் என்று எத்தனை முறை யோசித்தேன்! இப்படி இருக்கக் கூடும் என்று ஒரு தரம் கூடத் தோன்றவே இல்லையே! சொல்லு! இதை நீ ஏன் தெரிவிக்கவே இல்லை?''

''எதைத் தெரிவிக்கவில்லை என்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லை. மனோகரன் சார்'' என்று குழப்பத்துடன் பதிலளித்தாள் சாந்திமதி.

''அதுதான்! நீ ஒருவனைக் காதலித்தாய் என்பதை! அதை ஏன் மறைத்தாய்?'' என்று ஆத்திரமாகக் கேட்டான் மனோகரன்.

எல்லாவற்றையும் கேட்டிருக்கிறான்!

அவள் பரசுவுக்காக இங்கே காத்திருக்கவில்லை என்பதை பரசுவைப் போலவே, இவனும் ஒத்துக்கொள்ள மறுப்பானா? மறுத்தால், அவளை மிகவும் கேவலமாக அல்லவா நினைப்பான்!

ஆனால் அதை விடவும் ஆபத்து, இன்னோன்று இருக்கிறது!

நீ குணக் கேடானவள் என்று வேலையில் இருந்து விலக்கி விட்டால்?

அதைக் கற்பனை செய்து பார்க்கக் கூட, சாந்திமதியால் முடியவில்லை!

செல்வநாயகியையும், இந்த மனோகரனையுமே பாராதிருப்பது பெரும் துயரம் அல்லவா? அந்தத் துன்பம் ஒரு புறமிருக்க, பரசு என்ன சொல்லுவான்?

வெறுமனே கூட்டத்திலிருந்து ஒதுங்கி இருந்ததையே, தனக்காகக் காத்திருந்ததாகக் கூறுகிறவன், அவனுக்காகத்தான் வேலையை விட்டுவிட்டு, இங்கேயே இருந்துவிட்டதாகவும் சாதிப்பானே!

கடவுளே! எத்தனை தொல்லை!

இருந்திருந்து, இந்த நேரம் பார்த்து, இவன் இங்கே வர வேண்டுமா?

ஆனால், இந்த இடத்துக்கு, இவன் எப்படி வந்தான்?

மனோகரன் வந்த வேலை முடிந்து, மிகுந்த நேரத்தை அவள் வீட்டில் எல்லாருடனும் குதூகலமாகப் பேசிக் கழிக்கலாம் என்று வந்து, வீடு பூட்டியிருப்பதைப் பார்த்து, அக்கம் பக்கம் விசாரித்து இங்கே வந்திருப்பானோ என்று கற்பனை சிறகடிக்க, ஐயோவென் றிருந்தது அவளுக்கு!

இங்கே வராமல் வீட்டிலேயே இருந்திருந்தால், இந்தச் சிக்க லில் மாட்டிக் கொள்ளாமல், இந்நேரம் நிம்மதியாக மனோகரனுடன் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்திருக்கலாம்!

அதை விட்டு...

"நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று கம்மிய குரலில் கேட்டாள்!

"ஏன்? வராதிருந்தால், விஷயம் தெரியாமலே போயிருக்குமே என்றிருக்கிறதா? எல்லாம் தெரிய வேண்டும் என்பதற்காகவே, இந்த வரவேற்புக்கு நான் வர நேர்ந்ததோ, என்னவோ? கல்யாணப் பெண் வீட்டார் எங்களுக்கு உறவு! திருமணத்துக்குப் போக முடியாததால், இதற்கு வந்தேன்! ஆனால், இப்போது அதுவா முக்கியம்? முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லு! உன் காதல் விவகாரத்தை நீ ஏன் எங்களிடம் தெரிவிக்கவில்லை? ஏன் மறைத்தாய்?" என்று படபடவென்று, மனோகரன் அதட்டிக் கேட்டான்!

காதல் விவகாரத்தைத் தெரிவிப்பதா?

ஒருவனை நேசித்தால், இன்னாரை நேசிக்கிறேன் என்று தண்டோராவா போடுவார்கள்? அதுவும் அந்தக் காதல் முழுமையாகத் தோற்ற பிறகு?

என்ன அசட்டுத்தனமாக கேள்வி?

அதற்கு மேல், அதட்டல் வேறு?

தலையை நிமிர்த்தி, "அது என் சொந்த விஷயம்! அதைப் பற்றி, உங்களுக்கு எதற்குச் சொல்ல வேண்டும்?"என்று கேட்டாள் சாந்திமதி.

ஆத்திரமுற்று, "எதற்குச் சொல்வதா? ஓர் இடத்தில் வேலை செய்தால், அங்கே, உன்னைப் பற்றிய விவரங்களைத் துல்லியமாகக் கொடுக்க வேண்டாமா?" என்று மனோகரன் கோபமாகக் கேட்டான்.

சாந்திமதிக்கோ, கோபம் மட்டுமின்றி, சட்டென மனதில் தோன்றிய பதிலில் சிரிப்பும் வர அதையே சொல்லவும் முடிவு செய்தாள்!

காரணமற்றுக் கோபப்படுகிறவன், வாங்கிக் கட்டிக் கொள்ள வும் வேண்டும்தானே?

"செய்திருக்கலாம்! ஆனால், உங்கள் வேலைக்கான விண்ணப் பப் படிவத்தில், அது பற்றிய கேள்வியே இல்லையே!" என்று உதட்டைப் பிதுக்கிக் கையை விரித்தாள் அவள்! "காதலித்தாயா இல்லையா என்று, முதலில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாமா?"

"என்ன கிண்டலா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் மனோகரன் "விண்ணப்பப் படிவத்தில் இல்லாவிட்டால், சொல்லத் தேவையில்லை என்று சும்மா இருந்து விடுவதா? எப்படியாவது, தெரிவிக்க வேண்டாமா?"

"எப்படித் தெரிவிப்பது? நான் இன்னாரைக் காதலித்துத் தோற்றவள் என்று, நெற்றியில் எழுதி ஒட்டிக்கொண்டா வரமுடி யும்? அப்படிச் சொல்வதற்கும், இது ஒன்றும், அப்படிப் பெருமை யாக அறிவிக்கிற விஷயம் அல்லவே! அத்தோடு, திரும்பவும் சொல்கிறேன், இது என் சொந்த விஷயம்! வேலைக்கும், இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை! அதனால், உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை!" என்று, சற்று அமர்த்தலாகவே கூறி முடித்தாள் சாந்திமதி.

"தொடர்பு, அவசியம் எதுவும் இல்லையா? எத்தனை முறை... எத்தனை தடவை தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக யோசித்திருக்கிறேன் தெரியுமா? நீ எப்படி என் சொல்லை மதிக்காமல் இருக்கிறாய் என்று எவ்வளவு குழம்பியிருக்கிறேன்! அதட்டி அதிகாரம் செய்தாலும், சிரித்து நயந்தாலும், இன்னொரு பெண்ணைக் கூட்டி வந்து காட்டினாலும், எதுவும் உன்னிடம் செல்லாததன் காரணம், இந்தப் பரசுராமன்தான் இல்லையா?"

உரக்க யோசிப்பது போல, மனோகரன் சொன்னதை, மறுத்துப் பேசினாள் சாந்திமதி. "அதெப்படி? வேறு யாரையும் விரும்பாத பெண் என்றால் உங்கள் இஷ்டம் போல ஆடுவாள் என்றா, எண்ணி னீர்கள்? அவளுக்கென்று ஓர் அபிப்பிராயம் இராதா, என்ன?"

"பெருமையோ, கர்வமோ இல்லாமல் சொல்லுகிறேன்! உனக்குச் சம்பளம் கொடுக்கும் முதலாளி நான்! என்னை ஒட்டித்தானே, உன்னுடைய அந்த அபிப்ராயம், இருக்க வேண்டும்?"

இதற்குப் பெயர் கர்வம் இல்லையாக்கும்? இவனை ஒட்டித்தான், அவளது அபிப்பிராயமே இருக்க வேண்டும் என்றால், அது கர்வம் இல்லையா?

"தயவு பண்ணி, இந்தப் பேச்சை விடுங்கள்! என்னைப் பொறுத்தவரை, என்னை நேர்முகமாகப் பரிசீலித்து, வேலையில் சேர்த்தது, ஆன்ட்டிதான்! அவர்கள் கேட்டால், அப்போது, அவர் களிடம் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்!" என்று சற்று விட் டேற்றியாகவே சொல்லிவிட்டு, வேண்டுமென்றே அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள், சாந்திமதி.

"மெள்ள! தலை சுளுக்கிக் கொள்ளப் போகிறது!" என்று ஏளனமாகவே எச்சரித்தான் மனோகரன். வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு, "இப்போதைக்கு, இந்தப் பேச்சு இப்படியே இருக் கட்டும்! எல்லாம் சென்னைக்குப் போய்த்தானே பார்த்துக் கொள்ளு வோம்! ஆனால்... என்னோடு வருகிறதான உத்தேசம், அப்படியே இருக்கிறதுதானே?"

கேலி போலக் கேள்வி கேட்டான் அவன்!

ஆக, வரத்தான் சொல்லுகிறான்!

என்ன கோபம் இருந்தபோதும், அவளை, வேலையை விட்டு விலக்கும் எண்ணத்தோடு, எதையும் பேசவில்லை!

செல்வநாயகி மனோகரனை, சாந்திமதி பாராதிருக்கத் தேவை யில்லை! பரசு கண்ட கற்பனை செய்து உளறுவதைக் கேட்கவும் கட்டாயமில்லை!

அவளே அறியாமல், அவளது இதயத்தைச் சுற்றிலும் பரவிப் பற்றிக் கொண்டிருந்த இறுக்கம் சட்டெனத் தளர, அந்த வேகத்தில் முகம் மலர்ந்து, "என்னை இங்கே விட்டுவிட்டுப் போய்ப் பாருங் கள், பார்க்கலாம்!" என்று இலகுவாகக் கூறிவிட்டு, நாக்கைப் பல மாகக் கடித்துக் கொண்டாள், சாந்திமதி!

ஆனால், நல்ல வேளையாக மனோகரன் அதைத் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை!

"விட்டுவிட்டு போவதா? அப்புறம், நீ அங்கே வந்து சேரும் வரை, அம்மாவுக்கு யார் பதில் சொல்வது?"என்றுவிட்டு, "வா, உள்ளே போகலாம். இந்த இருட்டில், இங்கே நீ தனியாக இருக்க வேண்டாம்" என்று உள்ளே அவளை அழைத்துக்கொண்டு போனான் அவன்!

இருவருமாக வரவேற்பு ஹாலினுள் நுழையும் முன், அவனை அறிந்த யாரோ அழைக்க, மனோகரன் அவருடன் பேசியவாறு நின்றுவிட, சாந்திமதி மட்டும் உள்ளே சென்றாள்.

ஏதோ, எல்லாம் நன்றாகிவிட்டது போ, அவளுக்கு உள்ளூர ஒரு மகிழ்ச்சி!

இன்னமும் எதுவும் தெளிவாகவில்லை. அவளது பேச்சை மனோகரன் ஒத்துக் கொள்ளவும் இல்லை. சென்னையில் போய்ப் பேச வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறான் என்றாலுமே, உதடுகளில் தானாக மலர்ந்த புன்னகையோடுதான் அவள் உள்ளே சென்றாள்.

ஆனால், உள்ளே சென்றதுமே, புயலென சாந்திமதியின் அரு கில் வந்தவள் லேகா.

அருகில் வந்து, சாந்திமதியின் தோளைப் பிடித்து முரட்டுத்தன மாகத் தன்புறம் திருப்பி, "ஏண்டி, உனக்கு உத்தியான நந்தவனத் தில், காதல் லீலை நடத்த அடுத்தவள் புருஷன்தான் கிடைத்தானா?" என்று உரக்கக் கேட்டாள்!

உடம்பின் ஒவ்வோர் அணுவும் கூனிக் குறுக, முகம் கன்றிச் சிவந்து, குன்றிப் போனாள், சாந்திமதி.



# 10

பரசுராமனுடைய தந்தை சோமசுந்தரம் பெருமிதமாகச் சொல்லிக் கொண்ட பெரிய ஹால் அது! அங்கேயேதான் வரவேற்பின் போது, புது மணமக்கள் நின்று வந்தவர்களை வரவேற்றனர்!

ஓர் அரைமணி நேரம் முன்பாக என்றால், அறிந்த, தெரிந்த வர்களின் கூட்டம் நிறைய இருந்திருக்கும்!

நல்லவேளையாகப் பெரும்பாலோர் விருந்துண்டு, விடை பெற்றுச் சென்றுவிட்டிருந்தனர்.

இரு வீட்டு நெருங்கிய உறவும், நட்பும் மட்டுமே அப்போது இருந்தனர்!

ஆனால், அவர்களிலுமே, அந்த ஹாலில் மட்டுமே அங்கு மிங்குமாய்க் கிட்டத்தட்ட இருபது பேர் இருந்தார்கள்!

சாந்திமதி, பரசுராமனுடைய பெற்றோர், லேகா வழிச் சொந்தம் என்று அங்கிருந்த அனைவரின் சளசளவென்ற பேச்சும் அப் படியே நின்று, எல்லோரும் அவர்களைத் திரும்பிப் பார்த்தனர்!

இவ்வளவு பேர் மத்தியில், நாக் கூசாமல் என்ன பேச்சுப் பேசுகிறாள்!

புது மணப்பெண் என்கிற கூச்சம் கூட இல்லாமல் எவ்வளவு உரக்கக் கத்துகிறாள் என்று அசுசியாக எண்ணும்போதுதான், பரசுவும், லேகாவும் ஒருவருக்கொருவர் பொருத்தம் உள்ளவர்கள் தானோ என்ற எண்ணம் சாந்திமதிக்கு உண்டாயிற்று!

அவனும் இப்படித்தான் எடுத்த எடுப்பில், சாந்திமதியைத் தவறாக நினைத்துப் பேசினான், என்னவோ, சாந்திமதி அவனுக் காகத்தான் தோட்டத்தில் காத்திருந்த மாதிரி நினைத்தவன், அவள் என்ன சொல்லியும், உண்மையை ஒத்துக் கொள்ளவே இல்லை!

இப்போது முதல் படியாக, பரசுவைப் போலவே இவளும், அவளைத் தவறாக நினைத்ததோடு, அதே போல, உண்மையை ஒத்துக் கொள்ளவும் போவதில்லையோ?

ஆனால், அதற்காக முயற்சி செய்யாமல் விட்டுவிட்டுக் குன்றிக் குறுகி நின்றால், அவள்தான் குற்றவாளி என்பதாக அல்லவா தோன்றும்?

யோசனை ஓடவும், உணர்ச்சிகளின் தாக்கம் சற்றுக் குறைய, உடல், மனம் இரண்டையும் திடப்படுத்திக் கொண்டு, சாந்திமதி பேசலானாள். "இதைப் பாருங்கள் லேகா, நீங்கள் ஏதோ தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன்..." என்று, முயன்று வருவித்த அமைதியுடன் தொடங்கியவள் முடிக்கு முன்னரே, லேகா கோபமாகக் கடுங்குரலில் குறுக்கிட்டாள்!

"ஆகா...! நல்ல நகாசாத்தான் பேசுகிறாய்! அப்படி என்னத் தைடி, நான் தப்பாக நினைத்துத் தவறாகப் புரி....ந்து கொண்டு விட்டேன், என்கிறாய்? நீங்கள் இரண்டுபேரும், தோட்டத்துக் குள்ள அசிங்கம் பண்ணலை? அங்கே உன்னைக் கொஞ்சிக்

குலாவிட்டுக் கள்ளன் மாதிரி, அந்த ஆள் அங்கேயும், இங்கேயும் பார்த்துக் கொண்டு இங்கே ஓடி வரவில்லை? ஒன்றாகப் போனால், சந்தேகப்படுவேன் என்று அவரை முதலிலே அனுப்பிவிட்டு, ரொம்பப் பவ்வியமாக, இப்போது வருகிறாயா? பாலைக் குடித்த திருட்டுப் பூனை மாதிரி, இளிப்பு வேறு! இதற்கு மேலே, தப்பாகப் புரிய என்ன இருக்கிறது? அதுதான், உள்ளங்கை நெல்லிக்கனி மாதிரி, தெள்ளத் தெளிவாகத் தெரிகிறதே! அப்புறம் என்ன, தப்பாகப் புரிவதும், தவறாகப் பேசுவதும்?'' என்று கிரீச்சிட்டாள் லேகா.

அவள் பேச்சில் குறுக்கிட முயன்று தோற்றாள் சாந்திமதி.

மூச்சுவிடாமல் இப்படி அலறுகிறவளிடம் என்ன பேச முடியும்?

ஆனால், அதிர்ந்து நின்ற பெரியவர்கள் சற்றே சுதாரித்து, பேச முன் வந்தனர்.

ஏதோ சொல்ல வந்த வாசவனைப் பொறுத்திருக்கும்படி சைகை செய்து நிறுத்திவிட்டு சோமசுந்தரம் மருமகளிடம் வந்தார்!

''இதைப் பாரும்மா லேகா, சும்மா வாய்க்கு வந்தபடி பேசக் கூடாது! சாந்தி ரொம்ப நல்லபொண்ணு...'' என்று தொடங்கியவரை, அருமை மருமகள் முடிக்கவிடவில்லை!

அவரது பேச்சிலும் குறுக்கிட்டு, ''அப்பேர்ப்பட்ட நல்ல பொண்ணை விட்டுவிட்டு, பொண்ணைக்கொடு என்று, என் அப்பா காலிலே ஏன் வந்து விழுந்தீர்களாம்? பணத்துக்காகத்தானே? கை நீட்டிப் பணத்தை வாங்கி, அதையும் வாரி இறைத்துவிட்டு, எனக்கு எதிராக எவளோ ஒருத்திக்கு ஆதரவாகப் பேசுவீர்களா? வாயைத் திறக்கப் படாது! பொத்தி மூடிக்கொண்டு, அங்கே போய் உட்காருங்கள்!'' என்று, தன் பெருங்குரலைச் சற்றும் தணிக்கா மலே அதட்டி ஒரு மூலையைக் காட்டினாள் அவள்.

சோமசுந்தரத்தின் அதிர்ச்சி, அவரது முகத்திலேயே தெரிந்தது! இவள் ஏற்கனவே இப்படி ஏதோ பேசித்தான். அவர் மனைவி, மருமகளின் பேச்சு தலை சுற்றுகிறது என்றால் போலும்!

கூடவே, லேகாவைப் பற்றி தங்கை கூறியதும் நினைவு வர, இதிலிருந்து எப்படி மீளப் போகிறோம் என்று, சாந்திமதி திகைத்தாள்!

வெறும் அசட்டு பயந்தாங்குளியாக அவளை வளர்க்கவில்லை தான். என்றாலும், இந்த மாதிரி வல்லடி வம்புப் பேச்சுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, அவளுடைய பெற்றோர் அவளை வளர்க்க வில்லையே!

இதில் எந்த இடத்திலும், வாயே திறக்காமல், 'நன்மரமா'கத் தரையைப் பார்த்தபடி பரசுராமன் நின்றிருந்தான்.

ஒரே ஒருதரம், இமைகளை மட்டும் தூக்கி அவன், அவளைப் பார்த்த பார்வையில் ஒருவிதத் திருப்தி இருப்பதைக் கண்ட சாந்திமதி திடுக்கிட்டாள்.

இந்த நிலையில் எப்படி திருப்தி தோன்ற முடியும்?

அவளைப் போலவே... சொல்லப் போனால், சாந்திமதியை விடவும், தன் மனைவி இப்படி அநாகரீகமாகப் பேசுகிறாளே என்று, அவன் அதிகமாக அல்லவா மனம் குன்ற வேண்டும்?

சாந்திமதியின் பெயர் கெட்டுப் போவது பற்றியா, திருப்தி? பெயர் கெட்டுப் போனால், அவள் அவனையே நினைத்தபடி கிடப்பாள் என்று எண்ணினானா?

அப்படி நினைப்பது வக்கிரம் ஆயிற்றே!

இது போன்ற சம்பவங்களால்தான், மனிதர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறதா? அல்லது, புரிந்துகொள்ள வைப்பதற்காகத்தான், இந்த மாதிரிச் சம்பவங்கள் நடக்கின்றனவா?

ஆனால் சாந்திமதியின் மனம், அதிக நேரம் இந்த ஆராய்ச்சியில் நிலைக்கவில்லை!

இது போன்ற ஆராய்ச்சிக்கு, இது நேரமும் இல்லை!

இந்தச் சிக்கலில் இருந்து, நல்லபடியாக எப்படி மீள்வது என்றுதான் முதலில் பார்க்க வேண்டும்! எப்படி?

கொஞ்சமாவது நியாய புத்தியோ, நாகரீகமோ இருந்தால், உண்மையையே கூட, எடுத்துச் சொல்லலாம்!

அதுதான் இல்லை என்றாலும், அடுத்தவர் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டால்தானே, அவளிடம் எந்த ஒரு வார்த்தையையும், சொல்லவேனும் இயலுமா?

தாயும் தகப்பனாரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, ஏதோ சொல்ல முன்வருவதைப் பார்த்துவிட்டு, அவசரமாக, "வேண்டாம்மா!" என்று சாந்திமதி அவர்களைத் தடுத்தாள்!

சொந்த மாமனார், மருமகளிடம் பட்ட பாட்டிற்கு, இவர்கள் எம்மாத்திரம்? கூச்ச நாச்சமின்றி அசிங்கமாகப் பேசுகிறவர்களிடம், பேச்சைத் தவிர்ப்பதுதான் உத்தமம்!

குறைந்த பட்சமாகப் பெற்றோரையேனும் காப்பாற்றலாமே!

ஆனால், வெறி பிடித்துப் போயிருந்த லேகா, யாரையும் விடுவதாக இல்லை!

சாந்திமதி பேசியதைக் கவனித்து, "ஏன்? என்கிட்டே பேசினால், உங்கள் பெரிய மனுஷத்தனம் குறைந்து போகுமா? பேச வேண்டாம் என்று தடுக்கிறாயே! ஒன்று தெரிந்துகொள். நாங்கள்தான் பணக்காரர்கள்! உன்னைப் போல அன்றாடம் காய்ச்சிகளோடு பேசுகிறது. எங்களுக்குத்தான் கேவலம்! அசிங்...கம்!" என்று அபிநயத்தோடு அருவருத்தாள்!

கடவுளே உதவிக்கு வந்தது போல, அந்த நேரம் பார்த்து, மனோகரன் ஹாலினுள் வந்தான்.

இருக்கும் கேவலம் போதாது என்று, இவன் முன்னே வேறா என்றுதான், சாந்திமதி முதலில் நினைத்தாள்!

ஆனால், உள்ளே வந்ததுமே, ஒரு பார்வையில் ஓரளவு நில வரத்தை உணர்ந்து, "என்ன லேகா, உன் பெற்றோர் வீட்டில்தான் காட்டு தர்பார் நடத்தினாய் என்றால், இங்கேயுமா இப்படி? கண வன் வீட்டிலேனும், கொஞ்சம் அடக்கி வாசிக்கக் கூடாதா?" என்று சற்று சலிப்புடன் அவன் வினவவும், அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது!

பெண் வீட்டார் உறவு என்றானே!

நெருங்கிய உறவாக இருந்து, இவனிடமேனும் லேகா அடங் கினால் நன்றாக இருக்குமே என்று அவள் எண்ணியபோதும், மனோகரன், லேகாவுடைய உறவினராக இருப்பது, ஏனோ அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவுமில்லை!

அதே போல, மனோகரனிடம் அடங்குவது, லேகாவுக்கும் கொஞ்சமும் பிடிக்கவில்லை!

"என்னைச் சொல்கிறாயே, அண்ணா! இங்கே என்ன நடந்தது, தெரியுமா? இந்த எச்சிக்கலை நாய் என்ன பண்ணிற்று தெரியுமா? என் புருஷனைத் தனியாக இழுத்துப் போய்..."

"சீ, மூடு வாயை!" என்ற ஓர் உறுமலில், 'ஐயோ' வென்று குன்றிய சாந்திமதியும், அட்டகாசமாகக் கதை சொல்லிக் கொண் டிருந்த லேகாவும் ஒருங்கே அதிர்ந்து விழித்தனர்!

"நாய், கீய்... என்று இவளைக் கண்டபடி பேசினால், பல்லைத் தட்டிவிடுவேன்! ஜாக்கிரதை! முட்டாள்! சொந்த வீட்டில்தான்

பேயாட்டம் என்றால், புகுந்த வீட்டிலும் தொடங்கிவிட்டாயா? அதுவும், வரவேற்பன்று, வீடு முழுவதும் ஆட்களை வைத்துக் கொண்டு, அநாகரீகமாக என்ன பேச்சுப் பேசுகிறாய்? வெட்கமாக இல்லை? சீச்சீ!" என்று, கோபமும், அருவருப்புமாக அதட்டினான்.

இந்த மாதிரிக் குரலில், இப்படிப்பட்ட பேச்சைக் கேட்க நேர்ந்தால், சாந்திமதியால் தலையைத் தூக்கக் கூட முடியாது! ஆனால், தான் வேறு மாதிரி என்று லேகா காட்டினாள்.

"இந்தக் கோபத்தையும், அருவருப்பையும், நீ காட்ட வேண்டியது, என் புருஷனுக்கு வலை வீசும் இந்தச் சிறுக்கியிடம்தான்! என்னிடம் இல்லை! இந்த மினுக்கி போல ஏழைச் சிறுக்கி என்று நினைத்து என்னிடம் நீ பேசவும் வேண்டாம்!" என்றாள் லேகாவும் ஆத்திரமாகவே!

"சிறுக்கி அது இது என்று, கிறுக்குத்தனமாகப் பேசினால், ஒட்டு மொத்தமாக கூண்டோடு அழித்து விடுவேன்!" என்றான் மனோகரன் கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பி! "ஒன்றுமில்லாமல் போன உன் அப்பாவை இந்த அளவுக்கு உருவாக்கி விட்டவன், நான்! பழைய மாதிரி ஆக்கவும் என்னால் முடியும், அது. உனக்கு நினைவிருக்கட்டும்!" என்று மனோகரன் மிரட்டவும், செய்வதறியாதவள் போல, முதல் முறையாக லேகா பேந்த விழித்தாள்.

அவளது காட்டுக் கூச்சல் நின்றது, சற்று ஆறுதலை அளித்த போதும், மனோகரனிடம் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள் என்று, சாந்திமதி ரொம்பவே அவமானமாக உணர்ந்தாள்.

இதில், அவனுக்கே தெரிந்த உண்மை வேறு!

இரண்டும் சேர்ந்து, மனோகரனின் மனதில், அவளது உருவம் என்ன கோரம் ஆகியிருக்கும் என்று தவித்தாள் அவள்!

சூழ இருக்கும் மற்றவர்களும் தான், அவளைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

இப்போதைக்கு, மனோகரன், லேகாவை அடக்கியிருக்கிறானே தவிர, அவள் கூறியதன் பொய், மெய் நிரூபிக்கப்படவில்லை எனும்போது, அவளைத் தவறாகவும் நினைக்கலாம்தானே?

ஒரு மாசு, மறுவற்று வளர்ந்துவிட்டு...

பெற்றோர் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட, அவளால் முடியவில்லை!

அவளால், அவர்களுக்கும் எவ்வளவு அவமானம்?

பரசுவிடம் மனம் சலனப்பட்டதற்கான தண்டனையா?

லேகாவின் குணத்துக்கு, அடங்குவது முடியாது போலும்!

அமைதி கலைத்து, "எவளோ ஒரு சிறு... ஒருத்தியைச் சொன்னால் உனக்கு ஏன் ஆத்திரம் வருகிறது?" என்று, தன் ஒன்றுவிட்ட அண்ணனைக் கேட்டாள் அவள்.

"எவளோ ஒருத்தியா" என்று கேட்டவாறு, மனோகரன், சாந்திமதியின் அருகில் வந்தான்.

அவளது கண்ணை ஒரு தரம் நேராக நோக்கி, வலது கையை ஏந்தினாற்போல நீட்டினான்.

எதற்காக என்று காரணம் புரியாவிட்டாலும், அவனது செயலின் பொருள் புரிந்து, தன் கையை, அவன் கை மீது வைத்தாள் சாந்திமதி!

முறுவலோடு திரும்பி நின்று, மறு கரத்தால், அவளது தோளை அணைத்தான்.

காடு மேடெல்லாம் அலைந்து, வீடு வந்தது போலப் பாதுகாப்பாக உணர்ந்தாள், சாந்திமதி.

இனிப் பயப்படத் தேவையில்லை! எல்லாம், மனோகரன் பார்த்துக் கொள்ளுவான்!

எல்லையற்ற நிம்மதியில், அவள் தலை, தானாக அவன் தோள் மீது சாய்ந்தது!

அணைத்த கையின் ஒரு விரல், எச்சரிக்கையாய் அவள் மேனியில் அழுந்த, "வருங்காலத்தில் என் மனைவி ஆகப் போகிற வளைக் கேவலமாகப் பேசினால் ஆத்திரம் மட்டுமா, வரும்? கோபம், சினம், சீற்றம், வெறி... எல்லாமேதான் வரும்! அதெல்லாம் செயல்பட்டு உன் குடும்பத்தைத் தாக்கினால், நீ என்ன ஆவாய் என்று யோசித்து, இதற்கு மேல் எதுவானாலும் பேசு!" என்று மிரட்டலாக முடித்தான் மனோகரன்!

திகைத்த ஓர் அமைதியிலிருந்து, முதலில் மீண்டவள் மறுபடியும் லேகாதான்!

"திருமணமே செய்யப் போகிறாயா? அதெல்லாம் பெரிய முடிவு! இந்த மாதிரி அன்றாடம் காய்ச்சியை வீட்டுக்குள் சேர்ப்பதற்குப் பெரியம்மா சம்மதிப்பார்களா? அதை விடவும், இவள் எப்படிப்பட்டவள் என்று உனக்கு என்ன தெரியும்? இந்த மாதிரி, ஒரு விழா நேரத்தில் தோட்டத்தில் என் புருஷனோடு இவ்வளவு நேரம் இவள் தனியாகக் கொஞ்சிக் குலா..." என்று அவள் அதி வேகமாகச் சொல்ல, "வாயை மூடு, முட்டாள் கழுதை!" என்று கடுமையான குரலில் அதட்டி, மீண்டும் அவள் பேச்சை நிறுத்தினான் மனோகரன்.

"அறிவு கெட்ட மூடப் பிறவி! அவளைப் பற்றிப் பேசாதே என்றால் புரியவேண்டாம்? இன்று ஒரு நாள் பார்க்குமுன், உனக்கு, சாந்திமதியைப் பற்றி என்ன தெரிய முடியும்? என்னவோ,

தோட்டத்தில், தோட்டத்தில் என்கிறாயே. தோட்டத்தில் சாந்தி யோடு இருந்தது யார் என்று, உன் கண்ணால் பார்த்தாயா? கிடையாதே! இவளோடு தனியாகப் பேசிக் கொண்டிருந்தது, வேறு யாரும் இல்லை! நானேதான்!'' என்று அவன் அறிவிக்கவும், ''ஆங்...!'' என்று வாயைப் பிளந்தாள் அவள்.

அவளோடு சேர்ந்து வாயைப் பிளந்த பரசுராமன். ''பின்னே இவர்...'' என்று மனைவி மீண்டும் தொடங்கவும், உடனே கப்பென்று வாயை மூடிப் பழைய நிலைக்கே திரும்பினான்.

''உன் கணவர் எங்கே போனாரோ, யாரைச் சந்தித்தாரோ அதை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்! ஆனால், தோட்டத்தில் பேசிக் கொண்டிருந்தது, நானும் இவளும்தான்! ஏதேதோ பேச்சில் நேரம் போவது தெரியாமல் இருந்துவிட்டு, இப்போதுதான் எழுந்து வந்தோம். சேர்ந்தேதான் வந்தோம்! உன் அப்பா என்னை இடை மறித்துக் கூப்பிட்டிராவிட்டால், உள்ளேயும் சேர்ந்தேதான் வந் திருப்போம்! வேண்டுமானால், அவரையே கேட்டுப்பார்! சித்தப்பா, உங்கள் அரைப் பைத்தியக்கார முட்டாள் பெண்ணுக்கு, நீங்களே தான் சொல்லுங்கள்! அப்போதுதான் நம்புவாள்!'' என்று, வாயில் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஒருவரை அழைத்துக் கூறினான் மனோகரன்.

அவரும், ''ஆமாம்மா! இரண்டு பேரும் சேர்ந்துதான், தோட்டத் துக்குள்ளே இருந்து, ஜோடியாகத்தான் வந்தார்கள்! இப்படிச் சிரித்துக் கொண்டு ஒன்றாக வருகிறார்களே, அண்ணி என்ன சொல்லுவார்களோ என்று கூட, நான் நினைத்தேன்!'' என்று விளக்கினார்!

தலையால் நிற்கிறோமா, அன்றிக் காலை ஊன்றித்தான் நிற்கிறோமா என்றே புரியாத நிலை சாந்திமதிக்கு!

அப்போதும், லேகாவின் சொத்தென்று முகத்தைப் பார்க்கையில், தன்னை மீறிச் சிரிப்பு வந்தது! அந்த அளவு, 'ஙே' என்று அசடு வழிந்தாள் அவள்!

மனோகரனின் கை தோளில் சற்று அழுத்தமாகப் பதிந்து திரும்பவும், பிரமிப்புடன் அவன் முகத்தைப் பார்த்தாள் அவள்.

அவன் பார்வை, அவளுடைய பெற்றோரிடம் இருந்தது!

பெற்றவர்களின் முகத்தைப் பார்த்ததும் சாந்திமதியின் திகைப்பு, இன்னமும் அதிகமாயிற்று!

அவர்கள் இப்போது என்ன எண்ணிக்கொண்டு இருப்பார்கள் என்று ஊகிப்பது ஒன்றும் பிரமாதமில்லை! ஆனால், பெற்றவர்கள் இருவரின் முகங்களிலும், வியப்புடன் மகிழ்ச்சியும் தெரியவும், அவளுக்கு நெஞ்சுக்குள் பிசைந்தது!

இப்போது, இந்தச் சிக்கலில் இருந்து மீள்வது எப்படி?

முந்தையைச் சிக்கலைப் போலவே, இதுவும் கை மீறியதாகத் தோன்றிவிட, மறுபடியும் மனோகரன் முகத்தையே பார்த்தாள் அவள்.

தொடங்கியதைச் செவ்வனே முடிப்பவனாக, சாந்திமதியைக் கைப்பிடியிலேயே நடத்திச் சென்று, அவளுடைய பெற்றோரை அணுகினான் அவன்.

"உங்களிடம் நிதானமாக விளக்கி, உங்கள் சம்மதத்தையும், ஆசியையும் பெற வேண்டும் என்று நினைத்திருந்தோம்! ஆனால், ஒரு மூடப் பெண்ணின் அசட்டுத்தனத்தால், அது இயலாமல் போயிற்று!

"ஆனால், அதுவும் ஒரு வகையில் நல்லதுதான்! எப்போது, எப்படிச் சொல்வது என்று, இன்னும் எத்தனை நாள் வீணாகக்

கடந்து போயிருக்குமோ? நல்லதை, உடனே செய்வதுதானே, நல்லது?

''இப்போது உங்களுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும்! ஆனால், அதைப் பெரிதாக நினையாமல், எங்களை மனமார ஆசீர்வதிக்க வேண்டும்!'' என்று, பக்கத்தில் நின்றவளிடம் ஒரு கீழ்க்கண் பார்வையுடன் குனிந்து, வாசவனின் காலைத் தொட்டு வணங்கினான்.

அவனது விருப்பம் புரிந்து, சாந்திமதியும், அவனைப் பின்பற்றினாள்.

''என் கண்ணே!'' என்று அணைத்து, உச்சி முகர்ந்த தாயைப் பார்க்கையில், மகளுக்குப் பரிதாபமாக இருந்தது!

அந்தப் பக்கம், மனோகரனின் கைகளை அன்புடன் பற்றி, தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தார் வாசவன்!

இதெல்லாம் நாடகம் என்று அறியும்போது, இந்தப் பெற்றோர் மனம் என்ன பாடுபடும்!

அதுவும் இத்தனை பேர் மத்தியில், பறைசாற்றப்பட்டுவிட்ட விஷயம், பொய்யென்று எப்படி...

மேலே யோசிக்க முடியாமல் அவள் திணறியபோது, ''ஹோ!'' என்று ஒரு கிரீச்சிடலுடன், மாடிப்படிகளை இரண்டிரண்டாகத் தாவி, இறங்கி ஓடி வந்தாள் சுந்தரி!

''ஏய், விழுந்து விடாதேடி!'' என்று தமக்கையின் குரலை அவள் காதிலேயே வாங்கினாளில்லை!

''அம்மா, எதற்காக அக்காவை அப்படி வகிடு உச்சியில் வாசம் பார்க்கிறீர்கள்? எனக்குத் தெரியாமல், இங்கே என்ன நடக்கிறது? நான் சாப்பிட்டுவிட்டு வருமுன் என்னென்னவோ நடந்த மாதிரித்

தெரிகிறதே! என்னது? என்னது? சீக்கிரமாகச் சொல்லுங்கள்!'' என்று பரபரத்தபடி அருகில் வந்து குதித்தாள் அவள்!

மற்றவர்களிடம் கையைக் காட்டிவிட்டு, நமுட்டுச் சிரிப்புடன், ''சாப்பிடப் போனால், ஒரு பந்தி முடிந்ததும் எழுந்து வர வேண்டும்! உட்கார்ந்து, உட்கார்ந்து மூன்று பந்தியில், முக்கி முக்கி விழுங்கினால் இப்படித்தான்! முக்கியமான விஷயங்கள் எல்லாம், உனக்குத் தெரியாமலே, அது பாட்டில் நடந்துவிடுகின்றன!'' என்று மனோகரன் கையை விரித்தான்!

''ம்ம்ம்... ம்கூம், நான் ஒன்றும் மூன்று பந்தியில் சாப்பிட வில்லை...'' என்று சுந்தரி தலையை வேகமாக ஆட்டி மறுத்த போது, எல்லோர் முகங்களிலும் சிரிப்பு மலர்ந்தது!

''மூன்று இல்லையா? அப்போது, இரண்டே இரண்டில்தானா?'' என்று, மனோகரன் மீண்டும் சீண்டினான்.

''ஐயோ ராமா, என்னப்பா, நீங்கள்! ஒரே பந்திதான்! நாங்கள் சினேகிதிகள் எல்லோரும் சேர்ந்து பேசிக் கொண்டே சாப்பிட்ட தில், கொஞ்சம் நேரமாகிவிட்டது! அதற்குள் இங்...''

சுந்தரி கேட்டு முடிக்கு முன், மறுபடியும் குறுக்கிட்டு, ''அப்படி யானால்... என்னமோ, சட்டி பானை எல்லாவற்றையும் வழித்துக் கொட்டிய பிறகுதான் சில குண்டோதரிகள் சாப்பாட்டு இலையை விட்டு எழுந்தார்கள் என்பதாகக் காதில் விழுந்ததே! அது உங் களையேதானா?''என்று தான் சிரியாமல், அவளிடமே சீரியசாகக் கேட்டான் மனோகரன்!

''ஹையோ! என்னமாப் பொய் சொல்லுகிறீர்கள்! பாவம், எங்கள் சாந்திக்கா, உங்களிடம் என்னமாகத்தான் வேலை பார்த் தாளோ, தெரியவில்லையே! இப்படியே, பொய் மேல் பொய்யாகச்

சொல்லிக் கொண்டே இருந்தீர்களானால், உங்கள் வேலையை விட்டுவிடும்படி, அக்காவிடம் சொல்லிவிடுவேன், ஜாக்கிரதை!" என்று மிரட்டினாள் சுந்தரி!

பெற்றோர் இருவரும், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கிளுகிளுவென்று சிரிக்கவும், அவர்கள் முகத்தை மாறி மாறிப் பார்த்து, "என்னம்மா, என்ன விஷயம்? ப்ளீஸ், சொல்லுங்கள் அம்மா!" என்று கெஞ்சினாள், பெண்.

சுமதி, மனோகரனின் முகத்தைப் பார்க்க, வேண்டாம் என்பது போலத் தலையசைத்தான் அவன். "இந்த விஷயம், உன்னைப் போல சின்னப் பசங்களுக்கெல்லாம் சொல்லக் கூடாது, குட்டிப் பாப்பா!" என்று அவளைச் சீண்ட, தங்கையின் முகத்தைப் பார்த்து, சாந்திமதிக்கே தன்னை மீறி சிரிப்பு வந்தது.

"என்னது, நானா, சின்னப் பாப்பா? இங்கே உள்ளவர்களில் படு கிழவி நான்தான் தெரியுமா? என் வயசு... இருநூற்றுப் பத்து... ஆகப்போகிறது என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று, பதிலுக்குச் சவால் போலக் கேட்டாள் சின்னவள்!

திகைத்து, "என்னடீ உளறல்?" பைத்தியம் போலப் பேசாதே!" என்று ஆளுக்கு ஒரு பக்கம் அதட்டினர் பெற்றோர்!

"பயப்படாதீர்கள் அத்தை! மாமா, நீங்களும்தான்! உங்கள் சின்னப் பெண் உளறவும் இல்லை! அவளுக்குப் பைத்தியம் பிடிக்கவும் இல்லை! கொல்லப்பட்டது அசுவத்தாம்மா என்கிற யானை என்பதில், 'என்கிற யானை' என்பதை மட்டும் தரும புத்திரர், சத்தமின்றி வாய்க்குள் சொல்லிக் கொண்டாராம்! அதைப் போல, உங்கள் சின்னப் பெண், இருநூற்றுப் பத்துக்கு அடுத்து 'மாதங்கள்' என்கிற வார்த்தையை வாய்க்குள்ளேயே முனகிக் கொண்டாள்! அவ்வளவுதான்!" என்றான் மனோகரன்.

''பரவாயில்லையே, கண்டுபிடித்துவிட்டீர்களே! புத்திசாலி தான்!'' என்று பாராட்டிய சுந்தரி, ''அடெடே!'' என்று துள்ளிக் குதித்தாள்!

''நல்ல மரியாதை தெரிந்திருக்கிறது!'' என்ற கேலியை ஒதுக்கி, ''என்ன வார்த்தை அது? முதலில் நீங்கள் என்ன சொன்னீர்கள்? அத்தை... மாமாவா? ஆன்ட்டி, அங்கிள் என்றுதானே சொல்லுவீர்கள்? அப்படியானால் ஆஹா!... ஏய், அக்கா... இதுதானா ரகசியம்? ஆனால்...'' என்று மனோகரனை ஏற இறங்க நோக்கி, ''என்னக்கா, நீ? இருந்திருந்து, இந்த லொடலொட ஆளைப் போய்...'' என்று இழுத்தவளின் பேச்சில் குறுக்கிட்டு, ''ஏய், சும்மா இருடி!'' என்று அதட்டினாள் தமக்கை!

''அங்கே சொன்னால், பாவம், அக்கையாருக்கு, இங்கே வலிக்கிறதா? சரி போகிறது, போ! உன்னை முன்னே அனுப்பிவிட்டு, மறுநாளே பின்னோடு ஓடி வந்தாரே, அப்போதே எங்களுக்குப் புரிந்திருக்க வேண்டும்! ஏதோ நம் பரசு அண்ணன் மாதிரி இல்லாமல், கொஞ்சம் சிரித்துப் பேசுகிற ஆள் என்பதால், உனக்கு நான் அனுமதி கொடுக்கிறேன்! இவரைக் கல்யாணம் கட்டிக் கொண்டு, பதினாறு நண்டான், சிண்டான்களை பெற்றுப்போட்டு பிழைத்துப் போ!'' என்றாள் சுந்தரி!

''உன்னைப் போலப் பதினாறா? கடவுள் காப்பாற்றட்டும்!'' என்று மனோகரன் மேலே கையைக் காட்ட, குடும்பத்தினர் மட்டுமின்றி, அங்கங்கே இருந்து, இங்கே நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களும் சேர்ந்து நகைத்தனர்!

எல்லோருடனும் சேர்ந்து, சிரிப்பது போல, சாந்திமதி கஷ்டப் பட்டு பாவனை செய்தாள்!

இவன் மட்டும் எப்படிச் சேர்ந்து சிரிக்கிறான்?

கிடைத்த முதல் வாய்ப்பில், "பாவம்! ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறார்கள்! எல்லாம் பொய் என்று தெரியும்போது, மிகவும் வருத்தப்படப்போகிறார்கள்!" என்றாள் கவலையோடு.

சற்றும் தயங்காமல், "அப்படியானால், தெரிய விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்!" என்றான் அவன் இலகுவாக!

அவள் திகைத்தாள்!



11

தெரியவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்றால் என்ன அர்த்தம்?

எப்படித் தெரியாமல் போகும்?

ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வேண்டுமானால், இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்தலாம். அதன்பிறகு?

எப்படியும் கொஞ்ச நாளைக்கு மேல், இந்த நடிப்பைத் தொடர முடியாதே!

யோசித்துப் பார்க்கையில், இந்தக் கொஞ்ச நாட்கள் கூட, நடக்கக் கூடியதாக சாந்திமதிக்குத் தோன்றவில்லை!

முதலாவது காரணம் செல்வநாயகி அம்மாள்!

சாந்திமதி சென்னை செல்வது, செல்வநாயகியின் வருங்கால மருமகளாகவா? அல்லது பணி புரிகிறவளாகவா?

பழைய மாதிரி வேலை செய்கிறவளாக அனுப்புவதற்கு, வாசவனும் சுமதியும் நிச்சயமாகச் சம்மதிக்க மாட்டார்கள்!

மனோகரனுடைய தாயிடம், இதை எப்படிச் சொல்வது?

இதுவே உண்மை என்றால், செல்வநாயகி ஒருவாறு ஒத்துக் கொள்ளவே கூடும்! அந்த அளவு பரந்த மனம் உடையவள்தான் அந்த அன்னை!

ஆனால், பொய், நாடகம் என்றால், ஒத்துக் கொள்வது கடினம், நடக்காத காரியம் என்று கூடச் சொல்லி விடலாம்!

சரி, இங்கே போல, அங்கேயும் நடித்துவிடலாம் என்றாலோ, அப்புறம் அதிலிருந்து வெளியேறுவதும் எளிதல்ல! நிச்சயமாக முடியாது!

செல்வநாயகியிடம் நடக்காது!

தாயின் குணம், மனோகரனுக்கும் தெரியும்தானே?

எனவே, சென்னைக்குச் செல்லும்போதே, இரண்டில் ஒன்று தீர்மானமாகிவிடும்!

இரண்டில் ஒன்று என்ன?

எல்லாம் வெறும் நடிப்பு, அந்த நேரத்து சமாளிப்பு என்று, பெற்றோரிடம் சொல்லித்தான் ஆக வேண்டும்!

சொல்லிவிட்டு, அந்த நேரத்துக்குக் காப்பாற்றிய திருப்தியோடு மனோகரன் கிளம்பிப் போய்விடுவான்!

வேலை என்று, ஒரு கால் சாந்திமதியுமே சென்றுவிடலாம்!

மீண்டும் இந்த வேலைக்கு அவளை அனுப்புவது கடினம் என்றாலும், இங்கேயே இருந்து, மகள் அவமானப்படக் கூடாதே என்று எண்ணிப் பெற்றோர் அதற்குச் சம்மதிக்கவும் கூடும்!

ஆனால், இந்த ஊரிலே, இங்கேயே இருந்து அறிந்தோர், தெரிந்தோர் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தவிக்கப் போகும் பெற்றோர்... தங்கை...

அவர்கள் நிலையை எண்ணி எண்ணி, சாந்திமதி தவியாய் தவித்தாள்!

இருந்திருந்து, இந்தச் சமயம் பார்த்து, அவள் இங்கே வந்து தொலைத்தாளே!

அதிலும், அந்த வரவேற்புக்குச் சென்றது, எவ்வளவு பெரிய மடத்தனம்! பிடிவாதமாக மறுத்திருந்தால், பரசுவுடைய பெற்றோரின் வருத்தத்தோடு மட்டும் போயிருக்கும்!

இப்போதோ, எல்லோருக்கும் வேதனை! அவர்களும் தப்பப் போவதில்லை!

உண்மை வெளியாகும்போது, அப்படித்தானே ஆகும்?

இந்த லேகா என்ன பாடுபடுத்தப் போகிறாளோ?

உள்ளே மறுகியபோதும், வெளியே எதையும் காட்டிக் கொள்ள முடியாமல் சிரித்த முகமாக வளைய வர நேர்ந்தது, மாபெரும் கொடுமையாக சாந்திமதிக்குத் தோன்றியது!

அதிலும், பரசுராமனின் வெறித்த பார்வைகள், அவனுடைய மனைவியின் முறைப்பு, இவற்றோடு பரசுவுடைய பெற்றோர் உட்பட அங்கிருந்த மற்ற நட்புக் குடும்பங்களின் மனம் நிறைந்த வாழ்த்து... எல்லாவற்றையும் உரிய விதமாகச் சமாளித்து முடிப்பதற்குள், மனோகரனின் அருகாமை மட்டும் இல்லையென்றால், அவள் அங்கேயே உடைந்து விட்டிருப்பாள்!

இன்னுமொரு சிறு ஆறுதல், மனோகரனும் சுந்தரியும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் வாய்ப்போர் நடத்தியதுதான்! புத்திசாலித்தனமான கேலியும் கிண்டலும், நெஞ்சை அரித்த பிரச்சினையை அவ்வப்போது மறக்க வைத்தன.

ஆயினும், இனித் தாங்காது என்ற நிலை நெருங்கியபோது, உண்டு முடித்து, ஒருவாறு அங்கிருந்து கிளம்பி விட்டார்கள்.

சொல்லப் போனால், கிளம்ப வைத்ததும் மனோகரன்தான்!

அவன்தான் வாசவனிடம், "சற்று சீக்கிரமாகக் கிளம்பினால் நன்றாக இருக்கும். மாமா! மற்ற சிண்டு முடிக்கும் உறவினருக்கு முன்பாக, நானும் சாந்திமதியும் அம்மாவிடம் பேசி விட்டால் நல்லது! அம்மாவின் பேச்சைப் பொறுத்து, நானும் உங்கள் மகளுமே தனியே சிலது கலந்து ஆலோசிக்க வேண்டும்! இங் கேயே அதிகத் தாமதம் ஆனால், அதற்கெல்லாம் நேரம் இராது!" என்று காரண காரியம் விவரிக்க, அவரும் உடனே எல்லோ ரிடமும் விடை பெற்றுக் கிளம்பி விட்டார்!

வீட்டில் மற்றவர்களை இறக்கி விட்டுவிட்டு, "என்னோடு சாந்தி மதியை அனுப்புவதில் உங்களுக்குத் தடையொன்றும் இல்லை தானே, மாமா?" என்று சும்மா பேருக்காக ஒரு வார்த்தை கேட்டான் மனோகரன்.

பேருக்காக மட்டும்தான்!

மற்றபடி, "மற்றவர்கள் இருக்கட்டும்., நீ காரிலேயே இரு! உன் னிடம் பேச வேண்டும்" என்று ஏற்கனவே சொன்னவன்தானே?

"தடையா? உங்கள் மீது, எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது, மாப்பிள்ளை! ஆனால், ரொம்ப நேரம் ஆக்கி விடாமல், முடிந்த வரை சீக்கிரமாக வந்துவிட முயற்சி செய்யுங்கள். அதுவும், அக்கம் பக்கம் தப்பாக நினைக்கக் கூடாதில்லையா, அதற்காகத் தான் சொல்லுகிறேன்!" என்றார் வாசவனும்!

காரை ஓட்டியவாறே, "மாமனார் கெட்டிக்காரர்தான்! நம்பிக்கை என்று சொல்லி எப்படி என் கையைக் கட்டிப் போட்டு விட்டார்

பார்!" என்று குரலில் நகையுடன் மனோகரன் கூறியது, சாந்தி மதிக்குக் கொஞ்சமும் ரசிக்கவில்லை!

அவர் அப்படிச் சொல்லாவிட்டால் இவன் பெரிதாக என்ன செய்வதாக எண்ணமாம்?

பெரிய காதல் மன்னனைப் போல, எதற்காக இந்தப் பேச்சு?

தனிமையில் கூட, நடிப்பைத் தொடர வேண்டுமா?

ஆனால், அந்த நடிப்பு, சற்று முன் எவ்வளவு பெரிய அவமானத்தில் இருந்து அவளை மீட்டது என்பது நினைவு வர, "மிகுந்த நன்றி, மனோகரன் சார்! நீங்கள் மட்டும் சமயத்தில் வந்து காப்பாற்றவில்லை என்றால், எல்லோர் முன்னிலையிலும், எனக்கு மகாக் கேவலமாகிப் போயிருக்கும்!" என்று தன் நன்றியை முதலில் தெரிவித்தாள்!

"உன் நன்றிக்காக மட்டும் நான் இதைச் செய்யவில்லை!" என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

"பின்னே? பின்னே எதற்காக என்னை காப்பாற்றினீர்கள்?"

"அது... அதற்கு எத்தனையோ காரணங்கள்! ஆனால், நாலு பேர் நடுவில் அவமானப்படுவது என்னவென்று, லேகாவுக்கும் தெரிய வேண்டும் அல்லவா?" என்று தொடங்கி, அவன் லேகாவைப் பற்றிச் சொன்னான்.

"பேச்சில் புரிந்து கொண்டிருப்பாய்! லேகா, என் சித்தப்பா மகள்! ஒன்று விட்ட சித்தப்பாதான்! ஆனால், சின்ன வயதில் இரு குடும்பங்களும் ரொம்ப நெருக்கம்! நாலைந்து குறைப்பிரசவங்களுக்குப் பிறகு, நல்லபடியாகப் பிறந்தவள் லேகா. அவளுக்குப் பிறகு ஒன்றும் பிறக்கவில்லை என்பதும் சேர்ந்து கொள்ள வீட்டில்

அவளுக்கு மகாச் செல்லம்! யாரும் அவள் சொல்லுக்கு எதிர் பேசக்கூடாது! வேலையாட்கள் எல்லோருக்கும் அடி, உதை எல்லாம் விழும்!

இப்படி வளர்க்கக்கூடாது என்று சொல்லிப் பார்த்துவிட்டு, அப்பாவும் அம்மாவும் ஒதுங்கி விட்டார்கள்! பெரியவர்கள் என்று இல்லாமல், அவர்களையே தூக்கி எறிந்து பேசுவாள்! சித்தியும், அம்மாவுக்குப் பெண் இல்லாததால் பொறாமை என்று ஏதேதோ பேச, ரொம்ப காலம் தொடர்பே விட்டுப் போயிற்று!

"நாலைந்து ஆண்டுகளுக்கு முன், அப்பாவின் கடைசிக் காலத்தில், சித்தப்பா நொடித்துப் போய், அப்பாவின் காலில் வந்து விழுந்தார்! அப்பாவின் இளக்கம்! பணமாகக் கொடுக்கக் கூடாது என்று நான்தான், நம் தயாரிப்புகளோடு, மேலும் சில நல்ல பொருட்களின் 'டீலர்ஷிப்' எடுத்துக் கொடுத்தேன். ஒரு தரம் விட்டவர் அல்லவா? இப்போது தொழிலைக் கவனத்துடன் நடத்தி, நல்ல நிலைக்கே வந்துவிட்டார்! அவர் மாறியிருக்கிறார். ஆனால், மகள்தான் அப்படியே இருக்கிறாள்!

"யாரையாவது நாலுபேர் நடுவில் வைத்து அவமானப்படுத்துவது, லேகாவுக்கு ரொம்பப் பிடித்தமான பொழுதுபோக்கு! அதற்கும் வைத்தியம் செய்தேன்!" என்று முடித்தான்.

யோசனையாக நோக்கி, "இவ்வளவு கடுமையாகப் பேசுகிறீர்களே என்று நினைத்தேன்!" என்றாள் அவள்!

"விஷத்தை விஷத்தால்தான் முறிக்க முடியும் என்பார்கள்! அவளுக்குப் புரிந்த மொழி, அதுதானே? ஆனால்..." என்று அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, "பாவம், உன் பரசுவுடைய குடும்பம்!" என்றான் அவன்.

சோமசுந்தரம், அவருடைய மனைவி முகங்கள் நினைவு வர, அவளுக்கும் பாவம் என்றுதான் தோன்றியது!

ஆனால், பரசு இமை தூக்கிப் பார்த்த அந்த ஒரு பார்வை...

பிறகே மனோகரன் சொன்ன விதம் முழுமையாக மனதில் பட, "அவர் ஒன்றும் என் பரசு அல்ல!" என்றாள் ஆத்திரத்துடன்.

"ரொம்ப நல்லது!"

"என்ன நல்லது?" என்று எரிச்சலுடன் கேட்டாள் சாந்திமதி.

"என்ன நல்லது என்று பிறகு சொல்லுகிறேன், இப்போது..." என்று காரைச் சாலையின் ஓரமாகச் செலுத்தி நிறுத்தினான் மனோகரன்.

சட்டென சாந்திமதிக்கு மூச்சு விட முடியாமல் போனது!

இப்போது சொல்லப் போகிறான்!

மரண தண்டனையை எதிர்நோக்கி நிற்கும் கைதிக்கு இப் படித்தான் இருக்குமா?

அவனும், ஒரு பெரிய மூச்சுடன்தான் தொடங்கினான்.

"எல்லாம் பொய்யென்று தெரியும்போது, உன் பெற்றோர் வருத்தப்படுவார்களோ என்று சற்று முன் கவலைப்பட்டாய். அந்த வருத்தம் நேராதிருக்க, ஒரு வழி இருக்கிறது! ஒரே ஒரு வழிதான் இருக்கிறது! ஆனால், அதற்கு உன் சம்மதம் வேண்டும்!"

இப்போதைக்கு நாடகம் தொடரட்டும் என்கிறான்!

"ஆனால், எத்தனை நாள் இது நடக்கும்? ஒரு நாள் முடிவுக்கு வந்துதானே தீரும்? அப்போது இதே கதைதானே?" என்றாள் அவள்.

"பிரச்சினையைத் தள்ளிப் போடுவது தீர்வாகாது, சாந்திமதி. நான் சொன்னது வருத்தம் நேராமல் எப்போதுமே தவிர்ப்பது! நிரந்தரத் தீர்வு" என்று அவன் கூறவும் சாந்திமதி திகைத்தாள்.

"எப்போதுமே தவிர்ப்பது என்றால், அது எப்படி முடியும்?"

திகைப்பும் குழப்பமுமாக அவள் பார்க்க, "நீ புத்திசாலிதானே? பெயருக்கேற்ற 'மதி'யும் உள்ளவள்தானே? இந்தப் பிரச்சினையின் தீர்வு என்னவாக இருக்க முடியும் என்று, உனக்கு நிஜமாகவே தெரியவில்லை என்றா சொல்லுகிறாய்? அந்த அளவுக்கா கலங்கிப் போயிருக்கிறாய் நீ?" என்று கேட்டான் மனோகரன்.

நன்றாகத் திரும்பி அமர்ந்து, அவன் முகத்தைப் பிரமிப்புடன் பார்த்தாள் சாந்திமதி.

சாலை விளக்கின் ஒளியில் முகம் தெளிவாக தெரிந்தபோதும், கூர்மையான பார்வை தவிர, வேறு எதையும் அவளால் கண்டு கொள்ள முடியவில்லை!

ஆனால், நிரந்தரத் தீர்வு என்றால் ஒன்றே ஒன்றுதான் உண்டு!

அவளுடைய பெற்றோர் வருத்தப்படக்கூடாது என்றால், நடந்தது நாடகம் என்று அவர்களுக்குத் தெரியக்கூடாது. அது தெரியக்கூடாது என்றால், நாடகத்தைத் தொடர்ந்து நடத்தியாக வேண்டும்! நாடகம் தொடர்வது என்றால், அதன் அங்கமாக ஒரு கட்டத்தில் அவர்களது திருமணமும் நடந்தாக வேண்டும்!

"அது எப்படி முடியும்?" என்று கேட்கையில், அவளுக்குக் குரலே எழும்பவில்லை!

"அதற்குத்தான் உன் சம்மதம் வேண்டும் என்றேன். மீதமுள்ள வாழ்நாள் முழுதும் என்னைச் சகிக்க முடியுமா என்று..."

"ச்சு! சீரியசாகப் பேசுங்கள், மனோகரன் சார்..."

"முதலில் நீ இந்த 'சாரை' விடு! இந்த ஒரு வார்த்தையால் எல்லாவற்றையும் கெடுத்துவிடப் போகிறாய்!"

"ஐயோ, அதை விடுங்கள்! நீங்கள் சொல்லுகிற இந்தத் தீர்வு நடக்கிற காரியமா? எ... என்னைப் பற்றி, உங்களுக்குத் தெரியும்!"

"நன்றாகவே தெரியும்! ஆனால், எப்படியும், பரசு இனிமேல் கிடைக்கமாட்டார்..."

பரசு கிடைப்பது பற்றியா, அவளது கவலை? அவன் விஷயம் அவளைப் பொறுத்தவரை முடிந்துபோன ஒன்று என்று, அவருக்குத் தெரியாதா, என்ன? அவள் இன்னமும் அவனுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் முட்டாள் என்றா அவளை நினைக்கிறான்?

இதில் புத்திசாலி என்று குளிப்பாட்டல் வேறு!

கிண்டலா?

"கிடைத்தாலும், எனக்கு அவர் வேண்டாம்! கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்தாலுமே, இன்னொருத்தி கணவன் எனக்குத் தேவையில்லை!" என்றபோது அவள் குரல் ஆத்திரத்தில் நடுங்கியது!

"வெரிகுட்!" என்றான் மனோகரன். "முன்பு நல்லது என்றேனே, அது இதைத்தான்! இந்த அளவுக்கு உனக்குத் தெளிவு வந்துவிட்டதால், இனிமேல் தடையில்லைதானே?" என்றான் திருப்தியோடு!

ஆனால் அவளுக்கு, அந்த திருப்தி ஏற்படவில்லை! "அதெப்படிச் சொல்ல முடியும்?" என்று பதில் கேள்வி கேட்டாள்! "ஒன்று போனால் இன்னொன்று என்றால் எப்படி முடியும்?"

"ம்ம்ம்... நல்ல கேள்விதான். புத்திசாலித்தனம் தொல்லையா வதும் உண்டு என்று இப்போது தெரிகிறது!" என்று முறுவலித்தவன் தொடர்ந்து பேசினான். "இதை, இப்படி யோசியேன் சாந்திமதி! அங்கே என் கைமீது உன் கையை வைத்தாயே, வைத்துத் தொலைக்க வேண்டியிருக்கிறதே என்று வெறுப்பாக இருந்ததா? வைத்த பிறகு, கையை உருவிக் கொண்டு ஓ...டி விட வேண்டும் போல, அருவருப்பு தோன்றியதா?"

"இல்லை" என்றாள் அவள் சுருக்கமாக.

"அடுத்து, தோளை அணைத்தபோது? அதுவேனும் வெறுப்பாக இருந்ததா?"

வெறுப்பா? எவ்வளவு பாதுகாப்பாக உணர்ந்தாள்!

இல்லை என்று சொல்லப் போனவள், யோசனையாக அவனை நோக்கி, "நான் உணர்ந்த விதம் உங்களுக்கே தெரிந்திருப்பதாகத் தோன்றியதே!" என்று மட்டும் சொன்னாள்.

லேசாக முறுவலித்து, "தெரியும்தான்! ஆனால், வாய் மொழியாகக் கேட்கும்போது, அடிக்கோடு இடுவது போல, விஷயம் இருமடங்கு தெளிவாகி விடும்! உனக்கும்தான். அதற்காகவேனும், நீ சொல்லலாம்தானே?" என்று ஒரு கனிந்த குரலில் அவன் கேட்கவும், அப்போது உணர்ந்ததை, அப்படியே கொட்டினாள் சாந்திமதி.

"கவலை போயிற்று. பயம் அகன்று, பாதுகாப்பாக இருந்தது. கலக்கம் அகன்று, நிம்மதியாக உணர்ந்தேன்!" என்றாள் அவள்.

"ரொம்ப ரொம்ப நல்லது! அந்தப் பாதுகாப்பும் நிம்மதியும் வாழ்நாள் முழுதுக்கும் இருக்கும் என்று நம்பலாம்தானே?"

"ஆனால் அது... அது மட்டும் போதுமா? நீங்கள்... உங்கள்..." என்று மீண்டும் குழம்பினாள் சாந்திமதி.

அவளை ஒரு தரம் கூர்ந்துவிட்டு, "போதாதா?" என்று கேட்டான் மனோகரன். "என்ன செய்வதும்மா? வேறு முயற்சிக்கு வழியின்றி, உன் அப்பா வேறு, என்னை 'நம்பி' உன்னை அனுப்பி வைத்திருக்கிறார்! இல்லாவிட்டால்..." என்று தலை சரித்து நோக்கி முறுவலித்தான்.

திகைத்து நிமிர்ந்தவள், அவன் முகத்தைப் பார்த்ததும், சற்று இறுக்கம் தளர்ந்து, "ப்ளீஸ்! வேடிக்கை வேண்டாம், சா... இல்லை, மனோகரன்! இப்போது என்னை விட்டு விடலாம்! நான் சொல்வது உங்களைப் பற்றியும்! மனைவி பற்றி உங்களுக்கு எத்தனையோ எதிர்பார்ப்புகள் இருக்கும்! நான் எந்த வகையில், அந்த.. அதற்கெல்லாம் ஈடாவேன்?" என்று கேட்டவளின் விழிகளில் லேசாக நீர் அரும்பியது!

ஒரு கணம் அமைதியாக இருந்தவன் பேசத் தொடங்கியபோது, அவன் பேச்சில் அதுவரை இருந்த இலகுத்தன்மை மறைந்தது!

"அதையும் இப்போது பேசி விடுவோம்!" என்றான் அவன், அமர்ந்த குரலில்.

விழியகல, அவன் முகத்தைப் பார்த்தாள் சாந்திமதி.

அவனது கண்களும் அவளை அளவிட்டன.

பிறகு லேசான முறுவலுடன் மனோகரன் சொல்லத் தொடங்கினான். "எல்லா இளைஞர்களையும் போல, எனக்கும் அந்த மாதிரி எதிர்பார்ப்புகள் உண்டுதான், சாந்தி. என் நிலைமைக்குத் தக்கபடி, சில வேறுபட்ட விருப்பங்களும்! குடும்பம் மட்டுமின்றி, தொழில் தொடர்பாகவும், பெரிய பொறுப்புக்களை ஏற்று நடத்த வேண்டியிருக்கும் என்பதால், என் மனைவிக்கு மன உறுதி அதிகம் வேண்டும். அது உனக்கு நிறையவே இருக்கிறது! கடைசிவரை,

அம்மாவின் வரவு செலவு கணக்கை, நீ எனக்குத் தரவே இல்லையே! இந்த உறுதி எனக்கு நிச்சயமாக வேண்டும்!

"அடுத்து, அம்மாவிடம் உனக்கும், உன்னிடம் அம்மாவுக்கும் உள்ள அன்பு!"

"அம்மாவிடம் தகராறு பண்ணக் கூடியவளை நான் மணப்ப தற்கு இல்லை! லேகா மாதிரி மாமியாரைத் தூக்கி எறிகிறவளாக வருகிறவள் இருந்து விடக்கூடாது! உன்னைப் பொறுத்தவரை, அந்தப் பயம் இல்லை! அம்மாவிடம் நீ காட்டும் அன்பினாலேயே, உன்னை எனக்கு ஏற்கனவே பிடித்துப் போயிற்று!"

"அடுத்து..." என்று தொடங்கியவனின் கண்கள் சிரித்து, அவளது ஆவலைக் கிளப்பின!

"அடுத்து?" என்று பரபரப்புடன் கேட்டாள் அவள்.

முறுவல் விரிவடைய, "கண்ணாடி முன் நின்று பார்த்திருக்கிறா யல்லவா? விழா வீட்டில் எத்தனை பேர், என்னை அதிருஷ்டக் காரன் என்றார்கள் தெரியுமா? எல்லோரையும் போல, என் மனைவி அழகாக இருக்க வேண்டும் என்கிற ஆசை, எனக்கும் உண்டும்மா!" என்று, வேடிக்கை போலவே முடித்தான் அவன்.

எல்லாம் சரிதான்! ஆனால், அத்தோடு, அழகான மனைவியிடம் வேறு விதமான எதிர்பார்ப்புகளும் இருக்குமே! இன்னொருவனை மனதில் நினைத்திருக்கும் அவளிடம், அந்த எதிர்பார்ப்புகளுக்கு எப்படிப் பதில் கிடைக்கும்?

உதட்டை கடித்துக் கொண்டு பேசாதிருந்தாள் அவள்.

தொடர்ந்து, அந்தக் காரினுள் ஓர் அமைதி நிலவியது!



12

அது ஒரு சில வினாடிகள் மட்டுமாகவும் இருக்கலாம்! அன்றி, சாந்திமதிக்குத் தோன்றியது போலப் பல நிமிஷங்களாகவும் இருக்கலாம்!

இம்முறையும், பேச்சைத் தொடங்கியது அவன்தான்.

அவள் மடியில் சொத்தென்று கிடந்த அவளது கையைப் பற்றி, “அழுகையைப் பற்றிச் சொல்லி, உன்னை மிரட்டி விட்டேனா?” என்று மென்மைக் குரலில் கேட்டான் அவன்.

“வ வந்து...” என்று தொடங்கியதற்கு மேல், அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை!

பற்றியிருந்த கையை மெல்ல வருடி, “பயப்படாதே! பரசுராமனைப் பற்றி அறிந்தவன் நான்! உன் மனம் சமனப்படுவதற்குத் தேவையான அவகாசம் உனக்குத் தருவேன். ஆனால், நம் திருமணம் உண்மையானதே என்பதை, நீ மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்! மற்றதை, நம் தமிழ் மண்ணின் ‘மஞ்சள் கயிற்று மாயம்’ பார்த்துக் கொள்ளும்!” என்றான் மனோகரன் நம்பிக்கையோடு.

ஆனால், அவளுக்கு அந்த நம்பிக்கை முழுமையாக வர மறுத்தது!

“ஒரு வேளை அந்த மாயம் வேலை செய்யாவிட்டால்?” என்றாள் கம்மிய குரலில்.

“நம்பு... விசுவாசி என்பார்கள்! எதற்கும் நம்பிக்கைதான் அச்சாணி! முதலில் நம்பு. பெண்ணே நம்பு! கீதையில் கண்ணன் சொல்லியிருப்பது போல, ஏற்கனவே நடந்தது, நடப்பதைப்

போலவே, இனி நடப்பதும், நன்றாகவே நடக்கும்!'' என்று, அருள் பாலிப்பது போலக் கை தூக்கிக் காட்டி, விஷயத்தை எளிதாக்கி னான் மனோகரன்.

தன்னை மீறிப் புன்னகைத்து, ''என்ன? கீதை, பைபிள் எல்லாவற்றிலிருந்தும், சகட்டு மேனிக்கு அள்ளித் தெளிக்கிறீர்கள்?'' என்று வினவினாள் சாந்திமதி.

''என்ன செய்வது? ஓர் அதி புத்திசாலிப் பெண்ணை என் வழிக்குக் கொண்டு வருவதற்கு, எனக்கு எல்லாமே தேவைப்படு கிறதே!''

அதி புத்திசாலியா?

ஓரக் கண்ணால் பார்த்து, ''இதெல்லாம் எதற்கு? உங்களுக்குத் தான் கை வந்த கலையாக, ஐஸ் வைப்பது இருக்கிறதே!'' என்று கேலியாகக் கூறினாள் அவள்.

மறுக்காமல், ''அதுவே போதும்தான்! ஆனால், பெரிய பிரச் சினையாய், இந்தக் காரில் ஃப்ரிட்ஜ் வசதி இல்லையே! ஐஸ்க்கு நான் எங்கே போவேன்?'' என்று சோகமாகக் கேட்டு அவளை நன்றாகவே சிரிக்க வைத்தான் மனோகரன்.

அவள் சிரித்து முடிப்பதற்குள், ''இன்னொரு கவலை வேறு! கல்யாணப் பெண்ணுக்கு அதிகக் குளிர்ச்சியில் சளிக் காய்ச்சல் வந்துவிட்டால், அப்புறம் நான் வாழை மரத்துக்கல்லவா, தாலி கட்ட நேரும்? அதனால்தான் இந்த மாதிரி இல்லாத பொல்லாத வழியெல்லாம் தேடித் தேடி அலைகிறேன்!'' என்று அவனே தொடர, அவள் மீண்டும் நகைக்கலானாள்.

மனோகரன் தன்னைச் சிரிக்க வைக்க முயற்சிப்பது, சாந்தி மதிக்குப் புரியாமலில்லை! ஆனால், அவளுக்குமே சிரிக்க வேண்டி யிருந்தது!

சிரிக்கச் சிரிக்க, இதயப் பகுதியில் இருந்த அழுத்தம் மறை வதை உணர்ந்து, அவளுமே முயன்று நகைத்தாள்.

சில வினாடிகள் திருப்தியுடன் பார்த்திருந்துவிட்டு, ''இனி அம்மாவிடம் தெரிவிப்போமா?'' என்று கேட்டபடி செல்லை எடுத்தான் மனோகரன்.

சிரிப்பு நின்றுவிட, ''ஆனால் ஆன்ட்டி? அவர்கள் ஒப்ப வேண்டுமே!'' என்றவளின் குரலில் கவலை தொனித்தது!

உண்மையான கவலை!

அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு, ''எல்லாம் ஒப்புவார்கள்! பெரிதாக அனுப்பி விட்டார்களே தவிர, நீ இல்லாமல், அங்கே தவித்துப் போனது, அவர்களும்தான்! இந்த வரவேற்பைச் சாக் காக வைத்து, இங்கே மதுரைக்குப் போகச் சொன்னதும், திரும்பி வரும்போது உன்னைக் கூட்டி வரச் சொன்னதும்கூட அவர்கள் தான்! அதனால் அனாவசியமாகக் கவலைப் படாதே'' என்று மனோகரன் கூறி, அதனால் மனம் அமைதியுற்ற அப்போதுதான், எவ்வளவு கவலைப்பட்டிருக்கிறோம் என்று, அவளுக்கே புரிந்தது!

அப்படியானால், இந்தத் திருமணம் நடக்க வேண்டும் என்று அவளும் விரும்புகிறாள் என்று அர்த்தமா?

யோசிக்க நேரம் இல்லாமல் செல்வநாயகியின் தொடர்பு கிடைத்துவிட, அன்னையிடம் மனோகரன் விவரம் தெரிவித்து, செல்வநாயகி மகிழ்ச்சியோடு சம்மதமும் ஆசியும் இருவருக்கும் தந்து... இவ்வளவுக்குள்ளும், சாந்திமதி அந்தக் கேள்வியை அடியோடு மறந்து விடவில்லை!

எப்படி முடியும்?

ஒருவனை நேசிக்கிறவள், இன்னொருத்தனை மணக்க, எப்படி விரும்புவாள்?

ஆனால், இந்தத் திருமணம் நடக்காவிட்டால், அதன் விளைவுகள் என்னென்ன என்று அவளுக்குத் தெரிந்திருந்ததால், அதனாலேயே இந்தத் திருமணம் தடைப்பட்டு விடக்கூடாதே என்று அஞ்சி இருக்கலாமோ?

யோசித்துப் பார்த்துவிட்டு, அப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் சாந்திமதி!

அவளுடைய தங்கையை நினைத்தாலே போதுமே!

சினேகிதிகள் கும்பலில் அல்லி ராணியாக அரசு நடத்துகிறவள், எவ்வளவு அவமானப்பட்டுப் போவாள்?

மனோகரன் ஏதாவது நிபந்தனை விதித்திருந்தால்கூட, சுந்தரிக்காகவே, சாந்திமதி அதை ஏற்றிருப்பாளே!

நல்லவேளை! மனோகரன் அப்படிப்பட்டவன் அல்ல!

நல்ல கனவான்! உண்மையான பெரிய மனிதன்!

தகராறு பண்ணிக் கொண்டு போன சித்தப்பாவுக்குத் தொழில் வைத்துக் கொடுத்ததில் இருந்தே, அவனது பெருந்தன்மை புரியவில்லையா?

இப்படிப்பட்ட நல்ல மனிதனுக்கு மனைவியாக, அவளுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

செல்வநாயகியைப் போல ஒரு நல்ல மாமியார் கிடைக்கவும் என்று, அவளுடன் பேசியதும் தோன்றியது!

செல்வநாயகியின் நல்ல குணம், சாந்திமதி அறிந்ததே என்றாலும், இந்தத் திடீர் திருமண விஷயத்தில் அவளுக்குக் கொஞ்சம் கவலை இருக்கத்தான் செய்தது!

நல்லவள் என்றாலும், பெரியவள், புத்திசாலியும் ஆயிற்றே! ஏன் இந்தத் திடீர் முடிவு என்று துருவினால்... என்று, சாந்தி மதிக்குப் பயம்!

ஆனால், ஒரு கணம்கூட, செல்வநாயகி மறுப்பையோ, எதிர்ப்பையோ காட்டவே இல்லை! சொல்லப் போனால், வியப்பைக்கூடக் காட்டவில்லை!

இப்படி ஒரு விளைவை எதிர்பார்த்தது போலவே நடந்து கொண்டாள் அந்த உண்மையான பெரியவள்! இப்படித்தான் இருக்கும் என்று நிச்சயமாகத் தெரிந்தது போலவும்!

சாந்திமதியிடம் பேசும்போது, முதலில் மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டு, ''லேகா வரவேற்பு மதுரையில் என்றதும், மனோ துடித்துக் கொண்டு கிளம்பியபோதே, இப்படி ஒரு சந்தேகம் எனக்கு வந்து விட்டது! மற்றபடி, அந்த வீட்டுக்கு, அவன் லேசில் போக மாட்டான்! கூடவே, எனக்கும், உள்ளூர இப்படி ஓர் ஆசை இருந்தது. அதனால்தான் அந்த வரவேற்பு பற்றி, அவனுக்கு நினைவு படுத்தினேன். பையனும் விசிலடித்துக் கொண்டு கிளம்பினான், பார்!'' என்று குதூகலமாகச் சிரித்தாள் அந்த அன்னை!

மனோகரன் விசிலடிப்பானா?

சாந்திமதி திரும்பிப் பார்த்தபோது, ஸ்பீக்கர் போனில் அருகிருந்து கேட்ட அவன், விசிலடிப்பது போல உதடுகளைக் குவித்துக் காட்ட, அவளுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது!

எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் நடக்க இருக்கும் திரு மணத்தில் கூட, அந்த மணப் பெண் இவ்வளவு சிரிப்பாளோ, என்னவோ?

ஒருவேளை, மருட்டும் பிரச்சினைகள், எளிதாகத் தீர்வதால் தான், தனக்கு இப்படிச் சிரிக்கத் தோன்றுகிறதோ என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

பேசி முடிக்கும்போது, மறுநாள் கட்டாயமாக மனோகரனுடன் கிளம்பி வந்து விட வேண்டும் என்று சாந்திமதியிடமும், அவளைச் சென்னைக்குக் கூட்டி வந்தே ஆக வேண்டும் என்று மகனிடமும், ஒரு பிடிவாதத்துடன் சொன்னாள் செல்வநாயகி!

தேவையானால், தானே சாந்திமதியுடைய தந்தையிடம் பேசுவதாக வேறு கூறினாள்.

ஏற்கனவே அதே திட்டத்திலேயே இருந்த சாந்திமதிக்கு, செல்வநாயகியின் பிடிவாதம் வியப்பாக இருந்தது!

அத்தோடு, தந்தையும்தான் ஏன் மறுக்க வேண்டும்?

ஏற்கனவே ஒத்துக் கொள்ளப்பட்ட பயணம்தானே?

ஆனால், ஊரறியக் காதல், கல்யாணம் என்று அறிவித்த பிறகு, இருவருமாகச் சேர்ந்து சென்னைக்குச் செல்வதும், அங்கேயே சாந்திமதி தங்குவதும் சரியில்லை. எல்லோரும் தப்பாகப் பேசுவார்கள் என்று வாசவன் தொடங்கவும்தான். இதை எதிர் பார்த்தே செல்வநாயகி கூறியிருப்பது அவளுடைய வருங்கால மருமகளுக்குப் புரிந்தது!

ஆனால், சீக்கிரமே திருமணத்தை நடத்த விரும்புவதால், சாந்திமதிக்குக் கல்யாணச் சேலை, நகை என்று மாப்பிள்ளை

வீட்டார் வாங்க வேண்டியவற்றை, அவளுக்குப் பிடித்த மாதிரி யாகப் பார்த்து வாங்க, வருங்கால மருமகள் கட்டாயம் வந்தே தீர வேண்டும் என்று எதிர்கால மாமியாராகச் சற்று அதிகாரமாகவே பேசி, சின்னவளின் வரவை உறுதி செய்து கொண்டாள் மனோகர னுடைய அன்னை!

கூடவே, பெண்ணைப் பெற்றவருக்கும் ஆறுதலாக, "துணி மணி வாங்கியதும், நானும் சாந்திமதியும் கிராமத்துக்குப் போய்விடுவோம் சம்பந்தி. அதனால் நீங்கள் பயப்படுகிற மாதிரி வீண் வம்புப் பேச்சுக்கும் இடமிராது! கவலைப்படாமல், "நீங்கள் திருமண வேலைகளைப் பாருங்கள்., என் மருமகளை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று சிரித்துப் பேசியே விரும் பியதை நடத்திக் கொண்டாள்.

நினைத்ததை அப்படியே சாதிக்கும் செல்வநாயகியின் மன உறுதி, சாந்திமதி அறிந்ததே என்றாலும், அவளது இந்தப் பிடிவாதம், அவளுக்கு ஆச்சரியமாகவே இருந்தது!

ஆனால், பரசுராமனின் நம்பாத வெறித்த பார்வைகள் நினைவு வர, மனோகரன் இல்லாமல் தனியாகத் தந்தை வீட்டில் இருப்ப தற்கு, அவளுக்குமே விருப்பம் இல்லைதான்!

அவன் வந்து என்ன விஷயம் என்று கேட்டால், எப்படிப் பொய் சொல்வது?

அவனோ, மெய்யையே நம்பாதவன்!

எப்படியோ, காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக, அந்த நேரத்தில், அவளைக் காப்பதற்காக மனோகரன் சொன்ன கதைக்கு ஏற்ப எல்லாமே, அதது உரிய நேரத்தில், உரிய விதமாக, நடந்து, மற்ற எல்லோரையும் நம்பவும் வைத்துவிட்டது!

லேகாவின் வரவேற்புக்கு மனோகரன் வந்தது, காதல் மீறி, சாந்திமதியைப் பார்க்க வந்ததாக, அவன் தாயே சொல்லும்படி ஆயிற்று! எதற்காகவோ அவன் விசிலடித்தது, அந்தக் கற் பனையை, முழு நிஜமாகவும் மாற்றிவிட்டது!

பரசு வீட்டுத் தோட்டத்தில் பரசு அவளிடம் பேசியது, அதன் பின் அவளிடம் மனோகரன் ஆத்திரப்பட்டது எல்லாம் வேறு விதமாக மாறி, மனோகரனும் அவளுமாகத் தனிமையில் ஆசைப் பேச்சு பேசியதாக, எல்லோருமே நினைக்குமாறு முடிந்தது!

இப்போதும், பரசு இருக்கும் ஊரில் இருக்கப் பயம் என்று அவளுக்கு வாய்விட்டுச் சொல்லக் கூட முடியாத நிலையில், வருங் கால மாமியாரின் விருப்பத்துக்கு பணிந்து சென்னைக்குச் செல்வ தாக, அதுவும் அவளுக்குச் சாதகமாகவே இயல்பாகவே நடந்தது!

நல்ல வேளையாக, இதில் செல்வநாயகிக்கும் கெட்ட பெயர் இல்லை! வருங்கால மருமகளின் மேல் உள்ள பிரியத்தினால் தானே, அவளுக்குப் பிடித்ததாக, அவளே பார்த்து வாங்க வேண் டும் என்கிறாள்! இது போற்றப்பட வேண்டிய விஷயம்தானே?

"மாமியார் விஷயத்திலும், நீ கொடுத்து வைத்தவள்தான், கண்ணு!" என்று சுமதியே மன மகிழ்ந்து போனாளே!

இதே போல, எல்லாமே இனி நல்லபடியாகவே நடக்கும் என்ற நம்பிக்கைக் கூட, இப்போது காந்திமதிக்கு வந்துவிட்டது!

இப்படி, எப்படியோ சமாளித்துத் தப்பிப்பது போல அல்லாமல், நிஜமான நல்லபடியாக! இன்னொரு இனிமையான குழப்பமும் அவளுக்கு இருந்தது!

'உன்னை அனுப்பி விட்டு ஒரு நாளைக்குள் தவித்துப் போனது அம்மாவும்தான்' என்று மனோகரன் சொன்னானே! அப்படியானால், தவித்துப் போன இன்னோர் ஆள் அவன் என்றுதானே, பொருள்?

சாந்திமதி இல்லாமல், அவன் தவித்தானா?

அல்லது, அப்படிச் சொன்னால், அவளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தானா?

பின்னதுதான் சரியென்று தோன்றிய போதும், சாந்திமதியின் மனம், அப்படி ஒன்றும் சோர்ந்து விடவில்லை!

இதையும், அவளது மகிழ்ச்சிக்காகத்தானே சொன்னான்?

இன்றைய நிலையில் இதுவே பெரிது!

காதல், ஆசை என்று சொல்லியிருந்தால்தான் பொய்யாகத் தோன்றியிருக்கும்!

அதற்கு உரிய விதத்தில் பதில் தர முடியாத நிலையில், அவளுக்கு, அது பெரும் மனச்சுமையாகவும் ஆகியிருக்கும்!

இது, எவ்வளவோ மேல்!

சென்னை வாழ்வு, புதிய விதமாக மகிழ்ச்சியாக இருந்தது!

வீடு, அக்கம் பக்கம் எல்லோரிடமும், திருமண விஷயம் பரப்பப்பட்டிருந்தது!

எல்லோரும் வீட்டுக்கு வந்தும், அங்கங்கே பார்க்கையிலும் வாழ்த்த, அதுவும் மனதிற்கு இதமாகவே இருந்தது!

இத்தனை பேருடைய வாழ்த்து வீண் போகுமா, என்ன?

அவள் சந்தோஷமாகத்தான் வாழப் போகிறாள்!

பெண் குழந்தைக்காக செல்வநாயகி எவ்வளவு ஏங்கியிருக் கிறாள் என்பது, சாந்திமதிக்கு அவள் பார்த்துப் பார்த்து ஆடையும் அணிகலன்களுமாக வாங்கிய விதத்தில் தெரிந்தது!

"எதற்கு அத்தை, இவ்வளவு?" என்று சாந்திமதியே சொல்லும் அளவுக்கு வாங்கினாள்.

அப்போதுதான், எட்டு மாதக் கருவாக, தான் இழந்த பெண் குழந்தையைப் பற்றி, செல்வநாயகி அவளுக்குச் சொன்னாள்.

"அப்போதெல்லாம், உடம்பில் ஓர் அலட்சியம் இருந்ததும்மா! மனோ சற்று இலகுவாகப் பிறந்துவிட்டதால், கருவுறுவதும் பிள்ளை பெறுவதும் என்ன பெரிய காரியம் என்று அலட்சியமாக நினைப்பேன். அதற்காகத் தாம், தூம் என்று குதித்தது இல்லை என்றாலும், உரிய கவனத்தோடு நடந்து கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும்! துடைத்து சரியாக ஈரம் காயாத தரையில் வேகமாக வந்து, விழுந்து... கருப்பையும் சேதமாகிவிட்டது! அதன் பிறகு, கொஞ்ச காலம் கழித்து லேகா பிறந்தாள். ஆனால், அவளைத் தொடக்கூட, அவள் அம்மா விடமாட்டாள். வயிறு எரிவேனாம். பிள்ளைக்கு ஆகாதாம்! அப்போதே நினைத்து விட்டேன். இனி நமக்கு மருமகள்தான் எல்லாம் என்று..." என்று ஆசையாகக் கன்னத்தை வருடி விட்ட கையைப் பற்றிக் கண்களில் ஒத்திக் கொண்டாள் சாந்திமதி!

அம்மா கூறியதையும் விட அருமையான மாமியார்!

இந்தத் தாயின் மனம் குளிரும் வண்ணம் வாழ்க்கை நடத்த வேண்டும்!

சாந்திமதி தனக்குள் உறுதி எடுத்துக் கொள்ளும் போதே, மனம் கலையும்படியும் நேர்ந்தது!

பழைய கதையின் தொடர்பாகவோ, என்னவோ, லேகாவைப் பற்றி, செல்வநாயகி விசாரித்தாள்.

"இப்போது அவள் எப்படி இருக்கிறாள்! சிறு வயதில், ரொம்ப மோசமாக, எல்லோரையும் உதாசீனம் செய்வாள். பேச்சும், மிகவும் தரக்குறைவாக இருக்கும்! பொறுக்க முடியாமல் ஒருதரம் பெற்றவர்களிடம் அவளைத் திருத்தச் சொல்லிவிட்டு, நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டேன்! இடையில் கஷ்டப்பட்டதால் மாறியிருக்கிறாளா? ஆனால், இப்போதும் அதே அலறல்தான் என்று, மனோ சொன்னான்! வரவேற்புக்கு உன் வீட்டிலும் எல்லோரும் போயிருந்தீர்களாமே! மாமியார், மாமனாரிடமாவது, மரியாதையாக நடக்கிறாளா?" என்று வினவினாள் பெரியவள்.

இதற்கு என்னவென்று பதில் சொல்வது?

'அலறினாள்' என்று சொன்ன மனோகரன், அவள் யாரிடம், எப்படி அலறினாள் என்பதில் எந்த அளவுக்குச் சொல்லியிருக்கக் கூடும்?

ஒன்றும் தெரியாமல், சாந்திமதி என்ன விவரம் தருவது?

அதுவும், அவளே அல்லவா, பலிக்கடாவாக நின்று தவித்தாள்!

ஆனால் இவ்வளவு பிரியமாக இருக்கும் செல்வநாயகியிடம், ரொம்ப மறைக்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை!

எனவே, "என்னைத்தான் தப்பாக நினைத்துக் கத்தினாள், அத்தை. அது பொறுக்காமல் உங்கள் பிள்ளை அவளை அதட்டி, என்னிடம் மரியாதையோடு நடக்கச் சொன்ன பிறகும், அதே ரீதியில் ஏதோ சொன்னாளா, டக்கென்று வருங்கால மனைவி

என்று ஏதோ சொல்லிவிட்டார்! அப்புறம் சரியாகிவிட்டது!" என்று ஒரு மாதிரி உண்மையை கூறி முடித்தாள் அவள்.

லேகா தப்பாக எண்ணி அவளிடம் கத்தியதும், மனோகரன் அவளை அடக்கியதும், மணக்கப் போகவதாக அறிவித்ததும், எல்லாம் மெய்தானே?

நல்ல வேளையாக செல்வநாயகி இன்னொரு கேள்வியும் கேட்டிருந்ததால், அவசரமாக "பெரியவர்கள் என்கிற மரியாதை இல்லாமல்தான் பேசுகிறாள்: பரசுவுடைய அம்மா கூட, என் அம்மாவிடம் மிகவும் வருத்தப்பட்டார்கள்!" என்று அதற்குரிய பதிலையும் சாந்திமதி தெரிவிக்க முடிந்தது!

உச்சுக் கொட்டி, "ஐயோ பாவம், அந்தக் குடும்பம்!" என்றதோடு, நல்ல வேளையாக செல்வநாயகி லேகா பேச்சை விட்டுவிட, சாந்திமதிக்கு ஒழுங்காக மூச்சு வந்தது!

மற்றபடி, உன்னை எதற்காகத் தப்பாக நினைத்தாள் என்று, அதைப் பற்றி செல்வநாயகி பேசிட்டிருந்தால், அவளுக்கு மிகவும் சங்கடமாகிப் போயிருக்கும்!

பொதுவாக, செல்வநாயகி தூண்டித் துருவுகிறவள் அல்ல என்பதால், அந்தப் பேச்சும் அத்தோடு முடிந்தது!

அப்போதைக்கு அந்தப் பேச்சு முடிந்து விட்ட போதும், இரவின் தனிமையில், சாந்திமதிக்கு அன்றைய நினைவு மீண்டும் வந்தது!

அத்தனை பேர் நடுவில், கட்டிய கணவனையே, அந்த லேகா எவ்வளவு கேவலமாகப் பேசினாள்? இத்தனைக்கும், புது மணப் பெண்!

ஒரு வேளை, சாந்திமதியின் நினைவில், பரசு அவளிடம் சரியாக நடந்து கொள்ளாமல் இருந்து, அந்தக் கோதிப்பில், லேகா அப்படிப் பேசியிருப்பாளோ?

அப்படியானால், அவர்கள் இருவருமே பாவம்தான்!

ஆனால் அந்த ஒரு பார்வை! அதிலிருந்த திருப்தி?

எவ்வளவோ யோசித்தும் மனம் சரியென்று ஒப்புக் கொள்ளும்படியான விளக்கம் எதையும் சாந்திமதியால் கண்டுபிடிக்க முடியவில்லை!

அலுத்துப் போய், உண்மை என்னவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும் என்று முடித்தாள் அவள்!

பரசுவை மறப்பது கடினம்தான்! ஆனால், வெகுவாக முயன்றேனும் அவனை மறந்துதானே ஆக வேண்டும்!

முயன்றால் முடியாதது இல்லை!

மனோகரன் சிரிக்கப் பேசுகிறவன்! பிரியம் உள்ளவன்! அவளது நிலை அறிந்தும் அன்பு காட்டுகிறவன்!

காலையில் எழுந்தால், அலுவலுக்காகக் கிளம்பும் வரை, தாயாருடனும், அவளுடனும் ஏதாவது கிண்டலடித்துக் கொண்டு சுற்றுவான். மணி ஒன்பதானால், அடடா, கிளம்பி விடுவானே என்று இருக்கும்!

அந்த அளவுக்குச் சிரிக்க வைப்பான்!

அவன் கிளம்பிய பிறகு, வீட்டுப் பணிகளை முடித்துக் கொண்டு, வருங்கால மாமியாரும், மருமகளும் 'ஷாப்பிங்' போவார்கள்.

மாலையில் மனோகரன் வரும்போது, செல்வநாயகியின் விருப்பப்படி, புதிதாக வாங்கியதில் எதையாவது அணிந்து கொண்டு சாந்திமதி அழகாக நிற்பாள்.

மீண்டும் கேலியும், கிண்டலுமாக நேரம் கழியும்!

"கடித்துச் சாப்பிட்டு விடலாம் போல அலங்காரம் பண்ணி வைத்திருக்கிறீர்கள்! மாமனார் இன்னமும் கல்யாணத் தேதி குறித்து அனுப்ப மாட்டேன் என்கிறாரே!" என்று நிஜம் போலப் புலம்பு வான் அவன்! "நீங்களானால், அவரது மன அமைதிக்காக ஊருக்குப் போகிறேன் என்கிறீர்கள்! நான் தனியாக இங்கே கிடக்க வேண்டும்!" என்று அவன் சொன்னபோது, சாந்திமதிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது!

ஆனால், சம்பந்திக்குக் கொடுத்த வாக்கை மீறி, அவரைச் சங்கடப்படுத்தக் கூடாது என்று கிராமத்துக்குச் செல்வதில், செல்வ நாயகி பிடிவாதமாகவே இருந்து விட்டாள்.

"நீதான், முன்பே வாராவாரம் வந்தவன் ஆயிற்றே! இப்போதும், வந்து பார்த்துக் கொள்!" என்று மகனிடமும் சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டாள்!

அவர்கள் கிராமத்துக்கு கிளம்பிச் சென்றது ஒரு புதன்கிழமை தான். ஆனால், தாயார் சொன்னதை வேத வாக்காக எடுத்துக் கொண் டவன் போல், அந்த சனிக்கிழமையன்றே, மனோகரன் வந்து விட்டான்.

கேலியாகச் சிரித்துவிட்டு, ஏதோ வேலை போல, செல்வ நாயகி உள்ளே சென்று விட்டாள்.

வந்தவன் அவளை விழுங்குவது போலப் பார்க்க, அவளாலும் பார்வையை அகற்ற முடியவில்லை!

என்னவோ, மாதக் கணக்கில் மனோகரனைப் பாராதிருந்து பார்த்தது போன்ற உணர்வில், தன்னை மீறி, அவள் கண்களில் நீர் மல்கியது!

அருகில் வந்து, "சீக்கிரம் துடைத்துக் கொள், பெண்ணே! அப்புறம், என் மருமகளை அழ விட்டாயா என்று அம்மா என் காதைத் திருகுவதில், என் கண்ணிலும் நீர் வந்துவிடும்! ஆனால், அது வலியால் வந்த கண்ணீராக இருக்கும்!" என்று கேலி போலச் சொல்லிவிட்டு, மென்மையாக அவள் கண்களைத் துடைத்து விட்டான் அவன்!

செல்வநாயகி பிடிவாதமாகக் கிளம்பி வந்தது ஏன் என்று, இருவருக்குமே, இப்போது நன்றாகப் புரிந்தது!

ஏதோ சூழ்நிலையில் திடுமென நிச்சயமான திருமணம்! பிரிவு அன்பை வளர்க்கும்., வலுப்படுத்தும் என்று திட்டமிட்டிருக்கிறாள்! அதே சமயம், சம்பந்திக்கு மரியாதை கொடுத்த மாதிரியும் ஆயிற்று!

அவள் கன்னத்தை மெல்லத் தட்டிவிட்டு, "அம்மா உள்ளே பெரிய ஆள், சாந்தி! தனியாகக் கிடந்தால்தான் திருமணத்திற்குச் சம்மதிப்பேன் என்றுதான், அவர்கள் கிராமத்தில் வசிக்கத் தொடங்கியதே! இப்போதும், நீங்கள் இருவரும் இல்லாமல், அங்கே வீட்டுக்குள் செல்லவே பிடிக்கவில்லை, தெரியுமா?" என்றான் அவன், குரலில் சிறு கரகரப்புடன்!

ஆச்சரியமாய் அவளுக்கும், மனோகரன் வந்த பிறகுதான், இந்த வீட்டுக்குப் பழைய அழகு வந்தது போலத் தோன்றிற்று!

முன்பு கூட, அவன் வந்த போதெல்லாம், காரணமே தெரியாமல் கூட, மகிழ்ச்சியாகத்தானே இருந்தது! அப்போதே, அவனிடம் ஏதோ ஓர் ஈர்ப்பு இருக்கத்தான் செய்ததா?

மறுநாள், அவனோடு சேர்ந்து, அந்த அழகு போய்விட்டது போலத் தோன்றவும், அப்படித்தான் என்று மனது அடித்துச் சொன்னது!

அவள் ஏக்கத்துடன் நிற்பதைப் பார்த்துவிட்டு, செல்வநாயகி, வாசவனுடன் பேசினாள்!

அடுத்த வாரம் மனோகரன் வந்த போது தோட்டத்துக்குள் சுற்றும் போது, அனேகமாக இருவர் கைகளும் கோத்திருப்பது இயல்பாயிற்று!

ஒட்டி அமர்வதும்!

ஒருநாள் அவள் பதிலுக்கு ஏதோ கிண்டலடித்தாள் என்று சிரித்து விட்டு, அவளது உள்ளங்கையில் மனோகரன் முத்தமிட, அன்று முழுவதும் அவளுக்குக் கை குறுகுறுத்துக் கொண்டே இருந்தது!

இதுவே, கன்னத்தில் முத்தமிட்டால் எப்படி இருக்கும்?

நம்பிக்கை என்று மாமனார் கையைக் கட்டிப் போட்டிருப்பதாக, அடிக்கடி அவன் குறைப்பட்ட போது, அதே போலவே அவளுக்குமே தோன்றிற்று!

திருமணத்தில் இயல்பான எதிர்பார்ப்பை அவன் காட்ட, அவளுள்ளும் ஏற்ற பதில் தோன்றத் தொடங்கியிருந்தது!

ஒருநாள் சுந்தரி போன் செய்து, திருமணத்துக்கு நாள் குறிப்பது, மற்றும் மண வேலைகள் பற்றிப் பேசுவதற்காகத் தந்தை சோமசுந்தரத்தைப் பார்க்க சென்றிருப்பதாகச் சொன்னாள்!

சோமசுந்தரம்! பரசுராமனுடைய தந்தை!

குப்பென்று முகம் வியர்த்துப் போயிற்று சாந்திமதிக்கு!

மறப்பது கடினம் என்று நினைத்த பரசுராமனை அடியோடு எப்படி மறந்தாள்?

எப்படி என்று மனம் குழம்பிய போதும், ஒரு புறம் அவளுக்கு ஆறுதலாகவும் இருந்தது!

எப்படியும், இனிமேல், பரசுராமனின் வாழ்வு, லேகாவோடு!

அதே போல, சாந்திமதியின் உலகம் மனோகரனைச் சுற்றிச் சுழலப் போகிறது!

அவனுக்கும், இவளுக்கும் ஒன்றுமே இருக்கப் போவது இல்லை!

எனவே, மறக்க முடிவது, எவ்வளவோ நல்லதே!

அப்படியிருக்க, ஏன், எப்படி என்று தேவையற்ற விஷயங்களை இழுத்துப் போட்டு யோசித்து, மனம் குழம்புவது செய்யக் கூடாத மடத்தனம் அல்லவா?

இப்போதைய இந்த இனிய நிலையில், எதற்காக வீண் குழப்பம்?

பரசுராமனைப் பற்றி நினைக்காதிருந்தால், குழப்பத்துக்கே வழியில்லை!

எனவே, அவனைப் பற்றி நினைக்கக் கூடாது!

ஆனால், பரசுராமனோ, அழையா விருந்தாளியாக, அவர்கள் தங்கியிருந்த கிராமத்து வீட்டுக்கு வந்து நின்றான்!

முக்கிய வேலை தொடர்பாகப் பக்கத்து டவுனுக்கு வந்ததாகவும், இவ்வளவு தூரம் வந்துவிட்டு, வெளியே தங்கினால் பெரிய மாமியார் வருத்தப்பட்டுக் கொள்வார்களே என்று அவள் வீட்டிலேயே தங்க முடிவு செய்ததாகவும் கூறிக் கொண்டு!



13

பெட்டியோடு வீட்டுக்கு வந்து நின்று இப்படிச் சொல்லுகிறவனை, இல்லை வெளியே போ என்றா சொல்ல முடியும்?

அதுவும், அந்த நேரத்தில்?

என்ன இருந்தாலும், குடும்பத்தில் ஒரு மருமகன் உறவு! புது மாப்பிள்ளை வேறு!

அப்போதும், உட்காரச் சொல்லிக் காபி கொடுத்துவிட்டு, "திருமணமாகி முதல் தடவையாக வரும்போது, கணவன், மனைவி இருவருமாகச் சேர்ந்து வருவது மரபு..." என்று சன்னச் சிரிப்புடன் செல்வநாயகி பொதுப்படையாகச் சொல்வது போல ஒரு முயற்சி செய்யாமல் விடவில்லை!

ஆனால், அதை எதிர்பார்த்தவன் போல மிகவும் அவசரமாக, "அப்படி நீங்கள் நினைத்தால், ஒரு போன் அடித்தால், லேகா உடனே காரில் கிளம்பி நள்ளிரவுக்குள் வந்து விடுவாள். உடன் கூட்டிச் செல்லுமாறு, மாமனார் சொல்லத்தான் செய்தார்! ஆனால், அவள் பேசத் தெரியாமல் பேசி விடுவாளோ என்று எனக்குத்தான் கொஞ்சம் தயக்கமாக இருந்தது! ஆனால், நீர் அடித்து, நீர் விலகவா செய்யும்? வேண்டுமானால் வரச் சொல்லவா?" என்று, இடுப்புப் பட்டையிலிருந்து, தன் செல்லை எடுக்கலானான் பரசுராமன்.

"இல்லையில்லை! அதற்கு அவசியம் இல்லை! ஒரு சமூகப் பழக்கத்துக்காக, லேகா இவ்வளவு தூரம் பயணம் செய்யத் தேவையில்லை! உங்களுக்கு முன்புறம் ஓர் அறையைத் தயார் பண்ணச் சொல்லுகிறேன். வேலை முடிந்து செல்லும் வரை தங்கிக் கொள்ளுங்கள்" என்று செல்வநாயகி சொல்லி முடித்த பின்னரும்,

கையில் இருந்த செல்போனை இரண்டு தரம் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே வைத்தான் பரசுராமன்.

பார்த்தானா? காட்டினானா?

பளபளவென்ற புதிய செல்போன்! பலவிதமான சிறப்பான செயல்பாட்டுத் திறன்களைக் கொண்டது! விலை கிட்டத்தட்ட அரை லட்சம் என்று, செல்வநாயகியோடு கடைகளில் சுற்றியபோது பார்த்த நினைவு, சாந்திமதிக்கு!

புதிதாகப் பணம் வந்திருக்கிறதல்லவா! இதெல்லாம் வாங்கா விட்டால் எப்படி என்று சிறு நகைப்புடன் நினைத்தாள் அவள்!

அதோடு, பரசு இவ்வளவு பேசியது கூட, அவளுக்கு ஆச் சரியமாக இருந்தது!

சகவாச தோஷமாக இருக்கக் கூடும்!

தொழிலில் மாமனாரும், வீட்டில் மனைவியும் வளர்த்து விட்டிருப்பார்கள்.

இது, பூவுடன் சேர்ந்த நாரா அல்லது பன்றியுடன் சேர்ந்த கன்றா என்று பொறுத்திருந்து பார்த்துதான் சொல்ல முடியும் என்று எண்ணினாள் அவள்!

எண்ணிவிட்டு, இவ்வளவு மட்டமாக யோசிக்கிறோமே என்று கொஞ்சம் குன்றியும் போனாள்!

ஆனால் தன் பேச்சு வன்மையை இன்னும் கொஞ்சம் காட்டு கிறவனாக, "என்ன சாந்தி, பேச்சையே காணோம்? என்னைக் கண் டதும், மித மிஞ்சிய மகிழ்ச்சியில் என்ன பேசுவது என்றே தெரிய வில்லையோ?" என்று கேட்ட பரசுராமன், செல்வநாயகியிடம்

திரும்பி, "நான் என்றால், சாந்திமதிக்கு ரொம்ப அ... அன்பு!" என்று முடித்தான்.

கன்று போல அல்லவா தெரிகிறது என்று, உள்ளூரக் கலங்கினாள் சாந்திமதி!

ஆனால், கலக்கத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று தீர்மானித்து, "ஆமாம் அத்தை. நாங்கள் நாலைந்து குடும்பங்கள், அங்கே மிகவும் பிரியமாக பழகுவோம்! பெரியவர்கள், சின்னவர்கள் எல்லோரும் ஒரே குடும்பம் போல இருப்போம்!" என்று விளக்கினாள்.

"அதிலும் சாந்தி மீது எங்கள் வீட்டில் தனிப் பிரியம்!...."

அவன் மேலே தொடருமுன், "எல்லா வீட்டினருக்கும், எங்கள் சாந்திமதி ரொம்பவே அருமையாகத்தான் தெரிவாள். அவளது குணம் அப்படி! அதுவும் பெண் குழந்தைகள் இல்லாத வீடு என்றால், கேட்கவே வேண்டாம்! உங்களுக்குப் பயண அலுப்பு இருக்கும். வேலைக்காரன் வந்து, உங்களை அறைக்குக் கூட்டிப் போவான். குளித்துவிட்டு ஓய்வு எடுங்கள். சாப்பிடும் நேரம், ஆள் அனுப்புகிறேன் சாந்தி, நீ போய்ச் சமையல்காரம்மாவிடம் ஒரு விருந்தாளிக்குச் சாப்பாடு வேண்டும் என்று சொல்லம்மா! நேரமாகிறது!" என்றாள் செல்வநாயகி.

நல்லதாயிற்று என்று, அங்கிருந்து செல்லத் திரும்பிய அவளை, "ஒரு நிமிஷம், சாந்தி!" என்று நிறுத்தினான், பரசுராமன். "உனக்குப் பிடிக்கும் என்று, அத்தை கோமளவிலாஸ் அல்வா கொடுத்து அனுப்பினார்கள்! நீ அதைக் கட்டாயம் சாப்பிட வேண்டுமாம்! உன் வாயில் ஊட்டி விட்டாவது, நீ அல்வா சாப்பிடுவதைப் பார்த்து விட்டுத்தான் திரும்பி வர வேண்டும், என்னிடம் சொல்லி

அனுப்பினார்கள்!'' என்று, அல்வாப் பாக்கெட்டை எடுத்தான் அவன்!

பன்றியின் குணம் வந்துவிட்டதாக அல்லவா தெரிகிறது என்று ரொம்பவே கலங்கிப் போனாள் சாந்திமதி.

இதை செல்வநாயகியென்ன, யாரானாலும் தப்பாகத்தான் எடுக்கத் தோன்றும்?

ஆனால் ''சாந்திம்மாவின் குணத்துக்கும், நீங்கள் உடன் பிறப் பாக வளர்ந்த விதத்துக்கும், அல்வாவை அவள் வாயில் ஊட்டி விட்டால் கூட, இங்கே யாரும் தப்பாக நினைக்க மாட்டோம். ஆனால், லேகா அப்படி அல்ல! பேச்சு வாக்கில், நீங்கள் சொன்னது அவள் காதில் விழுந்தால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள், தம்பி!'' என்று செல்வநாயகி கூற, பரசுவின் முகம்தான் வெளுத்துப் போயிற்று!

மனைவியிடம் இவ்வளவு பயம் இருக்கும்போது, இங்கே எதற்கு, இந்தச் சில்லுண்டித் தனம்? சிறு வயதில் இருந்து அவள் அறிந்த சாது பரசுவுக்குள், இந்த வக்கிரம் எப்படி வந்தது என்று எண்ணமிடும்போதே, வரவேற்பின் போது, அவன் பார்த்த அந்த ஒரு பார்வை சாந்திமதிக்கு நினைவு வந்தது!

அப்படியானால், பரசுராமனுக்குள் இன்னொரு பரசுவும் இருக்கிறானா?

இதில், இன்னொரு நல்ல விளைவாக, பரசுராமன் பேசப் பேசப் பெருகிய அவளது பயமும் மெல்ல மறைந்தது! மனைவி பேரைச் சொன்னால், ஆள் மிரண்டு போகிறான்! அந்த இன்னொரு பரசுராமன் தலையைத் தூக்கினால், அவனது மனைவி பயத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!

எல்லாவற்றையும் விட, அவனது இவ்வளவு பேச்சுக்கும், செல்வநாயகி அவளைத் தவறாக நினைக்கவே இல்லை! அது எவ்வளவு பெரிய விஷயம்!

டவுன் வேலையோடு சேர்த்து, இன்னொரு காரியமாகவும், பரசுராமன் அங்கே வந்திருந்தான்.

அது, மனோகரனிடம் ஒரு சிபாரிசு செய்யும்படி, செல்வநாயகி யிடம் கேட்பதற்காகவே!

மனோகரன் கொடுத்திருந்த 'டீலர்ஷிப்'பை இடையில் உடைக்க முடியாதவாறு நிரந்தரம் ஆக்கக் கேட்டு வந்திருந்தான் அவன்.

இரவு உணவின் போது அவன் அந்தப் பேச்சைத் தொடங் கினான்.

"என்ன திடீரென்று?" என்று வினவினாள் செல்வநாயகி. "எப்போதுமே, ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்வதுதானே பழக்கம்?"

"மற்றவர்களோடு எப்படி வைத்துக் கொண்டாலும், உறவினர் களோடு கூடக் கொஞ்சம் அதிகமான நல்லிணக்கத்தோடு நடந்து கொள்ளலாம் அல்லவா?"

"நீங்கள் உள்ளே வருவதற்கு முன்பாகவே, லேகா குடும்பம் எங்களுக்குச் சொந்தம்தான். ஆனால், அப்போது, இப்படியெல் லாம் கேட்டதில்லையே!"

"தட்டில் சோறு விழுந்தால், உப்பு, புளி அதிகமா என்று கூட கவனியாமல் சத்தமின்றிச் சாப்பிட்டு விட்டுப் போகிறவர், மாமனார்! இப்போதுதான், புதுக் கருத்துகளை ஏற்பது என்று தொடங்கியிருப்பதால்..."

"உங்கள் ஏற்பாடு என்று சொல்லுங்கள்!"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்! பணம் என்றால், அது நிலைத்திருப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் தானே?" என்று பரசுராமன் சொன்னதுமே, சாந்திமதிக்கு காரணம் புரிந்து போயிற்று!

வரவேற்பின்போது, லேகாவை மிரட்டி அடக்குவதற்காக மனோகரன் பயன்படுத்திய ஆயுதம்! அந்த ஆயுதம் அழியும் வரை, லேகா வீட்டு வருமானத்துக்கு எப்போதும், ஓர் ஆபத்து உண்டுதானே? பணத்துக்காக மணந்தவன், அப்படி நேர விட்டு விடுவானா?

ஆனால், "தொழில் விஷயம் எல்லாம், மனோகரனிடம்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்! நான் இதிலெல்லாம் தலையிடுவது இல்லை!" என்று முடித்துவிட்டாள் செல்வநாயகி.

பரசு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, சாந்திமதியைப் பார்த்தான். "ஏன் சாந்தி, நாம் இவ்வளவு பழகியதற்கு, எனக்காக நீ ஒரு வார்த்தை கேட்க மாட்டாயா?" என்று கேட்டான்.

மறுபடியும் அதிகப் பழக்கம் பற்றிய ஒரு குறிப்பு! இவனிடம் பொறுமை பயனில்லை! திருப்பிக் கொடுத்தால்தான் வாயை மூடுவான்!

இந்த மாதிரி விஷமத்தனமாகப் பேசினால், அதே போல, நான் லேகாவிடம் வத்தி வைத்துவிடுவேன் என்று மிரட்ட வேண்டியது தான்!

வரவேற்பன்று அவளது பேச்சு, ஒரு சின்ன எடுத்துக்காட்டு என்றால், மணமாகி இத்தனை நாளில், பரசு எத்தனை கண்டிருப்பான்?

அதை நினைவுபடுத்தினால், கல்லைக் கண்ட நாய் போல வாலைச் சுருட்டிக் கொண்டு அடங்கிப் போய்விடுவான்.

செல்வநாயகி, லேகாவின் பேச்சை எடுத்ததும் மிரளவில்லையா? அதே போல!

இந்த யோசனையினூடே, சாந்திமதிக்கு உள்ளே இன்னொன்று உறுத்தியது!

பரசுவைப் பற்றி, பன்றி, நாய் என்று கண்ட கேவலமான உதா ரணங்களால் எவ்வளவு இலகுவாக முடிகிறது.

அதிலும் இந்த முறை நினைத்த 'நாய்' அவசியமே இல்லை! முதல் 'பன்றி'க்குமே தேவை இல்லைதான்!

'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்பது போல, அவன் தனக்கு இல்லாமல் போனதால்தான் இப்படித் தோன்றுகிறதா? அப்படி யானால், அவளும்தானே மோசம்!

ஆனால், மனம் குன்றும்போதே, அப்படி ஒன்றும் இல்லை என்றும், சாந்திமதிக்குத் தோன்றிவிட்டது!

வரவேற்பன்று, அவள் சொல்வதைப் புரிந்து கொள்ளாமல் பரசு பேசியவரையிலும், அவனைப் பற்றிக் குறைவாக ஒரு தர மேனும் நினைத்திருப்பாளா?

கிடையாதே! தன்னை விடவும் பாவம் என்ற பரிதாபம்தானே!

இப்போது, அவன் நடந்து கொள்கிற முறை இப்படி! அதனால், அவளும் இவ்வளவு மோசமாக நினைக்க வேண்டியிருக்கிறது!

தான் இறங்கி விடவில்லை என்ற திருப்தியோடு, பரசுராமனால் ஏற்படக் கூடிய பிரச்சினைக்கு ஒரு முடிவும் கண்டு விட்ட நிம்மதி யும், சாந்திமதிக்கு உண்டாயிற்று!

மிரட்டல் என்பது மோசமான விஷயம்தான்!

ஆனால், 'விஷத்துக்கு விஷம்தான் முறிவு' என்று மனோகரன் அன்று சொன்னதுபோல, இப்போதும் மிரட்டலுக்கும், மிரட்டல் தான் மருந்து!

மருந்தாகப் போகிற மிரட்டலில் தப்பே கிடையாது!

இனி, இந்தப் பதில் மிரட்டலை எப்படி பரசுவுக்குத் தெரிவிப்பது என்று சாந்திமதி யோசித்தாள்.

அவனை போலக் குண்டூசிக் குத்தல்களாய் ஜாடைமாடைப் பேச்சுகளால் சிறுகச் சிறுக மிரட்ட அவளுக்கு மனமில்லை! செல்வ நாயகியின் முன்னிலையில் அது சிரமமும் கூட.

இப்படியோ, அப்படியோ என்று சந்தேகப் படவே இடமில் லாதவாறு, வெளிப்படையாக ஒரே போடு! அத்தோடு, பிரச்சினை முடிந்தே போக வேண்டும்!

நீ இங்கே குழப்பம் செய்தால் அப்படியே லேகாவிடம் போய் வத்தி வைத்துவிடுவேன். ஜாக்கிரதை என்று நேரடி எச்சரிக்கை! அதற்கு மேல், பரசு வாலைச் சுருட்டிக் கொண்டு போய்விடுவான்!

ஐயோ, மறுபடியும் நாய்!

யோசனையில் மூழ்கி அவள் பேசாதிருக்கவும், பரசுராமனுக்கு ஆத்திரம் வந்தது! "என்ன சாந்தி, இங்கே வந்து ஊமையாகி விட்டாயே? அல்லது... ஒரு வேளை, என் முகத்தைப் பார்த்தால் பேச்சு மறந்து போகிறதா?" என்று மீண்டும் கொடுக்கைக் காட்டி னான் பரசு.

"அப்படி இல்லை! இந்த வீட்டில், எல்லோரும் அவரவருக்குத் தெரிந்ததைத்தான் செய்கிறார்கள்! மனோ தொழிலை! அத்தை,

வீட்டு நிர்வாகத்தை! தெரியாததில் யாருமே தலையிடுவது இல்லை! என் பயிற்சி அத்தையிடம்தான்! அதனால் தொழில் பற்றி, நானும் பேசுவதற்கு இல்லை என்றே சொல்ல வேண்டியிருக் கிறதே, பாவம் என்று நினைத்தேன்!'' என்றாள் சாந்திமதி, தெளி வாக!

அவளைத் தட்டிக் கொடுப்பது போல முறுவலித்து விட்டு, ''இதையேதான் நானும் சொன்னேன். உங்களுக்கு வேண்டியதை, நீங்கள் மனோவிடம் கேட்டுக் கொள்ளுங்கள்!'' என்று செல்வ நாயகி எழுந்து கை கழுவப் போனாள்.

சாந்திமதியும் அவளைத் தொடர முனைந்த போது, ''அத்தை உன்னிடம் தனியே சொல்லும்படி, சில விஷயம் சொல்லியனுப்பி னார்கள். ஓர் ஐந்து நிமிஷம் உட்கார்ந்தாயானால் அந்தக் கடமையை முடித்து விடுவேன்!'' என்றான் பரசு.

திரும்பிப் பார்த்த செல்வநாயகி பேசாமல் செல்ல, ''அதை நாளைக் காலையில் கேட்டுக் கொள்கிறேன், பரசு! இப்போது எனக்குத் தூக்கம் வருகிறது!'' என்று விட்டுக் கையைக் கழுவ 'வாஷ்பேசி'னுக்குச் சென்றாள் சாந்திமதி!

இப்போதும், செல்வநாயகியின் நடை தளரவில்லை! கை கழுவி முடித்திருந்தவள், பழைய அதே வேகத்தில், முன் கூடத்தை நோக்கிச் சென்றாள்.

முகம் கன்றிய பரசுராமன், சட்டென எழுந்து, சாந்திமதியின் பின்னே தானும் கைகழுவச் சென்றான்.

அவள் திரும்பிச் செல்லும் வழியை மறைத்தாற் போல நின்று, ''என்னிடம் பேசக் கூட, இப்போது உனக்கு நேரம் இல்லையா?

ஆனால், இன்று இரவு முடிவதற்குள் நான் உன்னிடம் தனியே பேசியே ஆக வேண்டும்! அதைத் தவிர்த்தாயோ, அப்புறம், உனக்குத்தான் ஆபத்து! ரொம்பவும் கேவலப்பட்டு போவாய்! சொல்லி விட்டேன்! அதற்கு மேல், உன் இஷ்டம்!" என்று அடிக் குரலில் எச்சரித்தான்!

சாந்திமதி ஒரு கணம் நிதானித்தாள்!

அவளுக்கும்தான் அவனிடம் பேச வேண்டியிருக்கிறது! அதாவது, அவனை மிரட்ட வேண்டியிருக்கிறது! செல்வநாயகியோ, மற்ற வேலையாட்களோ கேட்காதபடித்தான் அவளும் உச்சியில் ஓங்கி அறைய வேண்டியிருந்தது!

பகல் வெளிச்சத்தில் அது முடியாத காரியம்!

செல்வநாயகி ஓய்வெடுக்கும் போது கூட, வேலையாட்கள் அங்குமிங்கும் நடமாடக் கூடும்!

அவர்கள் பார்க்கப் பேசுவது, பரசுவுக்கே சாதகமாக ஆகலாம்!

"சரி" என்றாள் சுருக்கமாக.

பரசுராமனின் கண்கள் பளபளத்தன. "ஆள் அரவம் அடங்கியதும், சுமார் பதினொன்றைக்கு, நான் இருக்கும் அறைக்கு வந்துவிடு. அறைக்கதவைத் திறந்தே வைத்திருக்கிறேன்!" என்றான் வேகமாக.

சட்டென ஒரெட்டு பின்னடைந்தாள் சாந்திமதி.

இவன் இருக்கும் அறைக்குள் தனியே போவதா?

அருவருப்பை அடக்கிக் கொண்டு, " இல்லை, ஓர் ஆண் மட்டுமாக இருக்கும் அறைக்குள், நான் தனியே வருவதற்கில்லை!

அறையை விட்டு வெளியே வந்தால், முற்றத்தின் சுற்றுக்கட்டுத் தாழ்வாரம் இருக்கும். அதில் உங்கள் அறையை ஒட்டிய பகுதியில் நில்லுங்கள். நான் வருகிறேன்! இப்போது வழியை விடுங்கள்!" என்றவள், அவன் நகர்ந்ததும், வேகமாக அங்கிருந்து செல்ல, அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

என் அறைக்கு நீ தனியே வரமாட்டாயா?

அன்றைக்கு ஆசைப்பட்ட மாதிரி இருவருக்கும் கல்யாணம் நடந்திருந்தால், அறையை விட்டு என்னை வெளியே போக விட்டிருப்பாயாடீ? இருக்கட்டும்.. பார்த்துக் கொள்கிறேன் என்று மனதுள் ஆத்திரத்துடன் சூளுரைத்தான்!

உடனேயே முகத்தைச் சீர்படுத்திக் கொண்டு கையைக் கழுவியவன், சாதுவாய் கூடத்துக்குச் சென்றான்.

பதினொன்றரை மணி இருளில், பரசு இருந்த அறையை நோக்கிச் செல்லுகையில், சாந்திமதிக்கு உள்ளூர உதைப்புதான்!

முன்னே பின்னே செத்திருந்தால்தானே சுடுகாடு தெரியும் என்பது போல், மர்மக் கதை நாயகி போல, கம்பீரமாகச் செல்லும் அளவுக்கு, அவளுக்குத் தைரியம் இருக்கவில்லை!

ஆனால், பதற்றத்தைப் பரசுவிடம் காட்டுவது நல்லதில்லை என்பதாலேயே, வெகு சிரமப்பட்டுத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு சென்றாள் அவள்.

எங்கோ கார் செல்லும் ஓசை கேட்டது! இது மனோகரனின் காராக இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்! பரசுவின் பிரச்சனையை, அவன் கவனித்துக் கொள்வானே!

முற்றத்துத் தூண் ஒன்றின் அருகே பரசு நின்றிருந்தான்.

சாந்திமதியைக் கண்டதும், அவன் வேகமாக அருகில் வரவும், அவள் பின்னடைந்தாள்.

"பக்கத்தில் வா, சாந்தி. அப்போதுதான் மெல்லப் பேசுவது இருவருக்கும் கேட்கும்!" என்று மீண்டும் அவளை அணுக முயன்றான் அவன்.

மறுபடியும் பின்னடைந்து, "இல்லை. அங்கேயே நின்று பேசுங்கள். இப்போது யாரும் விழித்திருக்க மாட்டார்கள் என்பதோடு, இங்கே யாரும் வரவும் மாட்டார்கள்," என்றாள் அவள், சற்றுத் திடமான குரலில்!

"ஓகோ! இதற்கு மேல் அருகில் வந்தால், உன் கற்புக்குப் பங்கம் வந்துவிடுமாக்கும்! ஒருவனைக் காதலித்து, இன்னொருவனை மணக்கத் தயாரானவளுக்குக் கற்பு வேறா?" என்றான் பரசு ஏளனமாக.

அவனது பேச்சு தந்த சினம், பயத்தை விரட்ட, "ஒருத்தியை நேசிப்பதாகச் சொல்லிக் கொண்டே, இன்னொருத்தியை மணந்த உங்களுக்கு, அதைப் பற்றிப் பேச எந்தத் தகுதியும் இல்லை!" என்று சுள்ளென்று கொடுத்தவள் தொடர்ந்து, "ஆனால், கற்பு பற்றிப் பேசுவதற்காக நீங்கள் என்னை வரச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன்! சொல்லுங்கள், என்ன விஷயம்?" என்று, சற்று அதட்டியே கேட்டாள்.

"என்ன அதட்டல் பலமாக இருக்கிறது? பணக்காரன் மனைவி ஆகப் போகிற அகங்காரமா? அதெல்லாம் ஒன்றும் நடக்கப் போவதில்லை! முதலில், அதைத் தெரிந்து கொள்!" என்றான் பரசு!

''நீங்கள் சொல்ல எண்ணியது இதுதான் என்றால், முதலில் நான் சொல்வதைக் கேட்டு விடுங்கள். இங்கு வந்ததில் இருந்து, நீங்கள் நடந்து கொள்ளும் முறை சரியில்லை, பரசு! தப்பாக ஊகிக்கும்படியாக, விஷமமாகவே பேசுகிறீர்கள். இதை உடனே நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால்....'' என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு ''இல்லாவிட்டால், பெரிய மகாராணி என்ன செய்து விடுவாயாம்?'' என்று எகத்தாளமாகக் கேட்டான் அவன்.

பெரிய மூச்செடுத்துக் கொண்டு, ''இங்கிருந்து நேரே லேகா விடம் சென்று, பலதும் சொல்லிவிடுவேன்!'' என்றாள் சாந்தி மதி.

''என்னவென்று சொல்லுவாய்? எனக்கு உன் மேல் ஆசை என்றா? நாம் இருவரும் பழைய காதலர்கள் என்றா? துணிந்து அப்படிச் சொல்லி விடுவாயா? சொல்லுவாய்? ஏண்டீ?'' என்று கெக்கலித்தான் பரசு.

''ஏன் சொல்ல மாட்டேன்? நிச்சயமாகச் சொல்லுவேன். நீங்கள் தப்பான எண்ணத்தோடு இங்கே வந்து, என்னைத் தொல்லை செய்வதாகச் சொல்லுவேன். அப்புறம், அவள் எவ்வளவு கேவல மாகப் பேசுவாள் என்று யோசித்துப் பார்த்துவிட்டு, அப்புறம் பேசுங்கள்!'' என்றபோது, அவளுக்கு மூச்சு வாங்கியது.

இவனை மிரட்ட, என்னவெல்லாம் சொல்ல வேண்டியிருக் கிறது!

ஆனால், அவள் சொன்ன எதிலும் மிரளாமல், பரசு சிரித்தான்!

''ஆக இவ்வளவுதானா உன் மிரட்டலா?''

''எல்லாம் இது போதும், உங்கள் மனைவி மாதக் கணக்கில் கர்ண கடூரமாகச் சங்கீதம் பாடுவதற்கு!'' என்றாள் அவள், முயன்று வருவித்த ஏளனக் குரலில்!

ஏனெனில், பரசு சற்றும் கலங்காதது, அவளை உள்ளூரக் கலங்கடித்துக் கொண்டிருந்தது!

''அப்படிப் பாடுவதற்கு, முதலில் உன்னை நம்ப வேண்டுமே!''

''எல்லாம் நம்புவாள்!''

''நிச்சயமாக நம்ப மாட்டாள்! ஏனென்றால் அதற்குள், நான் உன்னை ஊரறியக் கேவலப்படுத்தி விடுவேன்! செல்வநாயகி சொன்னால், அது வேறு விஷயம்! ஆனால், ஒரு கேவலப்பட்ட யவ் சொல்வதை நம்புவதற்கு, என் மனைவி என்ன முட்டாளா? அதற்கும் மேலாகக் கொஞ்சம் சந்தேகம் இருந்தாலும், படுக்கை யில் நான் அதைச் சரிப்படுத்திக் கொள்ளுவேன்!'' என்று பரசு வெளிப் படையாகச் சொன்னபோது, சாந்திமதி மெய்யாகவே அயர்ந்து போனாள்.

அவளது மிரட்டலின் சக்தி இவ்வளவுதானா? கடவுளே!

இதற்கு மேல் என்ன செய்வது என்று திகைத்தாள்!

அதன் பிறகே, பரசு சொன்ன 'ஊரறியக் கேவலப்படுத்தி விடு வேன்' நினைவு கூர, கவலையுடன் இருளை ஊருடுவி அவனைப் பார்க்க முயன்றாள்!

வரி வடிவில் அவளது முயற்சி புரிந்து, அவன் சிரித்தான்.

''இப்போது, நான் சொல்வதைக் கேட்டுக் கொள்! அங்கே மதுரையில், உன் அப்பன், என் அப்பனைக் கூட்டிக் கொண்டு

கல்யாணக் காரியம் பார்க்க அலைகிறார்! முதலில் உன் கல்யாணம் என்கிற அந்தக் கருமாதியை நிறுத்த வேண்டும்! உடனே!"

"ஐயோ, முடியாது!"

"அந்த முடியாதுக்கே இடம் கிடையாது! நீயாக நிறுத்தினால், பலர் அறியக் கேவலப்பட மாட்டாய்! அல்லது, நம் கதை செல்வ நாயகி அம்மாளிடம் போகும்! அப்புறம், அசிங்கப்பட்டு வெளி யேறுவாய்! எப்படியும் கல்யாணம் நின்றாக வேண்டும்!" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் பரசுராமன்!

"ஏ ஏன்?" என்றவளுக்குத் தொண்டையிலிருந்து சத்தமே வரவில்லை!

இவன் இப்படிப் பேசுவான் என்று, அவள் நினைக்கவில்லையே! திருமணம் நின்று போனால், அப்புறம், அவள் எப்படி உயிரோடு இருப்பாள்?

"ஏன் என்றால், நீ இன்னொருவன் கூட, வாழக் கூடாது! நான் ஆசைப்பட்ட பெண் நீ! உன்னை, இன்னொருத்தன் தொடுவதை, என்னால் எப்படி சகிக்க முடியும்? சொல்லு! எப்படி முடியும்?" என்று, ஆத்திரமாகக் கேட்டான் அவன்.

"என்ன பேச்சு இது, பரசு? நான் உங்களுக்கு வேண்டாம் என்று வேறு மணம் புரிந்து கொண்டீர்கள்? இன்னொருவரோடும் வாழக் கூடாது என்றால் அதை என்ன மாதிரி என்று... சொல் வது?"

"ஆமாம்! அப்படித்தான்! வைக்கோல் போர் நாய் மாதிரியே தான்! வைக்கோல் போர் நாய் என்றே சொல்லிக் கொள்ளேன்!

எனக்கு அக்கறையில்லை! நான் அப்படியேதான்! அப்படி உனக்கு வேணும் என்றால், வேற ஊரில் வேலை தேடிக்கொள். நான் அவ்வப்போது வந்து போகிறேன்!"

அடப்பாவி!

சட்டென்று, சாந்திமதியின் உடம்பெல்லாம் தீயாய் எரிந்தது!

கொதிப்புடன், "எதற்காக? செருப்படி வாங்கவா?" என்று, ப யக்கவே கேட்டுவிட்டாள் அவள்!

"திமிராடி? நீ அவமானப்பட வேண்டாம் என்று இவ்வளவு சொல்கிறேன்! செருப்பால் அடிப்பாயா? என் பெரிய மாமியாரி டம் உன் காதல் கதையைச் சொன்னால், நீ சொல்லுகிற செருப் படியை, உனக்கே கொடுத்து அனுப்புவார்கள் சொல்லவா? சொல்லி விடவா?"

வெறி கொண்டவன் போலப் பரசு பேசுவதாக, சாந்திமதிக்குத் தோன்றியது.

இவனிடம் கோபம் காட்டினால், வெறி அதிகம்தான் ஆகும்!

"நீங்கள் நல்லபடியாகத்தான் இருக்கிறீர்கள், பரசு? என் வாழ்வை அழிப்பானேன்? யோசித்துப் பாருங்கள் பரசு!" என்று பணிந்து கேட்டுப் பார்த்தாள் அவள்.

"நல்லபடியாகவா? ஒரு பிசாசின் இஷ்டத்துக்கு ஆடிக் கொண்டு... அதன் பேர் நல்ல வாழ்வா? அதை விடு, உன் வாழ்வு அழிவானேன்? நான்தான் வெளியூரில் வேலை தேடு., உன் கூடவும் இருக்கிறேன் என்..."

சகிக்க மாட்டாமல், "சீ நாயே! உன் நாற்ற வாயை மூடிக் கொண்டு வெளியே போடா!" என்று சாந்திமதி சீறினாள்!

"ஏய்! என்னையா வெளியே போகச் சொல்லுகிறாய்? இந்த நேரத்தில், நான் இருக்கும் இடத்துக்கு வந்து என்னோடு இளித்துக் கொண்டிருக்கிறாய்! ஒரு சத்தம் போட்டு எல்லோரையும் கூப்பிட்டால், வீட்டில் அத்தனை பேரும் உன் மேல் காறித் துப்ப மாட்டார்களா? இப்போது நான் என்ன செய்..."

அப்போது பரசுராமன் என்ன செய்யப் போவதாக இருந்தான் என்று யாருக்குமே தெரியாமலே போய்விட்டது.

ஏனெனில், ஒரு ஸ்விச்சைத் தட்டும் ஒலியுடன், கூடத்தில் ஒளி வெள்ளம் பெருக, "நான் வருவதாக சாந்திமதிக்குத் தகவல் கொடுத்திருந்தேன்! என்னை வரவேற்பதாக, என் வருங்கால மனைவியான அவள் இங்கே வந்து காத்திருந்தாள். இதில், அவள் மேல் காறித் துப்ப என்ன இருக்கிறது, மிஸ்டர் பரசுராமன்?" என்று கேட்டவாறு, உள்ளே வந்து நின்றான் மனோகரன்!

"மனோ!" என்று அவன் அருகே பாய்ந்து சென்றுவிட்டு, திகைப்பும், தவிப்புமாகக் கலங்கித் தயங்கி நின்றவளைச் சட்டென இழுத்து அணைத்தான் அவன்!

"மனோ!" என்று மீண்டும் அழைத்தவளின் கரங்களும், அவனைச் சுற்றி இறுக்கமாகப் பின்னிப் பிணைந்து கொண்டன!

காற்றுப் புக இடமில்லாமல் நின்ற இருவரையும் ஆத்திரத்துடன் நோக்கி, "மனோகரன், நான் சொல்வதை முதலில் கேட்டுவிட்டு அப்புறமாக, முடிந்தால்... இந்தக் கண்ணராவியை எல்லாம்

வைத்துக் கொள்ளுங்கள்! இந்த சாந்திமதி, என்னைக் காதலித்தவள். இன்றைக்கு இந்த நேரத்தில், வெட்கமில்லாமல் இவள் என்னிடம் வந்து... என்ன மாதிரியெல்லாம் கேவலமா...'' என்றவன், ''ஆ!'' என்று தாடையைப் பிடித்துக் கொண்டு விழித்தான்!

ஒரு கை முஷ்டியை மூடித் திறந்து, ''இத்தோடாவாவது வாயை மூடிக் கொண்டு போவாயா, அல்லது..?'' என்று கேள்வியாய் நிறுத்தினான் மனோகரன்.

திகைப்பு மாறி, ''ஏய், என்னையா அடித்தாய்...'' என்று மறுபடியும் தொடங்கியவன், மனோகரன் கை விரல்களை மீண்டும் முஷ்டியாக மூடவும் அவசரமாகப் பின்னடைந்து, ''நான்... நான், இ... இதை உன் அம்மாவிடம் சொ... சொல்லி... சொல்லிக் கல்யாணத்தை நிறுத்திக் கொள்கிறே...ன்'' என்று வீராப்பை விடாமல் சொல்லி முடித்தான் பரசு!

''முதலில் உன் வாயைக் கிழிக்கிறேன்...'' என்று மனோகரன் சாந்திமதியை விட்டுவிட்டு, ஓர் எட்டு எடுத்து வைக்கையில், ''வேண்டாம்! வேண்டாம், மனோம்மா. அவனை அடிப்பதற்காக, மருமகளைக் கீழே விழ விட்டுவிடாதே! அவளுக்கு இன்று ஏகப்பட்ட அதிர்ச்சி! பிரமாதமாய் சமாளித்தாள்தான்! போடா வெளியே என்று கடைசியாக விரட்டுகிற வரை உறுதியாக நின்றவள், உன்னைக் கண்டதும் குழைந்து விட்டாள், பார்! இப்போது, அவளைத் தனியாக விடாதே!'' என்றபடி, பக்கத்து அறையில் இருந்து, வெளியே வந்த செல்வநாயகியைப் பார்த்ததும், எல்லோருக்குமே மயக்கம் போடாத குறைதான்!

''கண்டேன் சீதையை'' என்கிற விதமாக, முதலிலேயே 'மருமகள்' என்றுவிட்டதால் சாந்திமதியும், தாயை அறிந்தவன் என்பதால் மனோகரனும் விரைவிலேயே சுதாரித்துக் கொண் டனர்.

ஆனால், பரசுதான் காற்றுப் போன பலூனாய், அப்படியே சொத்தென்றாகி விட்டான்!

அவனது பெரிய துருப்புச் சீட்டு அணுகுண்டு புஸ்வாணமாய் ஒன்றுமில்லாமல் போய்விட, சாந்திமதி இல்லாவிட்டாலும் பரவா யில்லை., உருப்படியாகத் தப்பினால் போதும் என்ற நிலையில் இருந்தான் அவன்!

அவனது நிலை புரிந்து, "இனிமேல் சாந்திமதி பக்கம் திரும்பக் கூடாது. திரும்பினால், மற்ற நஷ்டங்களோடு, 'டீலர்ஷிப்'பும் போய்விடும்'' என்ற எச்சரிக்கையுடன், அவனை அறைக்குள் அனுப்பி, கதவை வெளிப்புறமாகத் தாளிடச் சொன்னாள் செல்வ நாயகி.

"காலையில் முதல் வேலையாக அவனை மதுரைக்கு அனுப்பி வைத்துவிடு, மனோ! அவனை அடித்துத் துவைக்க வேண்டும் என்று உன் மனம் துடிப்பது எனக்குப் புரிகிறது! ஆனால், என்ன இருந்தாலும், உறவுக்காரன்! லேகா கணவர்..." என்ற போது குறுக் கிட்டு, "அதற்காகவும் உதைக்க வேண்டும்!" என்றான் மனோகரன் சினத்துடன்!

''இல்லைப்பா! அதற்காக, அவன் மீது பரிதாபம்தான் பட வேண்டும்! ஆப்பு அசைத்த குரங்கு மாதிரி அவதிப் பட்டுக் கொண்டு இருப்பவனை நாம் வேறு அடிப்பானேன்? ஒரு தரம்

பிழைத்துப் போ என விட்டுவிடு!'' அந்தப் பெரியவள் கூறியது அறைக்கு உள்ளேயும் கேட்டிருக்கும்!

எப்படியோ அங்கிருந்து சத்தமே இல்லை! சத்தம் கொடுக்கத் தைரியம் இல்லாமல், கப்சிப்பென்று இருந்தான் பரசு!

ஆனால், குரங்குமா என்று நினைத்தாள் சாந்திமதி!

மூவருமாக, செல்வநாயகியின் அறையில் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

''எனக்கு நேரடியாகவே பரசு விஷயம் எல்லாம் தெரியும்! ஆனால் உங்களுக்கு எப்படி?'' என்று கேட்டான் மகன்!

சாந்திமதியும் ஆவலாக நோக்க, அவளிடம் முறுவலித்து விட்டு, செல்வநாயகி தொடங்கினாள். ''உனக்கு ஊரில் பிரச்சினை இருப்பதாக எனக்கு முதலில் இருந்தே சந்தேகம்! மற்றபடி, என்னதான் சம்பளம் என்றாலும் இவ்வளவு படிப்புத் தகுதியை வைத்துக் கொண்டு, இந்தக் கிராமத்தில் வந்து புதைந்து கிடக்க, யாரால் முடியும்? இவள் இங்கிருந்த மூன்று வாரங்களில் இந்தச் செல்லத்தின் குணம் புரிபட்டுவிட, இவளை ரொம்பவும் பிடித்துப் போயிற்று?

''நீ வேறு, ஓடி ஓடி வந்தாயா? மருமகள் என்று நிச்சயமாகவே தீர்மானித்து விட்டேன். ஆனால், ஒளிவு மறைவில் எனக்கு நம்பிக்கை இல்லை! மறைப்பது என்றைக்கேனும் பூதமாகக் கிளம்பி விடக் கூடும்!... இப்போது வந்தான் பார்த்தாயா? இதைப் போல.''

''இருவருமே அரைகுறையாக இருந்தீர்கள். நீ கொஞ்சம் தீவிரம் என்றாலும், சாந்தியிடம் சரியான எதிரொலி இல்லை!

"வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேனா, சென்னைக்கு போனதும், ஊருக்கு அனுப்பி வைத்தேன்! பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு வருவாள் என்ற நம்பிக்கைதான்!

''அப்புறம் நீ! என்ன மாதிரி விஷயம் என்றாலும், அன்பு ஜெயிக்கும் என்றுதான் லேகா வீட்டு வரவேற்பு பற்றி நினைவு படுத்தினேன்.''

''அந்த அளவுக்கு, உடனே திருமணம் என்று வந்தது, எனக்கே ஆச்சரியம்தான்! ஆனால், முதல் தகவல் எனக்கு லேகா குடும்பத்திடமிருந்து, ரொம்ப சீக்கிரமே வந்துவிட்டது! வாழ்த்தாக அல்ல. கெடுப்பதற்காகச் செய்ததுதான்! பிறகுதான், இவ்வளவுக்கு வந்த பிறகு, சாந்திம்மாவை மதுரையில், அந்த மனிதர்கள் அருகில் தொடர்ந்து இருக்க விடுவது நல்லதல்ல என்று நினைத்தேன்! எப்போது, காப்பாற்றிக் கைப்பிடிக்க முடிவு செய்துவிட்டாயோ, அப்புறம் மனோ, நீ மாற மாட்டாய் என்று எனக்கு நிச்சயம்!

''ஆனால், சாந்தியை, அங்கே குழப்பி விடக்கூடாதே! எனவே அவளைச் சென்னைக்கும், பிறகு இங்கேயும் அழைத்து வந்து... உன்னையும் பின்னோடு ஓடி வரவழைத்து இருவருக்கும் வேகம் கொடுத்து...'' என்று முடிக்காமல் சிரித்தாள் அன்னை!

''ஹூம்! அறியாப் பிள்ளை! என்னைப் போய் ஆட்டிப் படைத்திருக்கிறீர்கள்!'' என்றான் மகன்.

''பின்னே? சம்சார சாகரம் என்றால் சும்மாவா?'' என்றாள் அன்னை விளையாட்டாக.

''இன்று எப்படி அத்தை? பரசுதான் பிரச்சினை என்று உங்களுக்குத் தெரியாதே! எப்படி சந்தேகம் வந்தது?'' என்று ஆவலாகக் கேட்டாள் சாந்திமதி.

''இன்று அவன் டவுனில் ஏதோ வேலை என்று வந்ததாகச் சொன்னதே முழுப்பொய்! மதுரை பஸ்சில் இருந்து இறங்கி, இங்கே நேரே வந்ததை, நம் சாமுண்டி சொல்லிவிட்டான்! பார்த்தானாம்! மறை பொருளாக, அதுவும் சாந்தியை மிரட்டுவது போலப் பேசிக் கொண்டு... ஏதோ சிலுமிஷம் செய்யும் திட்டத்தோடு வந்திருக்கிறான் என்று புரிந்தது! தொழில் விஷயம் என்று லேகா குடும்பத்திடம் கதை! என்ன செய்ய எத்தனிக்கிறான் என்று புரியவில்லை! அதுதான், அவனுக்கு அந்த அறையைக் கொடுத்தேன். நான் இருந்தேனே, அந்த அறையிலிருந்து அவனைக் கண்காணிப்பது எளிது! என்ன இருந்தாலும், ஆண்! இரண்டு பேருமாகக் கூட சமாளிக்க முடியுமா, என்னவோ என்று, துப்பாக்கியும் வைத்திருந்தேன்!'' என்று முடித்தாள் செல்வநாயகி.

கண் கலங்கிவிட்டது சாந்திமதிக்கு!

''என் மேல் சந்தேகம் வரவில்லையா, அத்தை? நானும் அவனோடு சேர்ந்து ஏதாவது பண்ணக் கூடுமோ என்று தோன்றக் கூட இல்லையா?'' என்று குரல் கலங்கக் கேட்டாள் அவள்!

''என்னவோ கெட்டிக்காரி என்றீர்கள்! மக்கு மாதிரி, உளறுவதைப் பாருங்கள்!'' என்றான் மனோகரன்!

''உளறல்தான்! மற்றபடி, என்னையே, நான் சந்தேகிக்க முடியுமா சொல்லு!'' என்று செல்வநாயகி கூறவும், தன்னை மீறிக் கண்ணீர் பெருகியது சின்னவளுக்கு!

அவளை லேசாக உலுக்கி, முதுகைத் தட்டிக் கொடுத்தான் அவளுடைய வருங்காலக் கணவன்! "அம்மா, பயந்து விடாதீர்கள்! இது ஆனந்தக் கண்ணீர்தான்! ஆனால் என் மதியில்லா மதியே, அதற்கும், கோட்டா முடிந்து விட்டது! நிறுத்து!" என்றான் அதிகாரமாக!

"அவளை அதட்டாதே. முதலில், நீ எப்படி சரியான சமயத்தில் வந்து சேர்ந்தாய்? அதைச் சொல்லு!" என்று தன் பங்குக்குத் தாயார் விசாரித்தாள்!

"சாந்தி என்ன நினைத்திருந்தாலும் சரிதான். பரசுவுக்குள் கொஞ்சம் மோசமான ஓர் ஆள் இருப்பதாக எனக்கு எப்போதுமே சந்தேகம்! இரட்டை வேடம்! அதனால், அவனது போக்குவரத்தைக் கண்காணிக்க மதுரையில் ஆள் வைத்திருந்தேன். இன்று இந்தப் பக்கம் பஸ்சில் கிளம்பியிருக்கிறான் என்றதுமே, நானும் புறப்பட்டு விட்டேன்!" என்றான் அவன்!

"அந்தக் கார் சத்தம்..." என்று இழுத்தாள் சாந்திமதி. அவனாக இருக்கக் கூடாதா என்று நினைத்தாளே!

"நானேதான்! அம்மா, நீங்கள் இவ்வளவு அறிந்திருப்பது தெரியாமல், உங்களைக் குழப்பாமலே விஷயத்தை முடிக்க வேண்டும் என்று, காரைத் தள்ளி நிறுத்திவிட்டு வந்தேன்!" என்றான் மனோகரன்.

"ரொம்பத்தான் கெட்டிக்காரன்! என்று பெருமையாகவே இயம்பிய செல்வநாயகி. "சரி, இருவரும் கிளம்புங்கள்." என்று சின்னவர்களைக் கிளப்பினாள்.

"இப்போதே, மணி பன்னிரண்டரை! உங்களுக்குப் பேசிக் கொண்டிருக்க இன்னும் அவகாசம், பத்தே நிமிஷம்! அப்புறம் அவரவர் அறைகளுக்குப் போய்விட வேண்டும்!" என்று முறுவலோடு உத்திரவிட்டுவிட்டு, ஒரு "குட்நைட்!"டோடு இருவரையும் அனுப்பி வைத்தாள்!

சாந்திமதியின் அறை நோக்கி நடந்த போது, சற்று நேரம் அவர்களிடையே பேச்சே இல்லை!

முதலில் அமைதியைக் கலைத்து, "அத்தைக்கு ரொம்ப ஆசை போல, நீங்கள் அத்தையின் கணக்குகளுக்காக ஓடி, ஓடி வந்ததைக் கூட, எனக்காக என்று, எண்ணிவிட்டார்கள்!" என்றாள் சாந்திமதி.

"இல்லையே! நான் உனக்காகத்தான் வந்தேன்! அப்படியே கணக்கையும் பார்த்துவிடலாம் என்று எண்ணினேன்! அதுவும், ஒரு தடவைதான்! அப்புறம் உனக்காக மட்டும்தான், பெண்ணே! நினைவிருக்கிறதா? உன்னிடம் எதிரொலியே இல்லாமல் எப்படிப் போகும் என்று யோசித்ததாகச் சொன்னேன்! வேறு ஆசை இல்லாவிட்டால், என்னிடம் மயங்கியே ஆக வேண்டும் என்று நினைத்து அல்ல! என் மனதில் இவ்வளவு ஆசை இருக்கும்போது, எதிரொலி இல்லாமல் எப்படிப் போகும் என்றுதான்!" என்றான் மனோகரன்!

அப்போதே அவ்வளவா என்று யோசிக்கும் போதே, தன்னிடமும், அடியோடு ஒன்றுமில்லாமல் போகவில்லை என்றே சாந்திமதிக்கு இப்போது தோன்றியது!

மற்றபடி, அந்த மோனியை அழைத்து வந்து, அவளுக்காக உருகுவது போல அவன் நடித்ததைப் புரிந்து கொண்ட போது அவ்வளவு குதூகலம் ஏன் வந்தது?

அதை மனோகரனிடம் சொல்லி விட்டு, "ஆனால், அப்போது வேறு மாயை மனதை மறைத்திருந்ததால், சரியாகப் புரிந்து கொள் ளத் தெரியவில்லை!" என்றாள் உள்ளூரக் குன்றலுடன்!

பிறகு, "பரசு இவ்வளவு மோசம் என்று நான் நினைத்ததே இல்லை, மனோ!" என்று வருத்தத்தினால் கம்மிய குரலில் கூறி னாள் அவள்.

"இவ்வளவு கேவலத்துக்கு இறங்கியிருக்க மாட்டான்! ஆனால், பன்றியோடு சேர்ந்திருக்கிறான் அல்லவா?" என்று மனோகரன் கூறவும், அவளுக்கு ஆச்சரியமாகிப் போயிற்று!

"என்ன? அம்மையார் நயனங்கள், சாசர் போல, இப்படி விரிகின்றன?!"

"நானும் இப்படித்தான் நினைத்தேன்! இரண்டு முறை, நாய் என்று கூட நினைத்தேன்!"

"சத்தமாகச் சொல்லாதே! இழிவுபடுத்தியதாக, உன்மேல் நாய் கூட வழக்குத் தொடர்ந்து விடப் போகிறது! அம்மா வேறு, ஏதோ அசைத்த குரங்கு என்றார்களில்லை? முழு மிருக ஜாதி!" என்றான் அவன்.

முறுவலித்த போதும், முழுமையாகச் சிரிக்க முடியவில்லை அவளால்!

புருவம் சுருக்கி யோசித்தவள் மனோகரனைப் பார்த்து, "நான் பரசுவை நிஜமாகவே காதலித்ததாக நினைத்தேன், மனோ!

இவ்வளவு சீக்கிரம் அது மறைந்து போனால், எப்படி?'' என்றாள் குழம்பிய குரலில்.

''அது காதலே இல்லை, சாந்தி! அந்த வயதில், பக்கத்தில் இருக்கிற ஆணைக் கண்டதும் ஏற்படுகிற ஈர்ப்பு! அவ்வளவே!'' என்றான் அவன்.

அவள் முகம் தெளியவில்லை.

''இது மட்டும் நிலைக்கும் என்று எப்படி நம்புவது?''

கண் சுருக்கிப் பார்த்துவிட்டு, ''நம்பித்தான் ஆக வேண்டும், தாயே! இல்லாவிட்டால், மாமனாரின் நம்பிக்கை என்னமாயும் போகட்டும் என்று உன் அறைக்குள் வந்து நம்ப வைப்பதில் ஈடு பட்டு விடுவேன்!'' என்று குரலில் சிறு அழுத்தத்துடன் கூறினான் மனோகரன்!

''ஏ, சீ...'' என்று வாய் சொல்ல, சிவந்துவிட்ட முகத்தை அவன் தோளில் புதைத்து அழுத்திக் கொண்டாள் சாந்திமதி!


''பரசுவோடு இப்படி நினைக்க, இருக்கத் தோன்றுமா?''

நிமிர்ந்து, ''சீச்சீ! நல்ல நேரத்தில் என்ன பேச்சு? அவன் ஒரு மாதிரிச் சொன்ன போது, எவ்வளவு அருவருப்பாக இருந்தது, தெரியுமா?'' என்று கேட்டாள் அவள்.

முறுவலித்து, ''பின்னே?'' என்று கேள்வி கேட்டான் அவன்!

யோசனை மாறி, சாந்திமதியின் முகம் மலர்ந்து விகாசிக்கவும், சட்டென்று அவளைப் பற்றி அணைத்தான்!

சில வினாடிகளில் அவனே அவளை விடுவித்து, "மாமனார் நம்பிக்கை" என்று உதட்டைப் பிதுக்க, கலீரென்ற சிரிப்புடன் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டாள், அவள்!


பார்த்த
இடத்தில்
எல்லாம்
ரமணிசந்திரன்